தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 279.

# எண்ணெய் வாகடம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2000 விலை ரூ. 40-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 279.

# எண்ணெய் வாகடம்

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்:

டாக்டர் **ச. அரங்கராசன்**, பி. ஐ. எம்.,

உதவி மருத்துவ அலுவலர்,

ஆரம்ப சுகாதார நிலையம், அம்மாப்பேட்டை.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

**தஞ்சாவூர்.**

2000

விலை. ரூ. **40—00**

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | எண்ணெய் வாகடம் |
| பதிப்பாசிரியர் | : | டாக்டர் ச. அரங்கராசன், பி.ஐ.எம்., |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 279 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | ஜனவரி, 2000 |
| தாள் | : | 16. 2 கி.கி. டி.என்.பி.எல். |
| நூல் அளவு | : | 24 x 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 220 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் நூலக அச்சகம் |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | ரூ. 40—00 |

# இரண்டாம் பதிப்பின் வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சை, சரசுவதி மகால் நூலகம் அரிய பன்மொழிச் சுவடிகளின் பாங்குறு கருவூலமாகத் திகழ்ந்து வருகின்றது. சுவடிகளில் இடம் பெற்றுள்ள அருமைவாய்ந்த இலக்கியங்களும் மருத்துவப்படைப்புகளும் வல்லுநர்வழிப் பதிப்பிக்கப்பெற்று வனப்புற நூலகத்தால் வெளியிடப் பெற்றும் வருகின்றன.

இவ்வெளியீட்டுப்பணியின் வரிசையில் 1989 ஆம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளியிடப்பெற்ற 'எண்ணெய் வாகடம்' என்னும் நூல் தற்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது.

மாமன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகத் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள 154ஆம் எண்ணிடப்பெற்ற ஓலைச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு பதிப்பிக்கப்பெற்ற மருத்துவ நூலாகும் இது. இந்நூலில் 173 வகையான மருத்துவ எண்ணெய்களைத் தயாரிக்கும் செய்முறைகள் கூறப்பட்டுள்ளன. இந்நூலினை மருத்துவர் திரு ச. அரங்கராசன் பதிப்பித்துள்ளார்.

இந்நூலினை இரண்டாம் பதிப்பாக வெளியிட நிதியுதவி நல்கியுள்ள மைய அரசுக்கு என்னுடைய நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

இவ்விரண்டாம்பதிப்பு நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு சாமி. சிவஞானம், எம். ஏ., அவர்களுக்கும் வெளியீட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் எனது பாராட்டுகள். நூலினைச் செப்பமுற அச்சிட்டளித்துள்ள நூலக அச்சகப் பணியாளர்களுக்கும் நூல் வெளியீட்டுப் பணிகளில் துணை நின்ற ஏனையோருக்கும் எனது பாராட்டுகள்.

இம்மருத்துவ நூல், முதற்பதிப்பில் பெற்ற வரவேற்பை இப்பதிப்பிலும் பெறும் என நம்புகின்றேன்.

முனைவர். **மூ. இராசாராம்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
22—1—2000

# பதிப்புரை

எண்ணெய் வாகடம் என்ற அரியதான சுவடி ஒன்று சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளது. இது 173 வகையான எண்ணெய்கள், நெய்கள் செய்வதைப்பற்றி விளக்கமாக எடுத்துக்கூறுகிறது. ஏனைய சித்தமருத்துவ நூல்கள் போல் அல்லாது தொடர்ச்சியாக எண்ணெய் வகைகளைப் பற்றிய செய்திகளைத்தருவது இதன் சிறப்பாகும்.

சித்தர்களின் அரிய மருத்துவத் தொண்டுக்கு இது சான்றாகும். இந்நூலில் பல்வேறு பிணிகளுக்குப் பல்வேறு எண்ணெய்களைக் கூறுகிறார்கள். மிகத் தொன்மைக் காலத்திலிருந்து எண்ணெய் எரிபொருளாகவும், உணவாக வும், அழகூட்டவும் பயன்பட்டு வந்துள்ளது. நெய் உண வாகவும், திருக்கோயில்களில் விளக்கெரிக்கவும் பயன்பட்டுள் ளது என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. நெய்தல் நிலத்தில் மீன் எண்ணெய் பயன்படுத்தப்பட்டுள் ளது. ஏனைய நிலங்களில் இவ்வெண்ணெய் பயன்படுத்தப் படவில்லை என்பதும் ஆய்வுக்குரிய ஒன்றாகும். இடைக் காலத்தில் இவ்வெண்ண்ணெயைப் பற்றிய செய்திகளே இல்லை என்பது சங்க காலத்தின் பெருமைக்கு எடுத்துக் காட்டாகும்.

இவை போன்ற செய்திகளைத் தொகுத்து இந்நூலாசிரி யர் தந்துள்ளார். 'எண்ணெய் வாகடம்' போன்றவை பிணி யுற்ற மக்களுக்குப் பலவகையிலும் பயன்படக்கூடியவை.

தஞ்சையின் சரபோசி மன்னர் ஏடுகளில்உள்ள மருந்துகளைச் செய்து மக்களுக்குத் தன்வந்திரி மகால் மூலம் தந்துதவினார். சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகளுடன் மேனாட்டு மருத்துவ முறைகளையும் ஆய்வு செய்யத் தன்வந்திரி மகால் பெரிதும் உதவியது. மேனாட்டு நூல்களையும் அவர் வாங்கி அவற்றையும் தம் நூலகத்தில் வைத்துள்ளார். சரபோசிக்கு முற்பட்ட சோழர்கள் காலத்தில் குந்தவை தன் தந்தையின் பெயரால் சுந்தரசோழன் ஆதுர சாலையை இத்தஞ்சை நகரில் ஏற்படுத்தி மக்களுக்கு அருந் தொண்டாற்றிய செய்தியைக் கல்வெட்டுகளால் அறிய முடியும்.

இத்தகைய சிறப்புகள் பொருந்திய தஞ்சையில் சரசுவதி மகால் நூலகம் "எண்ணெய் வாகடத்தை" வெளியிடுவது சிறப்பானதாகும். டாக்டர் ச. ரங்கராசன் அவர்களின் முயற்சி யால் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. அவரின் தொண்டு சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கும் தமிழின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும். இந்நூலை வாங்கி ஆதரிப்பது சித்த மருத்துவர்களின், தமிழன்பர்களின் கடமையாகும். இந் நூலின் செய்முறைகளைப் பற்றி ஆய்வு செய்யச் சித்த மருத்துவ இயக்ககம் டாம்கால் (தமிழ்நாடு மூலிகை மருந்து செய் நிலையம்) IMCOPS சித்தமருத்துவ வாரியம் போன்றவையும் தனியார் மருந்துசெய் நிலையங்களும் முன்வருதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூலை நல்ல முறையில் பதிப்புப் பணி செய்த டாக்டர் ச. அரங்கராசன், பி. ஐ. எம். அவர்களுக்கு என்னு டைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தநூல் வெளிவரத் துணைபுரிந்த நிருவாக அலுவலர் திரு சீ. கிருஷ்ணன் அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் மற்றும்

நூலகர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக. இந்நூல் வெளிவரத் துணைபுரிந்த அனைத்து ஊழியர்களுக்கும் நல்ல முறையில் அச்சுப்பணி செய்துதந்த ஓம் சக்தி அச்சகத்தாருக்கும் நன்றி உரித்தாகுக.

இதுபோன்ற அரியநூல்களை வெளியிட உதவிபுரிந்து வரும் நடுவண் அரசுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலக வளர்ச்சிக்கு அனைத்து உதவிகளையும் புரியும் தமிழக அரசுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறி மகிழ்கிறேன்.

தஞ்சாவூர்,

*19-9-1989.*

**மு. சதாசிவம்,**
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# முன்னுரை

தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையத்தில் 'எண்ணெய் வாகடம்' என்ற தலைப்பிடப்பட்ட சுவடி எண். 154, நகல் பிரதிஎண். 1218 உள்ளது. இதில் மொத்தம் 173 வகையான மருத்துவ எண்ணெய்களைத் தயாரிக்கும் செய்முறைகள் கூறப்பட்டுள்ளன. உரைநடையில் அமைந்துள்ள இந்த நூல் மருத்துவ வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் ஒன்றாகும். இதுபோன்று எண்ணெய் செய்முறைகள் கொண்ட ஏனைய சித்த மருத்துவ நூல்கள், தேரையரின் தைல வர்க்கச் சுருக்கம். 2. தன்வந்திரியின் தைலம் 500 என்பனவாகும். இவைகள் யாவும் பாடல்களால் ஆனவை. ஆனால் எண்ணெய் வாகடம் நூல், உரைநடையில் எழுதப் பட்டது ஆகும்.

இதன் நூலாசிரியர் பற்றிய எவ்விதமான விவரமும் கிடைக்கவில்லை. பல நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட செய்முறைகளின் திரட்டு என்றே கூறலாம். என்றாலும் இது எண்ணெய்களை மட்டுமே கூறும் அரிய நூலாகும்.

'வாகடம்' என்ற சொல்லுக்கு மருத்துவம் என்பதாகவே பொருள் பிற்காலத்தில் கொள்ளப்பட்டுள்ளது ஆயின் கூர்ந்து பார்க்கும் நிலையில் 'வாகடம்' என்ற சொல்லும், மருத்துவம் என்ற சொல்லின் பொருளும் ஒன்றல்ல. மருத்துவம் என்பது மனிதர்களுக்குச் செய்யப்படுவது. வாகடம் என்பது வாய்பேச இயலாத உயிர்களான விலங்குகள், பறவைகள் என்பனவற்றிற்குச் செய்யப்படும் மருத்துவம். ஆயினும் பாலவாகடம், குணவாகடம், பிள்ளைப்பிணி வாகடம், குழந்தை வாகடம் என்று சித்த மருத்துவத்தில் நூல்கள்

உள்ளனவே என்ற வினாவும் எழும்புர். தனக்குள்ள பிணியை விவரித்துக் கூறமுடியாத வகையில் குழந்தைகள் உள்ளதால், குழந்தைகளின் மருத்துவத்தையும் வாகடம் என்றே அழைத்தார்கள் போலும், அகத்தியர் குணவாகடம் மிகவும் பிற்கால நூல் என்பதற்கு இதில் ஸ்டெதாஸ்கோப் பற்றிக் கூறி உள்ளதே சான்றாகும்,

சங்க காலத்திற்கு முன்பே உணவாகவும், எரிபொருளாக வும், உடல் நலம் காக்கும் தடுப்பு சக்தியாகவும் எண்ணெய் விளங்கியது. பல்வேறு வகையான எண்ணெய்களைப்பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. விலங்குகளிலிருந்து எடுக்கப்பட்டது நெய் எனவும், தாவரத்திலிருந்து பெறப் பட்டது எண்ணெய் எனவும் கூறலாம், பிற்காலத்தில் எண்ணெய் என்ற சொல் எல்லா பொருளுக்கும் ஆகிவந்தது.

சங்க காலத்தில் பல் வகையான எண்ணெய்கள் பயன் படுத்தப்பட்டன. தலைவன் தன் தலையில் அகில் நெய் யைத் தடவினான். முதல்பேறுகொண்ட பெண்ணுக்குச் சிறுகடுகை, நெய்யுடன் கலந்து தலையில் பூசினார்கள்[1] ஊனுடன் நெய்யைச் சேர்த்து உணவாக்கினார்கள்[2]. 'நெய் பெய் தீயின் எதிர்கொண்டு' என்று கபிலர் குறுந் தொகையிலும் கூறி உள்ளார். 'நெய்யைத் தீயில் ஊற்றி வளர்ப்பது போன்று' என்பதால் நெய்யானது எரிபொருளா கப் பயன்பட்டது என்பதற்கு இப்பாடல் சிறந்த எடுத்துக் காட்டாகும். பல வகையான ஆயுதங்களைக் கூர்மையாகவும் அதன் பிடிகள் வழுவழுப்பாகவும் மென்மையாகவும் இருக்க எண்ணெய் பூசியதைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

இதுபோன்றே சங்க இலக்கியங்களில் மீன் எண்ணெ யைப்பற்றிக் கூறப்படுகின்றன. மீன் நெய்பற்றிப் பொரு

---

1 நற்றிணை—உறையூர் சாத்தனார்.

2 நெய் துழந்தட்டவிளரூன் அம்புகை—இளந்தேவன் (நற்)

நராற்றுப்படையிலும், நற்றிணையிலும் கூறப்படுகின்றது. மீன் எண்ணெயால் கிளிஞ்சல்களில் விளக்கேற்றியதையும் மீன் கொழுப்பை உருக்கி எண்ணெயாக்கிப் பின் விளக்கேற்றியதையும் பற்றிய செய்திகள் உள்ளன. ஆயினும் பதார்த்த குண சிந்தாமணி போன்ற நூல்களில் மீன் எண்ணெயைப் பற்றியும், அதன் தன்மைகளையும் பற்றிய செய்திகள் இல்லை. இதற்குக் காரணம் மீன் எண்ணெயை சுறாமீன் வகையிலிருந்துதான் எடுக்கமுடியும் என்பதும் ஒரு காரணமாகலாம். சுறாமீன் நெய்தல் நிலம் தவிர ஏனைய பகுதிகளில் காணப்படாது. இன்னும் மேனாடுகளில் காட், ஆலிபட் மீன் வகைகளிலிருந்தும், இந்தியக்கடலில் சுறாவின் ஈரலிலிருந்து மட்டுமே எண்ணெய் எடுக்கப்பட்டுப் பயன் படுத்தப்படுகிறது. திமிங்கில இனங்கள் இந்தியக் கடற் பகுதிகளில் அரிதாக உள்ளன என்பதும் அவைகள் பற்றிய இலக்கியச் சான்றுகளும் அருகியே உள்ளன என்பதும் கடல்வளம் பற்றி அறிந்தோர்க்குத் தெரியும்.

ஆனமங்கலம் செப்பேட்டில் மீரத்தைலம் பற்றிக் கூறப் படுகின்றது. காசுமீரத்தைலம் என்பது குங்குமப்பூவால் செய்யப்படும் தைலமாகும். மணமூட்டியாகக் குங்குமப்பூ இன்றும் பயன்படுகின்றது. 'தன்வந்திரியின் தைலம் 500' என்ற நூலில் காசுமீரத்தைலம் செய்யும்முறை குறிப்பிடப் படுகின்றது.

இடைக்காலங்களில் கோவில்களில் 'நந்தா' விளக்கெரிப் பதற்கு இலுப்பை எண்ணெய் பயன்பட்டது. அதற்காக

---

**1 நெய்கனி நெடுவேல் எஃகிலை இமைக்கும் மழை மருள்**
**பல் தோல் மாவண் சோழர்-(காரிக் கண்ணனார்-அகம்)**

**2 மீன் நெய் அட்டிகிளிஞ்சல் பொத்திய**
**—கண்ணம் புல்லனார் (நற்)**

**3 மீன் நிணம் தொகுத்த ஊன் நெய் ஒண்சுடர்**
**சுள்ளம்போதனார் (நற்)**

**4 பௌத்தமும் தமிழும்—மயிலை சீனி வேங்கடசாமி**
**சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் சென்னை.**

கோவில் நந்தவனங்களில் இலுப்பைமரங்கள் வளர்க்கப்பட்டன. 'சாவாமூவா' ஆடுகள் அறக்கட்டளையாக மன்னவர்களாலும், ஏனையோராலும் கோவில்களுக்குக் கொடுக்கப்பட்டன.

இந்நூலில் உள்ள செய்முறைகளை ஆய்வு செய்யச் சித்த மருத்துவ ஆய்வாளர்களும், சித்த மருத்துவ இயக்ககமும், சித்தமருத்துவ வாரியமும், சித்த மருந்துகள் செய்நிலையங்களும் முன்வருதல் வேண்டும். இந்நூல் வெளிவர நிதி நல்கிய நடுவண் அரசுக்கும், மாவட்ட ஆட்சியர் திரு. மச்சேந்திரநாதன், இ. ஆ. ப., அவர்களுக்கும், இயக்குநர் திரு. மு. சதாசிவம் அவர்களுக்கும், நிருவாக அலுவலர் திரு. சி. கிருஷ்ணன் அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், தக்க கருத்துக்களைத் தந்த டாக்டர் எஸ். பிரேமா, எம். டி. சித்த மருத்துவத் துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி. சித்த மருத்துவர்களும், ஏனைய தமிழன்பர்களும் இந்நூலை ஆதரிப்பார்களாக.

அன்பன்,

*11—9—89.* **ச. அரங்கராசன்.**

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

*தஞ்சாவூர்,*
*10-1-2000.*

**மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,**
சரசுவதி மகால் நூலகம்.

# எண்ணெய் வாகடம்

## பாகம் - 1

### 1. வாதம் 80-ம் போக, எண்ணெய்

**சரக்குகள்;**

| | |
|---|---|
| சாதிலிங்கம் | 2 வராகன்[1] |
| மனோசிலை | ,, |
| பொன்னரிதாரம் | ,, |
| நெல்லிக்காய் கந்தகம் | ,, |
| அதிவிடையம் | ,, |
| அவுரி | ,, |
| துத்தம் | 4 வராகன் |
| பச்சைக் கற்பூரம் | 1 வராகன் |

**செய்முறை:** அரைத்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி, சிவந்த பதத்தில் இறக்கி ஆற வைக்கவும். 25 நாட்கள் சென்ற பின்பு உட்கொள்ளவும்.

**விலக்கு;** கார்ப்பு, புளிப்பு உணவுப் பொருட்கள்.

**அளவு:** ஒரு கரண்டி வீதம் காலை, மாலை இரு வேளை உட்கொள்ளவும்.

**குறிப்பு:** இதனை வெளியில் தடவி, துவாலை இடவும். தலைக்குத் தேய்த்தும் குளிக்கலாம்.

### 2. கண்ணோய் போக்கும் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| ஏலம் | சாதிக்காய் |
| இலவங்கம் | நெல்லிக்காய் |

---

1. வராகன் — 3.5 கிராம்

| | |
|---|---|
| தான்றிக்காய் | சதகுப்பை |
| செங்கழனிநீர் | செண்பகப்பூ |
| கோட்டம் | மலைப்பச்சை |
| கஸ்தூரி மஞ்சள் | குங்கிலியம் |
| கடுக்காய் பட்டை | குறுந்தொட்டி வேர்-தோல், பூ |
| செஞ்சந்தனம் | |
| கடுகு ரோகணி | பொன்னாங்கண்ணி வேர், பூ |
| மிளகு | |
| சிறுநாகப்பூ | விலாமிச்ச வேர் |
| அதிமதுரம் | வெட்டிவேர் |

**செய்முறை:** மூலிகைகள் வகைக்கு ரு பலம் (5 பலம்) எடுத்துக்கொள்ளவும். கடைச்சரக்குகள் தலா 3 வராகன் வீதம் எடுத்து அரைத்துக்கொள்ளவும். நல்லெண்ணெய் 3 படி, இளநீர் 3 படி, தாழைச்சாறு 3 படி ஒன்றாகக்கூட்டிக் கொள்ளவும். காய்ச்சிப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** கண் நோவு, இமைத்துடிப்பு, அற்ப நீர்ப் பாய்ச்சல் என்பன தீரும்,

**பயன்படுத்தும் முறை:—** தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும்.

## 3. கரப்பான் தீர எண்ணெய்

**சரக்குகள் :**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | படி 1 |
| சிற்றாமணக்கு எண்ணெய் | படி 1 |

**செய்முறை:** மிளகு, சாரணைவேர், கடுக்காய் பட்டை புங்கம் வேர், கருஞ்சூரை வேர், சங்கம் வேர், எருக்கம் வேர் உகாய்வேர்ப்பட்டை வாகைப்பட்டை, பாவட்டைப்பட்டை சேங்கொட்டை, மாவிலிங்கப்பட்டை இவைகளை தலா கால்

பலம் எடுத்துக்கொள்ளவும். வசம்பு, வெள்ளைப் பூண்டு வெங்காயம், சுக்கு, கடுக்காய், கடுகுரோகணி, செங்கழுநீர்ப்பூ, கோட்டம், திப்பிலி, பெருங்காயம் வகைக்கு 3 வராகன் இச்சரக்குகளை எல்லாம் இடித்துப் பொடிசெய்து எண்ணெயில் போட்டுக் கொதிக்கவைத்து பதத்தில் வடித்து எடுத்துக்கொள்ளவும்.

**அளவு:** ஒரு காசு எடை உட்கொள்ளவும்.

**பயன்:** உள்ளுக்கும், வெளியிலும் பயன்படும்.

**தீரும்பிணிகள்:** சிழ்கரப்பான், படைக்கரப்பான் மண்டைக்கரப்பான், எரிகரப்பான், பொரிகரப்பான், செங்கரப்பான், கருங்கரப்பான், நீர்க்கரப்பான், கொள்ளிக்கரப்பான் எழுஞாயிறு, படுஞாயிறு, விஷக்கரப்பான், வீங்குக்காப்பான் கட்டுக்கரப்பான், நாக்குக்கரப்பான், கோழைக்கரப்பான் முழங்கால் கரப்பான், ஒடுகரப்பான், மூடுகரப்பான், குடல் புரட்டல், கழல் வாதம்.

## 4. மண்டைக் கரப்பான் போக எண்ணெய்

**சரக்குகள்:**

மணத்தக்காளி வேர்
வெள்ளாட்டுப்பால்
விளக்கெண்ணெய்
வெங்காயம்—வராகன்

**செய்முறை:** மணத்தக்காளியின் வடக்கு செல்லும் வேரை எடுத்துக்கொண்டு அரைத்துக்கொள்ளவும். இதை வெள்ளாட்டுப்பால் வார்த்து சுண்டக் காய்ச்சவும். பின் சிறிதளவு விளக்கெண்ணெய் விட்டு, வெங்காரம் வராகன் எடையை போட்டு கலந்து, வைத்துக்கொள்ளவும்,

அளவு: கரண்டி அளவு.

**நாள் அளவு:** 3 நாட்கள்

**பயன்படும் விதம்:** உட்கொள்ளவும், வெளித்தடவவும், மண்டைக் கரப்பான் போகும்.

## 5. சூதக வாயு தீர

**சரக்குகள்:**

நல்லெண்ணெய்

புங்கெண்ணெய்

வேப்பெண்ணெய்

விளக்கெண்ணெய்

**செய்முறை:** தலா 1 படி வீதம் மேற்சொன்ன எண்ணெய்களை எடுத்துக்கொள்ளவும். வசம்பு, உள்ளிப் பூண்டு 2 பங்கு, மிளகு 1 பிடி, திராய் வேர் 5 பங்கு. இவைகளை எல்லாம் நறுக்கிப் பொன்னிறமாகக் காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். வேரை அரைத்து அதில் குழப்பிக் கொள்ளவும்.

**அளவு:** ஒரு துட்டு எடை

**பயன்:** உள்ளுக்குக் குடிக்க

**காலம்:** 3 நாட்கள்

**விலக்கு:** உப்பு, புளி, துவரை, மிளகு.

**தீரும் பிணிகள்:** சூதகப் புற்று எரிவு, கடுப்பு, நிதத்தில் குத்து என்பனவற்றிற்கு கைகண்ட மருந்து.

## 6. கர்ப்பிணிக்கு எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | 2 படி |
| வெங்காயம் | 1 படி |
| வாளம் | 1 படி |

**செய்முறை:** வெங்காயத்தை உரித்துக்கொள்ளவும். மிளகு 1 படி, கடுகு ஒன்றரை படி, சீரகம் 1 சேர், வெந்தயம் 1 சேர், சுக்கு 4 எண், உள்ளிப்பூண்டு 4 எண். இந்த ஆறு வகை சரக்குகளையும் பொடி செய்து வெருகன் கிழங்கு ஒன்றரை படி தூள் செய்துகொள்ளவும். வெங்காயத்தை விளக்கெண்ணெயில் இட்டு சூடுபடுத்தி, மூக்கால் பங்கு வெந்து போனவுடன், மிளகுத்தூளை தூவியும், பின்பு அனைத்து சூரணங்களையும் தூவி விடவும். எண்ணெயைக் காய்ச்சிப் பதத்தில் எடுத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

| **கால அளவு:** | | | |
|---|---|---|---|
| | 6ம் மாதம் | — 6 | நாட்கள் |
| | 7ம் மாதம் | — 7 | ,, |
| | 8ம் மாதம் | — 8 | ,, |
| | 9ம் மாதம் | — 9 | ,, |
| | 10ம் மாதம் | — 10 | ,, |

**அளவு:** காசு அளவு

**விலக்கம்:** கார்ப்பு, புளிப்பு, குளிர்ந்த நீர் கூடாது.

**பயன்:** மலக்கட்டு நீங்கி பேதியாகும். தொடர் கருச்சிதைவு போக்கும். கிரந்தி, சூலை போகும். இதனுடைய கடுகை அரைத்து, சுண்டை அளவு வெந்நீரில் உட்கொள்ள பேதியாகும்.

## 7. கணைக்காய்ச்சல் தீர

சரக்குகள்:

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | 1 | படி |
| சுக்கு | 1 | பங்கு |
| வசம்பு | 1 | ,, |
| வெள்ளைப்பூண்டு | 1 | ,, |
| முடக்கத்தான் வேர் | 10 | ,, |
| கடுக்காய் | 10 | ,, |
| களிப்பாக்கு | 10 | ,, |

**செய்முறை:** இறுதியில் கூறப்பட்ட சரக்குகளை நறுக்கிக் கஷாயம் வைத்துக்கொள்ளவும். முதலில் உள்ள மூன்று சரக்குகளை பொடி செய்து கொள்ளவும். பின்பு விளக்கெண்ணெயை அடுப்பிலேற்றி சூடுபடுத்தி, அதில் கஷாயம், சூரணம், வேர், வெள்ளைப்பூண்டு என்பவற்றை இட்டுப் பதத்தில் எரித்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: பெரியவர்கள் 3 கரண்டி, சிறுவர்கள் ஒன்னரை கரண்டி உட்கொள்ள வேண்டும்.

**பத்தியம்:** இச்சா பத்தியம்

## 8. கர்ப்பச்சிதைவு தடுப்பு எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கஞ்சாக்கோரை | செங்கத்தாரி வேர் |
| முத்தக்காசு | வெள்ளறுகம் ,, |
| முத்தெருக்கம் செலி வேர் | தேற்றான் ,, |
| கருநொச்சி இலை | மிளகுத்தக்காளி இலை |
| தும்பை இலை | துள்சி இலை |
| கஸ்தூரி மஞ்சள் | சாதிக்காய் |
| சாதிக்காய் | கருஞ்சீரகம் |
| மிளகு | சுக்கு |
| மஞ்சள் | பூண்டு |
| ஏலம் | செண்பகப்பூ |

**செய்முறை:** சமஎடையாக எடுத்தரைத்து வைத்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் 3 பங்கு ஊற்றி, கலந்து கொண்டு, 4 நாட்கள் சூரியபுடம் வைக்கவும்.

**பயன்:** உண்ணத் தகுந்தது

**பத்தியம்:** கார்ப்பு, புளிப்பு வகை உணவுகள் கூடாது.

## 9. கிரந்தி, கரப்பான் தடுப்பு எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| பரங்கிப்பட்டை | 1 பலம் |
| விளக்கெண்ணெய் | 10 படி |
| கருஞ்சீரகம் | 5 வராகன் |
| நிலப்பனைக்கிழங்கு | 5 ,, |
| பிளிங்கரணைக் கிழங்கு | 5 ,, |
| சாரணை வேர் | 5 ,, |
| வெங்காயம் | அரைப்படி |

**செய்முறை:** வெங்காயத்தை அரைப்படி தோல் உரித்து எடுத்துக்கொண்டு இரண்டாகப் பிளக்கவும். மேற்படி சாக்குகளை சூரணம் செய்து விளக்கெண்ணெயில் போட்டு சூடாக்கவும். பின்பு வெங்காயத்தை அதில் போட்டு, தோல் மெதுவானபடி இருக்க, பதத்தில் இறக்கிக் கொள்ளவும். வடிகட்டி பயன்படுத்தவும்.

| | | |
|---|---|---|
| **கால அளவு;** | 7ம் மாதம் | 30 நாட்கள் |
| | 9ம் மாதம் | 10 ,, |

**அளவு:** 1 கரண்டி வீதம் உண்ணவும்.

**பத்தியம்:** அகத்திச்சாறு, பசு நெய், வெங்காயம் சேர்க்கவும். கம்பஞ்சோறு, புழுங்கலரிசிச்சோறு கொடுக்கவும்.

## 10. பிள்ளைகளுக்குக் கரப்பான் தீர எண்ணெய்

**குறிகுணம்:** பிள்ளை பிறந்து 7ம் நாள், 9ம் நாள் 13ம் நாள் தொண்டை கட்டு, கறுப்பு, சிகப்பு நிறமாய் வட்ட வடிவமாயிருக்கும். வயிறு ஊதும். வயிறு புரளும்.

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வறுத்து ஊற்றிய சிற்றாமணக்கு நெய் | 1 படி |
| வெங்காயம் | ,, |
| கருநொச்சி | சம எடை |
| மணத்தக்காளி இலை | ,, |
| பிண்ணாக்குப் பூடு இலை | ,, |
| கோழி அவரை இலை | ,, |

**செய்முறை:** மேற்படி வெங்காயத்தை தோல் நீக்கி அரை படி அளவுக்கு எடுத்துக்கொண்டு, எண்ணெயில் போடவும். இலைகளை இடித்து ஒரு படி அளவுக்குச் சாறு எடுத்துக்கொள்ளவும். சாதிக்காய், கிராம்பு, சாதிப்பத்திரி கருஞ்சீரகம், சீனி, கடுகு, திப்பிலி, திப்பிலிமூலம், சீரகம் வகைக்கு 1 வராகன்வீதம் பொடிசெய்து கொள்ளவும். சிற்றாமணக்கு எண்ணெயை அடுப்பிலேற்றி சூடு படுத்திக் கொண்டு சூரணம், சாறு என்பன கலந்துகொண்டு தண்ணீர் வற்றும் பதத்தில் இறக்கி வடித்துக்கொள்ளவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| **பயன்:** | 5ம் மாதம் | 1 கரண்டி | 5 நாட்கள் |
| | 6 ,, | ,, | 6 ,, |
| | 7 ,, | ,, | 7 ,, |
| | 8 ,, | ,, | 8 ,, |
| | 9 ,, | ,, | 9 ,, |

10ஆம் மாதம் மருந்து தேவை இல்லை.

**குறிப்பு:** குழந்தை பிறந்தவுடன் குளிப்பாட்டத் தேவை இல்லை. 18 நாட்கள் சென்றபின், குளிப்பாட்டவும். பிறந்தது முதல் 6 மாதம் வரை இந்த எண்ணெயைத் தரவும். உள்ளுக்குப் பச்சை எண்ணெய் வேண்டாம்.

## 11 வெடிக்கரப்பான் போக

சுண்டை வேரை அரைத்து. சீலையில் தடவிப் புண்ணில் கட்டவும். 3ஆம்நாள் அவிழ்த்து எண்ணெய் தடவப் போகும்.

## 12 மண்டை கரப்பான் போக

வடக்கே செல்லும் மணத்தக்காளி வேரைச் சுண்டைக் காய் அளவுக்கு அரைத்துக்கொள்ளவும். வெள்ளாட்டுப் பாலில் கரைத்து 1 படி ஆமணக்கு நெய்யில் கலந்து சுண்டக் காய்ச்சவும். ஒரு வராகன் வெங்காரத்தைப் பொடி செய்து போடவும். வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**கால அளவு:** 3 நாட்கள்

**பயன்:** உள், வெளிப் பிரயோகம். புண்ணில் தடவி வரவும்.

## 13 கர்ப்ப வாயு போக

**சரக்குகள்:**

ஆமணக்கு நெய் 1 படி
கடுகு
மஞ்சள்
இந்துப்பு
தைவேளை
நிலவாரை
உள்ளிப்பூண்டு
வெங்காரம்
ஆமணக்கு இலை

**செய்முறை:** ஒன்பது சரக்குகளையும் தலா 3 பலம் வீதம் எடுத்துக்கொள்ளவும். கழஞ்சு எடை கொடிக் கள்ளிப்பால் ஊற்றி, எண்ணெயில் கலந்து அடுப்பிலேற்றிச் சூடு பண்ணவும், மருந்து விதைகளைப் பொடிசெய்து

கொண்டு, சூடான எண்ணெயில் போடவும். கடுகு வெடிக்கும் நேரம், பதம் என அறியவும். இப்பதத்தில் எடுத்து வடிகட்டிக் கொள்ளவும்.

**அளவு:** ஒரு துட்டு எடை

**முறை:** வீட்டு விலக்கம் அடைந்த 3ஆம் நாள் உட்கொள்ளவும்.

**பயன்:** வாயுத் தொல்லை. கர்ப்பம் உண்டாகும்.

## 14 அரையாப்பு போக

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வெள்ளுள்ளிப்பூண்டு | 1 பிடி |
| நத்தைச்சூரி வேர் | ,, |
| நல்லெண்ணெய் | அரைக்கால் படி |
| தைவேளைச்சாறு | 1 படி |

**செய்முறை:** மேற்படி சரக்குகளை எல்லாம் கூட்டி ஆமணக்கு நெய்யில் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

**அளவு:** 1 கரண்டி வீதம் உட்கொள்ள

**தீரும் பிணிகள:** அரையாப்பு, கரப்பான், விப்புருதி கிரந்திப் புண்கள்

## 15 மேகத்தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 4 சேர் |
| மிளகு | 2 ,, |
| கொத்தமல்லி | 5 ,, |
| அதிமதுரம் | 5 ,, |
| நெல்லிமுள்ளி | 5 ,, |

| | | |
|---|---|---|
| இலவங்கபத்திரி | 10 | ,, |
| தாளிசபத்திரி | 10 | ,, |
| பற்பாடகம் | அரை வீசம் | |
| விலாமிச்சம் வேர் | | ,, |
| வெட்டிவேர் | 12 சேர் | |
| கேவுரை | 12 | ,, |
| கோரைக்கிழங்கு | 12 | ,, |
| சிறு நாகப்பூ | 10 | ,, |
| சேரப்பூ | 10 | ,, |

**செய்முறை:**

இந்த 14 வகைகளையும் 4 படி நீரில் கலந்து சூடு படுத்த வேண்டும். கஷாயமாக மாறும் பின்னர் நல்லெண்ணெயில் கலந்து, மீண்டும் அடுப்பிலேற்றி, சூடுபடுத்தவும். ஏலம் 4 வராகன், கிராம்பு 2 வராகன், சாதிக்காய் 5 வராகன், சாதிபத்திரி 5 வராகன், குங்குமப்பூ 5 வராகன், பச்சைக் கற்பூரம் 10 வராகன், கோரோசனை 5 வராகன், புனுகுச் சட்டம் 5 வராகன் இவற்றைக் கலந்து பொடிசெய்து கொண்டு, எண்ணெயில் போட்டுக் கிண்டி வடிகட்டிக் கொள்ளவும்.

**பயன்:** குளிக்க

## 16 இளைப்புத் தீர நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| ஆவின் நெய் | வரிப்பூசணிப்பிஞ்சு |
| ஏலம் | சீரகம் |
| அதிமதுரம் | செங்கழுநீர் |
| கோட்டம் | |

**செய்முறை:** கடைச்சரக்குகளை 8 பலம் எடுத்துக் கொண்டு, தண்ணீரில் அரைத்து, நெய்யில் குழைத்துக் காய வைக்கவும். மெழுகு பதத்தில் மணம் வரும். அப்போது வடிகட்டிக்கொள்ளவும்.

**அளவு:** காசெடை

**பிரயோகம்:** உட்கொள்ளவும்.

**விலக்கு:** கார்ப்பு, புளிப்பு உணவுகள்.

## 17 பிரமியம் போக நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| ஏலம் | இலவங்கம் |
| அதிமதுரம் | செங்கழுநீர் |
| கோட்டம் | செண்பகப்பூ |
| பொன்னாங்கன்னிவேர் | செங்கீரைவேர் |
| சிறுபூளைச்சமூலம் | புண்ணாக்குவேர் |

**செய்முறை:** மேற்படி சரக்குகளை ஒரு வராகன எடுத்துக்கொண்டு 1 சேர் ஆவின் பாலில் அரைத்து, 1 சேர் நெய்யில் கலக்கிப் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும். பின்பு, அடுப்பிலேற்றி, சூடுபடுத்திக் கொண்டு, எரித்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

**அளவு:** காசெடை. இருவேளை.

**பத்தியம்:** இச்சா பத்தியம்.

## 18 கிராணி, கழிச்சல் தீர நெய்

**சரக்குகள்:**

| | | |
|---|---|---|
| 1 | ஆயில்பட்டை | 10 பலம் |
| 2 | சுக்கு | 5 பலம். |

**செய்முறை:** மேற்சொன்ன இரண்டையும் இடித்துக் கொண்டு 2 தூணி (21.5 லிட்டர்) நீர்விட்டுக் கஷாயமாகக் காய்ச்சவேண்டும். மேற்படி கஷாயத்தில் சுக்கு, திப்பிலி மிளகு, அரிசித்திப்பிலி, அதிவிடையம், பெருங்காயம் ஓமம், வெட்பாலை அரிசி, தேவதாரம், கோட்டம், சிறு தேக்கு, மஞ்சள், கடுக்காய், கொடுவேலிவேர், வட்டத்

திருப்பி வேர், நன்னாரி வேர், பெருமரப்பட்டை, செவ்வியம் சிறுமூலம், முத்தக்காசு தலா 3 கழஞ்சு (4. 4 மி. கி.) வீதம் எடுத்துக்கொள்ளவும். மேற்சொன்ன கஷாயத்தில் அரைத்துக்கொண்டு 3 சேர் நெய்யில் (280 கி.) கலக்கவும். அடுப்பிலேற்றி எரித்துக்கொண்டு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

**தீரும் நோய்கள்:** கிராணி கழிச்சல்.

**அளவு:** 1 வராகன் (3. 5 கி.)

## 19 பித்த வெட்டை தீர எண்ணெய்

**சரக்கு:**

சிற்றாமணக்கு கொட்டை 10 படி

**செய்முறை:** இதை இளநீர் விட்டு வேகவைத்து எண்ணெயாக்கவும். 10 எலுமிச்சம்பழச்சாறு, 10 ரஸ்தாளிப்பழம் போட்டு. 5 பலம் சீரகம் 1 பலம் (35 கிராம்) பொடிபண்ணிப்போட்டுக் கிண்டவும். அடுப்பிலேற்றி இளஞ்சூட்டில் எடுத்து, பின்னர்ச் சூரிய புடம் வைத்து எடுக்கவும்.

**அளவு:** 1 கரண்டி உட்கொள்ளவும். காலையில் மட்டும்.

**தீரும்பிணிகள்:** பித்தவெட்டை, கண் புகைச்சல் உடல் எரிச்சல் என்பன.

## 20 பலவித கணைகள் தீர எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கணப்பூண்டு | 1 பலம் (35 கி.) |
| தகரைப்பழம் | 1 ,, |
| பழம்பாசி | 5 ,, |

| | | |
|---|---|---|
| வெங்காயம் | 5 | ,, |
| பூண்டு | 1 | ,, |
| வசம்பு | 8 | ,, |
| சீரகம் | 5 | ,, |

**செய்முறை:** இவற்றை விளக்கெண்ணெயில் போட்டுச் சூரிய புடம் வைத்துக் கசக்கி எடுக்கவும்.

**அளவு:** காசெடை உட்கொள்ளவும். வெளியிலும் பூசலாம்.

**உணவு:** சுடுகஞ்சி தரவும்.

## 21 இராம பாணத்தைலம்

**சரக்குகள்:**

எட்டிப்பட்டை அழிஞ்சிற்பட்டை
வேப்பம்பட்டை ஊழலாற்றிப்பட்டை
மாம்பட்டை அரசம்பட்டை
புங்கம்பட்டை புரசம்பட்டை
ஆலம்பட்டை, வெள்ளெருக்கம்பட்டை 15 பங்கு

சங்கங்குப்பி
ஆடுதின்னாப்பாளை நிலப்பனங்கிழங்கு
வெள்ளறுகு சிறுசெருப்படி
பெருசெருப்படி திருகுகள்ளி
வெண்ணொச்சி கருநொச்சி
கழுதைதலத்தி ஆவாரை
பொன்னாவாரை வல்லாரை
புளியாரை சிறுகாஞ்சோரி
ஆகாயகருடன்கிழங்கு — தலா 5 சேர்

நல்லபாம்புசட்டை சுக்கு
வசம்பு ஓமம்

சேங்கொட்டை — தலா 1 பலம்
பரங்கிப்பட்டை பிரப்பங்கிழங்கு
பூண்டு — தலா 2 பலம்

**செய்முறை:** பட்டைகளைத் துண்டுகளாக்கிக் கொள்ளவும். அண்டாவில் 8 திராணி நீர் வார்த்து அதில் பட்டைகளைப் போடவும். கால்பங்காகச் சுடவைத்து எடுத்துக் கொண்டு நல்லெண்ணெய் 5 சேர் ஊற்றி விடவும். கடை மருந்துகளைப் பொடிசெய்து போட்டுக்கொள்ளவும். பதத்தில் எடுத்துக்கொண்டு வடிகட்டவும்.

**அளவு:** 1 கழஞ்சு (4. 4 மி. கி.) உட்கொள்ளவும்.

**நாட்கள்:** 48 நாட்கள். (1 மண்டலம்)

**தீரும் பிணிகள்:** கை, கால் அரிப்பு, மேகப்பிணிகள் 18 போகும்.

**விலக்கு:** கார்ப்பு உணவு, புகையிலை.

## 22 கணை எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| ஆமணக்கு எண்ணெய் | 1 சேர் (250) |
| சிறுகீரை வேர் | 1 பலம் (35 கி.) |
| மூக்குத்திப்பூண்டு | 1 ,, |
| தைவேளை | ,, |
| வெங்காயம் | 5 பலம் |
| சுக்கு | 5 ,, |
| அரத்தை | 5 ,, |

**செய்முறை:** வேர்வகைகளை இடித்துச் சிற்றாமணக்கு எண்ணெயில் போடவும். வெங்காயத்தை நறுக்கி வைத்துக் கொள்ளவும். கடைச் சரக்குகளைப் பொடிசெய்து கொள்ளவும். சிற்றாமணக்கு எண்ணெயை அடுப்பிலேற்றிச் சூடுபடுத்தவும். கொதி வந்தவுடன் வெங்காயம் சூரணத்தைப் போட்டுப் பதத்தில் எடுத்து வைத்துக்கொள்ளவும். வடிகட்டிப் பயன்படுத்தலாம்.

**அளவு:** காசு எடை உட்கொள்ளவும்,

## 23 கண்டமாலை, கண்ணைப்புற்று, கண்ணக்கிரந்தி விப்புருதி போக எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 5 சேர் |
| அபின் | 5 கழஞ்சு |
| துத்தம் | ,, |
| கொடிவேலிவேர் | ,, |
| பொன்முசுட்டை வேர் | ,, |
| அரளி வேர் | ,, |
| கொல்லன் கோவைக்கிழங்கு | ,, |

**செய்முறை:** இவைகளை அரைத்து எண்ணெயுடன் சேர்த்து, அடுப்பிலேற்றிக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**முறை:** வெளித்தடவ மட்டும்

**தீரும்பிணிகள்:** புரை, புண்.

## 24 பீனசத் தைலம்[1]

**சரக்கு:**

| | |
|---|---|
| மிளகு | 1 வராகன் (3. 5) |

**செய்முறை:** இதை அகத்தியிலைச் சாற்றில் ஊற வைத்து 3 நாட்கள் கலந்து வைத்து எடுத்து உலர்த்திக் கொள்ளவும். உலர்ந்த மிளகை மீண்டும் மூன்று தரம்*

## 25 கணம் தீர எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| முருக்கம் பிசின் | கடுகுரோகிணி |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| திப்பிலி | காசுகட்டி |
| கஸ்தூரி மஞ்சள் | |

---

1 குறைவாக உள்ளது

**செய்முறை:** தலா 3 பலம் வீதம் எடுத்துக்கொள்ளவும். 3 பலம் எண்ணெயுடன் சேர்த்து அடுப்பிலேற்றிச் சூடுபடுத்திப் பதத்தில் இறக்கவும்.

**உணவு:** மிளகுச் சோறு

**தீரும் நோய்கள்:** கரப்பான், மாந்த கணம், சளிக் கணம் ஊதுகணம் என்பன.

## 26 மேகம், பிரமியம் போக எண்ணெய்

**சரக்குகள்:**

கருநொச்சி — எலுமிச்சம்சாறு
பசுவின் பால் — எண்ணெய்
தலா 1 படி

**செய்முறை:** இவற்றைக் கலந்துகொண்டு அடுப்பிலேற்றி எரிக்கவேண்டும். பச்சைவெட்டுக் குங்கிலியம் 3 பலம், கற்பூர சிலாசத்து 2 பலம், கல்நார் 2 பலம் இவற்றைச் சட்டியில் போட்டுக் கருநொச்சி இலைச்சாறு எடுக்கவும். கொதிக்க விடவும். கொதி வந்தவுடன் தேவையான நீர் வார்க்கவும். நீருடன் எண்ணெயை ஊற்றிக்கொண்டு மத்தினால் கடைய வேண்டும். வெண்ணெய் திரளும்.

**அளவு:** எலுமிச்சங்காய் அளவு காலையில் உண்ணவும்.

**காலஅளவு:** 20 நாட்கள்

**தீரும்பிணிகள்:** மேகம், வயிற்றெரிச்சல், இரத்தம் சீழ் விழுதல், கருப்பாசயப்பிணிகள் தீரும். மகப்பேறு உண்டாகும்.

## 27 மூலச் சூட்டுக்கு எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | 1 சேர் (280கி) |
| எலுமிச்சம் சாறு | 1 ,, |
| பசுவின் பால் | 1 ,, |
| வெங்காயம் | 1 பலம் |
| வெந்தயம் | 5 ,, |

**செய்முறை:**

எண்ணெயுடன் சேர்த்துக் கலக்கவும். பெருமணலைப் பரப்பி, அதன்மீது வேப்பிலையைப் போடவும். மணல் மீது சட்டியை வைத்து மூடிவிடவும். 5 நாட்கள் சென்று எடுத்துக்கொள்ளவும். மருந்து சுண்டி எண்ணெயாகும்.

**கால அளவு:** 3 நாட்கள்.

**அளவு:** அரை கால்சேர் உட்கொள்ளவும்.

**விலக்கு:** இச்சாபத்தியம்.

**தீரும்பிணிகள்:** மேகச்சூடு, வெள்ளைபடுதல்.

## 28 மாந்தம், பேதி நிற்க எண்ணெய்

**சரக்குகள்:**

விளக்கெண்ணெய் மாகாணி 1

| | |
|---|---|
| கடுகுரோகணி | கருஞ்சீரகம் |
| கடுக்காய் | சீரகம் |
| வெங்காயம் | வசம்பு |
| பூண்டு | செங்கதாரி பட்டை |
| சதுரக்கள்ளிப்பால் | சாரணை |

| | |
|---|---|
| பூதகரப்பான்பட்டை | கழற்சிஇலை* |
| தகரை இலை | அகத்தி இலை |
| துளசி இலை | மணத்தக்காளி |

இலைச்சாறு 5 சேர்

**செய்முறை:** கடைச்சரக்குகள் 2 வராகன் தால் எடுத்துக்கொள்ளவும். மணத்தக்காளி இலைச்சாற்றை எண்ணெயில் கலக்கவும். வசம்பைச் சாம்பல் செய்துகொள்ளவும். கடை சரக்குகளை இடித்து, சூரணித்து, எண்ணெயில் கலக்கவும். வசம்புச்சாம்பலையும் சேர்த்து, அடுப்பிலேற்றி, சூடுபடுத்திப் பதத்தில் எடுத்து வடிகட்டிக்கொள்ளவும்.

**தீரும் பிணிகள்:** மாந்தம்

**விலக்கு:** உப்பு, புளி கூடாது.

## 29 பேராமுட்டி எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கடுகுரோகிணி | சதகுப்பை |
| அதிமதுரம் | கோட்டம் |
| அமுக்ரா | கருஞ்சீரகம் |
| மஞ்சள் | அரத்தை |

**செய்முறை:** தலா வராகன் ஒன்று (3. 5கி) எடுத்துக் கொள்ளவும். பேராமுட்டி இலையை எருமை மோரில் அரைத்துக் கல்கடுமாக்கவும். எலுமிச்சங்காயளவு, மாகாணி எண்ணெயில் கலக்கவும். கடைச்சரக்குகளைப் பொடிசெய்து கொண்டு எண்ணெயில் போட்டு. அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் வடிகட்டிக்கொள்ளவும்.

**தீரும் பிணிகள்:** அஸ்திசுரம், உட்காய்ச்சல் குணப்பட்டு, குளித்தவனுக்கு மட்டும்.

---

*கழஞ்சி இலை எலுமிச்சங்காய் அளவு எடை அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

## 30 ஆம சுரம் தீர

**சரக்குகள்:**

| | | |
|---|---|---|
| பிரமி | கற்றாழை | ஆடாதோடை |
| தராய் | கொத்தமல்லி | |

**செய்முறை:** இவற்றை நீர் வார்த்து, அரைத்துக் கொண்டு, 16 நாழி நீரில் கொதிக்கவைக்கவும். 1 பங்காகக் குறுக்கி, குறுக்கிய கஷாயத்தில் தேங்காய்ப்பால் 1 நாழி (1. 3 லிட்) நெய் நாழி கடுகரோகணி 2 பலம் சேர்த்து அரைக்கவும். அரைத்த கஷாயத்தை அடுப்பிலேற்றி, எரித்து, பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**தீரும்பிணி:** ஆம சுரம்.

## 31 மண்டைக் கரப்பான் தீர எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| மிளகு | 2 காசெடை |
| உள்ளிப்பூண்டு | ,, |
| வெங்காயம் | 8 காசெடை |
| நெருஞ்சிமுள் | 15 காசெடை |
| பூவரசு சுட்ட சாம்பல் கரி | சிரங்கை அளவு |

ஆடுதின்னாப்பாலைச்சாறு—5 படி
ஆமணக்கு நெய்—5 படி

**செய்முறை:** நிலாவாரைவேர் கொண்டுவந்து, சாற்றில் அரைத்து 3 எலுமிச்சங்காயளவு எடுத்துக்கொள்ளவும். 5 படி சிற்றாமணக்கு நெய்யில் கலந்துகொள்ளவும். கடைச் சரக்குகளை இடித்துப் பொடிசெய்துகொண்டு, எண்ணெயில் போடவும். கொதிக்கவைத்து, வடிகட்டிக்கொள்ளவும்.

**பயன்: வெளித்தடவ மட்டும், கோழி இறகு கொண்டு** எடுத்துத் தடவவும். காதிலும் விடவும்.

## 32 பேதிக்கு எண்ணெய்

**சரக்குகள்:**

கழற்சிச்சாறு விழுதிலைச்சாறு
முடக்கொத்தான் இலைச்சாறு
பிரமி இலைச்சாறு
கையானிலைச்சாறு
தகரைச்சாறு
எண்ணெய்—10 சேர்
கடுகுரோகணி—1 வராகன் (3. 5கி)

**செய்முறை:** தலா 10 படி விதம் சாறுகளை எடுத்துக் கொண்டு எண்ணெயுடன் கலக்கவும். கடுகுரோகணி 1 வராகன் கடுக்காய்த்தோல் பொடித்துப்போட்டு, காய்ச்சி, வடி கட்டவும்.

**பயன்:** பேதியாகும்.

**அளவு:** 118 சேர் உட்கொள்ளவும்.

**உணவு:** மிளகு, அன்னம், மிளகுச்சாறு.

## 33 பிள்ளைப்பிணி போக

**சரக்குகள்:**

விளக்கெண்ணெய் சிற்றாமுட்டிவேர்
பேராமுட்டிவேர்

**செய்முறை:** வேர்களின் மேல்தோலை; உமி போலச் சீவ வேண்டும். இரண்டு அலகு, பாக்களவு எடுத்து, எண்ணெயிலிட்டு, வெங்காயம் ஒரு சிறு பாக்களவு போடவேண்டும். சூரியபுடத்தில் வைக்கவும். பின்னர் வடிகட்டி உபயோகப்படுத்தவும்.

**அளவு:** 2 துட்டு எடை 3 நாட்கள் தாயும் சேயும் உண்ண.

**தீரும் பிணிகள்:** மாந்தம், கணம், வெதுப்பு, உட் காய்ச்சல், வரகணம் போகும்.

**விலக்கு:** உப்பு, புளி, காப்பி என்பன.

## 34 வாந்தி தீர எண்ணெய்

**சரக்குகள்:**

அத்திப்பட்டைச்சாறு
கூவிளச்சாறு
முத்தக்காசு சாறு
குறுந்தவேர் சாறு
அதிமதுரம்
சுக்கு
கொத்தமல்லி
அதிவிடையம்
ஏலம்
இலவங்கம்

**செய்முறை:** கடைச்சரக்குகளை அரை பலம் வீதம் கொண்டு நல்லெண்ணெயில் 2 நாழிகை நேரம் அரைத்துக் கரைத்துக்கொண்டு, அடுப்பிலேற்றிக்கொண்டு, எரித்துப் பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

**அளவு:** 3 காசெடை உண்ண.

**உணவு:** மிளகு அன்னம்.

## 35 கர்ப்பம் தரிக்க நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| பசு நெய் | நொச்சி இலை, வேர் |
| ஆடாஇலை வேர் | முள்ளிவேர் |

| | |
|---|---|
| மணத்தக்காளி வேர் | இண்டம் வேர் |
| நல்வேளை வேர் | அவுரி வேர் |
| மரமஞ்சள் | பூலாங்கிழங்கு |
| பொன்னரிதாரம் | இந்துப்பூ |
| ஏலம் | இலவங்கம் |
| செவ்வல்லிக்கொடி | செண்பகப்பூ |
| நந்தியாவட்டம் | |

**செய்முறை:** வகைக்கு 2 வராகன் தனித்தனியாக அரைக்கவும். பசுவின் நெய்யில் கலந்து அடுப்பிலேற்றிச் சூடுபடுத்திப் பதத்தில் இறக்கிக்கொள்ளவும்.

**அளவு:** 2 துட்டு உண்ண.

**உணவு:** திருக்கை கருவாடு சேர்த்து உண்ணவும். வெந்நீரில் கை, கால் கழுவிக்கொள்ளவும்.

**குறிப்பு:** மலட்டுப்புழு விழுந்து, பிள்ளை உண்டாகும்.

## 36 பேதி எண்ணெய்

**சரக்குகள்:**

வேப்பங்கொழுந்து
சீரகம்
நல்ல வெல்லம்

**செய்முறை:** இந்த மூன்றையும் அடை தட்டி விளக்கெண்ணெயில் கொதிக்கவைத்துக்கொள்ளவும். அடையைத் தின்று எண்ணெயைக் குடிக்க.

**உணவு:** மிளகு அன்னம்.

## 37 குளிர்ச்சி எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | 2 சேர் |
| கோடை துத்திவேர் | 2 பிடி |
| கோரோசனை | 2 வராகன் |

**செய்முறை:** விளக்கெண்ணெயில் இந்தச் சரக்குகளைப் போட்டுக் காய்ச்சி வடிகட்டிக் குடிக்கவும்.

**முறை:** 2 வேளை குடிக்கவும்.

## 38 நோவு போக எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| ஊத்தெண்ணெய் | 2 சேர் |
| வயல்வெண்டிவேர் | 2 பிடி |
| பூண்டு | 2 வராகன் |
| வசம்பு | 2 வராகன் |

**செய்முறை:** எண்ணெயில், சரக்குகளைப் பொடி செய்து போடவும். அடுப்பிலேற்றிக் காய்ச்சவும். உள்ளுக்குக் குடிக்கவும்.

## 39 பூந்திப்பட்டை எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| எண்ணெய் | 1 படி |
| பூந்திப்பட்டை | 2 சேர் |
| தண்ணீர் | 5 படி |

**செய்முறை:** தண்ணீரில் எண்ணெய் மற்றும் பட்டையைப் போட்டு 1 படியாகக் காய்ச்சவும். இத்துடன் வெங்காயச்சாறு 5 படி, எலுமிச்சம் பழச்சாறு 5 படி எடுத்துக்

கொண்டு, மேற்சொன்ன எண்ணெயுடன் கலந்து கொள்ளவும். பரங்கிப்பட்டை 9 பலம், சீரகம் 5 பலம். சாதிக்காய் 3 பலம், மாசிக்காய் 3 வராகன், குரோசாணி ஓமம் 3 வராகன் என்ற கடைச்சரக்குகளைப் பொடிசெய்து, வடிகட்டி இறக்கிக்கொள்ளவும்.

**உணவு:** உப்பு, புளி கூடாது. இது மேக நோய் போக்கும். பேதிக்கு மிளகு அன்னம் உணவு.

**குறிப்பு:** மேக நோய்க்கு 3 நாட்கள் விட்டு விட்டு இதைச் சாப்பிடவும்.

## 40 குளிர்ச்சி எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வல்லாரைச்சாறு | கால் சேர் |
| வெங்காயம் | ,, |
| கருவை இலைச்சாறு | ,, |
| கண்டத்திப்பிலி | 5 பலம் |
| ஓமம் | ,, |
| கடுக்காய் | கால் பலம் |
| நிலவாரை | ,, |

**செய்முறை:** கடைசியில் உள்ள 4 சரக்குகளையும் 2 சேர் தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கால் பங்காகச் செய்து கொள்ளவும். நெய் சேர் ஊத்தெண்ணெய் சேர் சேர்க்கவும். இவற்றை எல்லாம் எரித்துக் காய்ச்சி, மாசிக்காய் வராகன், ஏலக்கிரி கால் பலம், சாதிக்காய் பலம் சாதிப்பத்திரி பலம் வறுக்காமல் பொடிசெய்து போட்டுக் கொள்ளவும்.

**பத்தியம்:** இச்சாபத்தியம்.

**தீரும் பிணிகள்:** மேகச்சூடு.

## 41 வீக்கம் போக்க எண்ணெய்

**சரக்குகள் :**

அவுரிவேர் | நத்தைசூரிவேர்
தலைச்சுருளிவேர் | கொடுவேலிவேர்
கவிழ்தும்பைவேர் | சாரணைவேர்
குப்பைமேனிவேர் | கீழ்காய்நெல்லிவேர்
சேராங்கொட்டை

**செய்முறை:** விளக்கெண்ணெய், வேப்பெண்ணெயை யும் சரி எடை எடுத்துக்கொண்டு, பெருங்காயம், கோட்டம் என்பனவும் சேர்த்துக்கொள்ளவும் மேற்சொன்ன சரக்கு களை அடுப்பிலேற்றி வேகவிட்டு இறக்கி வடிகட்டிக் கொள் ளவும்.

**பயன்:** வீக்கம் போகும். வெளித்தடவவும்.

## 42 கணைகள் தீர எண்ணெய்

**சரக்குகள் :**

விரை நீக்கிய கடுக்காய்—5 வராகன்
தேற்றான்விதை | தூதுவளை
வில்வமடல் | மஞ்சனத்திக்கொழுந்து
நாய்வேளை

**செய்முறை:** கடுக்காய் தேற்றான் நீக்கிய ஏனைய சரக்கு களை கொட்டைப்பாக்களவு அரைத்துக்கொள்ளவும். வெங்கா யம் சிரங்கை அளவு எடுத்துக்கொள்ளவும். வெங்காயத்துடன் தேற்றான்விதை, கடுக்காய் இரண்டையும் அரைத்துக்கொள் ளவும். 2 சேர் விளக்கெண்ணெயில் மூலிகைச்சாறுகளை விட்டுக் கலக்க வேண்டும். தேற்றான், கடுக்காய்ப் பொடி களைத் தூவி அடுப்பிலேற்றி எரிக்கவேண்டும். பின்னர்ப் பதத்தில் இறக்கி வைக்கவும்.

**அளவு:** பெரிய பிள்ளைகளுக்கு 1 சங்கு
சிறிய பிள்ளைகளுக்கு ½ சங்கு
கணை இல்லாத பிள்ளைகளுக்கு
எட்டு நாளைக்கு 1 தடவை கால் பங்கு
தரவும்.

**பத்தியம்:** கஞ்சி உணவு உப்பு வறுத்துப் பயன் படுத்தவும். அகத்தி இலைச்சோறு தரவும். பிள்ளைகட்கு விலா, உச்சியில் எண்ணெயைத் தடவவேண்டும்.

## 43 ஒடுவிப்புருதி

**சரக்குகள்:**

ஆடுதின்னாப்பாளை சமூலம்
தலைசுருளிவேர்
முட்காவேளைவேர்
கொல்லம் கோவைக்கிழங்கு
வெள்ளறுகு
சிறுகுறிஞ்சாவேர்
மருக்காரைவேர்
செந்தொட்டிக்கிழங்கு

**செய்முறை:** இவற்றை எல்லாம் பொடிபண்ணிக் கொண்டு வேப்ப எண்ணெயில் போட்டுக்காய்ச்சி, வடிகட்டிக் கொள்ளவும்.

**பயன்:** புண்ணில் வைத்துக் கட்டவும். வெளித்தடவ.

## 44 இரத்த திரட்சிக்கு

**சரக்கு:** பேய் குமட்டிக்காய்

**செய்முறை:** இதை வரகு வைக்கோலில் கோட்டை கட்டவும். பின் எடுத்துச் சாறு பிழியவும், இது கால் படி

ஊசிக்காந்தம் 1 பலம் (35 கி) சிவதை 1 பலம் (35 கி) கடுகு ரோகணி (35கி) கருஞ்சீரகம் 1 பலம் (35கி) கும்மட்டிச் சாற்றால் அரைத்துக் கொள்ளவும். விளக்கெண்ணெயில் சேர்த்து திருகுகள்ளிப்பால் எருக்கலைப்பால் தலா கால் படி விட்டுக் காய்ச்சவும். பதத்தில் எண்ணெயை எடுத்து, வடிகட்ட வேண்டும்.

**அளவு:** 2 துட்டு எடை ஒருநாள் விட்டு ஒருநாள் தரவும்.

**பத்தியம்:** புளி, புகையிலை.

**தீரும் நோய்கள்:** வலிகுன்மம், இரத்த திரட்சி.

## 45 இசிவு போக்க

**சரக்குகள்:**

கும்மட்டிப்பழச்சாறு – 5 படி
விளக்கெண்ணெய் — 1 படி
மிளகு பூண்டு
வசம்பு தலா 3 வராகன்

**செய்முறை:** இவற்றை எல்லாம் தட்டிப்போட்டு, மெழுகுபதத்தில் இறக்கிக்கொள்ளவும்.

**கால அளவு:** 3 நாட்கள் குடிக்கவும்.
6 நாட்கள் பத்தியம் காக்கவும்,

## 46 அண்ட வாதம் தீர

**சரக்குகள்:** மயிர் — 1 பிடி
நல்லெண்ணெய் — கால்படி

**செய்முறை:** இதனைக் காய்ச்சிக்கொடுக்கவும்.

**கால அளவு;** 3 நாட்கள் சாப்பிட்டு, 6 நாட்கள் பத்தியம் இருக்கவும்.

## 47 மயிர் கறுக்கத் தைலம்

**சரக்குகள்;**

| | |
|---|---|
| ஆளிசம்விதை | புங்கம்விதை |
| தான்றிவிதை | புன்னைவிதை |
| கடுக்காய் | காரகோல் |

**செய்முறை:** இவைகளைச் சம எடை எடுத்துக்கொண்டு அமுரி நீரில் 20 நாட்கள் ஊற வைக்கவும், பின்பு நிழற் புடம் வைக்கவும். உலர்ந்ததும், மிளகு நாழியுடன் (கால் படி) குழித்தைலம் எடுக்கவும்.

**பயன்:** வெளித்தடவ மட்டும்.

**தீரும் பிணிகள்:** வெடிசூலை, கண்டமாலை, சொறி சிரங்கு, குறைநோய் விடம் தீரும். குட்டம், சூலை, வெட்டை, மேகம், புழுவெட்டல், அரணைக்கடி, சிலந்திக்கடி குழிவாழை, முட்டுவாழை, தொடைவாழை, முதுகுவாழை, விலாவில் வாழை, ஆமையடி, ஊமையடி, சிலந்திவாழை, நுனிநாசி சிலந்திப்புற்று, உச்சிப்பிளவை தீரும். பெண்களுக்குக் கரப்பான்கட்டு, தடசிலந்தி, படைசிலந்தி, அல்குல் புற்று, பவுத்திரங்கள், பின்கரப்பான், முன்கரப்பான், உந்திப் புண், தொடைப்புற்று, துடிசூலை, மேகசூலை, அல்குல், இலைமேல்புண், கீழ்நாக்கு மேல்நாக்குப்புற்று, புரைவிழுந்த படுசிரங்கு இதற்கு எல்லாம் மேல் தடவவும். நல்லபாம்பு, விரியன், சூல்விரியன், குருட்டுஎலி, புடையன், தேள்பூரான், நட்டுவாகாலி, விஷமுள், மேல்தடவத் தீரும்.

**பத்தியம்:** புகையிலை, புளி, பச்சைமீன், கலவி கூடாது.

## 48 மேகத்தைலம்

**சரக்குகள்:**

செஞ்சந்தனம்
விலாமிச்சு
ஆவாரை பட்டை

**செய்முறை:** மேற்சொன்னவைகளைத் தலா 10 பலம் கொண்டுவந்து இடித்து, தூணி நீரில் (21. 5 லிட்டர்) போட்டு கஷாயம் வைக்கவும். எண்ணெய் நாழி விட்டு (1.3 லிட்டர்) நறுதீண்டி பலம் 5, பரங்கிப்பட்டை அரை பலம் (12 அரை கி.) கோட்டம் 5 பலம் என்பவற்றைக் கஷாயததால் அரைத்துக்கொள்ளவும். பின்பு எண்ணெயுடன் கலந்து, அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

**பயன்:** வெளிப்பிரயோகம். குளிக்கவும்.

**தீரும் நோய்கள்:** மேகம், நரைமயிர், பித்தம்.

**குளிப்பு:** வெந்நீரில் குளிக்கவும்.

## 49 வில்வ வேர்த்தைலம்

**சரக்கு:** வில்வ வேர்

**செய்முறை:** இடித்துத் தூணி நீரில் (21. 5 லிட்டர்) விட்டுக்கொண்டு, $\frac{1}{8}$ பங்காகக் குறுக்கவும். 16 நாழி எண்ணெய் விட்டு 4 பலம் சந்தனம் அரைத்துச் சேர்க்கவும். இதனை அடுப்பிலேற்றி எரித்து, மெழுகு பதத்தில் இறக்கவும்.

**பயன்:** குளிக்க

**தீரும் பிணிகள்;** வெப்பம் நீங்கும்.

## 50 குளிர்ச்சி எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| மணத்தக்காளிச்சாறு | 1 படி |
| நல்லெண்ணெய் | 2 சேர் |
| பனங்கற்கண்டு | 1 பலம் (35 கி.) |
| மிளகு | 10 பலம் |

**செய்முறை:** இவற்றை எல்லாம் கலந்துகொண்டு சூரிய புடம் வைக்கவும். வடிகட்டிப் பயன்படுத்தவும்.

**முறை:** காலையில் உண்ண.

**அளவு:** கரண்டி விதம். 1 வேளை மட்டும்.

## 51 குளிர்ச்சி எண்ணெய்

**சரக்குகள்:**

நன்னாரி
விலாமிச்சம்
சடைச்சி

**செய்முறை:** மேற்படி சரக்குகளை வகைக்கு 1 பலம் சாதிக்காய் 1, ஏலம், சிரகம், மிளகு வகைக்கு 2 வராகன் கல்கண்டு 2 வராகன் இவைகளை இடித்துப்போட்டு, எண்ணெய் சேர் 2ல் கலந்துகொள்ளவும். இதனைச் சூரியபுடத்தில் வைக்கவும்.

**அளவு:** 1 கரண்டி. 1 நாளைக்கு.

**தீரும் பிணிகள்:** சூடு, இளைத்த பிள்ளைகளுக்கு.

## 52 ஊறல் தீர

**சரக்குகள்:**

கோவைச்சாறு
எலுமிச்சங்கனிச்சாறு

**செய்முறை:** மாவிலிங்கப் பட்டையைத் தண்ணீர் ஊற்றி இடித்துச் சாறு 1 சேர் (280 கி.) எடுத்துக்கொள்ளவும். 1 சேர் (280 கி.) விளக்கெண்ணெயுடன் சேர்க்கவும். சூரியபுடம் வைக்கவும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் செய்யவும். மறுநாள் காய்ச்சி மிளகு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

முறை: உண்ண.

**தீரும் பிணிகள்:** பேதியாகும் ஊறல் போகும்.

## 53 மேகம்போக

**சரக்குகள்:**

பூவரசம் பட்டை
மருதம் பட்டை
கோவளம் பட்டை
நல்லெண்ணெய்

**செய்முறை:** 3ஐயும் சுரசம் செய்து. நல்லெண்ணெய் சம எடை எடுத்துக் கலந்து, அடுப்பிலேற்றிக் காய்ச்சிப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**அளவு முறை:** 3 நாட்கள் உண்ண.

## 54 பீன்சம், தலைவலி தீர

**சரக்கு:**

குரட்டாம் பழம், இலை, கொடி.

**செய்முறை:** குரட்டாம் பழம், இலை, கொடி இடித்த சாறு 1 சேர் (250 கி.) நல்லெண்ணெய் 1 சேர் (250 கி.) ஒன்றாகக் கலந்து மிளகு 5 வராகன், அபின் 1 வராகன் (3.5 கி.) பொடி பண்ணிச் சேர்த்துக்கொண்டு, தைல பதத்தில் கலக்கி, எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** 5 நாட்களுக்கு ஒரு முறை குளிக்க. மூக்கில் 1 துளி நசியம் செய்ய.

**தீரும் பிணிகள்:** ஒரு பக்கத் தலைவலி, பீனிசத் தலைவலி.

## 55 பைத்தியம் தீர எண்ணெய்

**சரக்குகள்:**

கையான்சாறு
இஞ்சிச்சாறு
கருவேம்பின் சாறு
எலுமிச்சம்பழச்சாறு
பொடுதலைச்சாறு
பொற்கொடுப்பைச்சாறு
பொற்சிந்தில்சாறு
முசுமுசுக்கைச்சாறு

**செய்முறை:** வகைக்கு சாறுகள் நாழி 1 (1.3 லிட்டர் அல்லது கால் படி) வீதம் எடுத்துக்கொள்ளவும். நல்லெண்ணெய் பசும்பால் தலா நாழி (1.3 லிட்டர் அல்லது கால்படி) இவற்றை ஒன்றாகக் கலக்கவும். இத்துடன் பச்சிலைச்சாறுகளையும் கலக்கவும். மலாக்காகட்டை,தேவதாரம். கிளியூரல் பட்டை பூலாங்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கிராம்பு, ஏலம், சாதிக்காய். மூந்திரிப்பழம், பேரீச்சம்பழம், சந்தனம் என்பன 1 பலம் (35 கிராம்) இவற்றுடன் வில்வவேர் சேர்த்துப் புனுகுச்சட்டம், சவ்வாது போட்டு அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் எடுக்கவேண்டும்.

**பயன்:** குளிக்க

**தீரும் பிணிகள்:** பித்தம், சோகை, மூலவியாதி. வாய் ஊறல், மஞ்சள்வாந்தி, மேல்வாதம். மண்டை இடி, ஒரு தலை நோய், கண் எரிச்சல், கண் நோய், காசம், காதடைப்பு, காதிரைச்சல், பயித்தியம்,

**அளவு:** 2 நாட்களுக்குத் தலைக்குத் தேய்த்துக் குளிக்கவேண்டும்.

## 56 மேக வெட்டை தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| எட்டிவேர் | 2 சேர் |
| வேப்பெண்ணெய் | ,, |
| சுக்கு | 10 பலம் |
| மரமஞ்சள் | ,, |
| கஸ்தூரி மஞ்சள் | 4 பலம் |
| கார்போக அரிசி | 4 பலம் |
| பெருஞ்சீரகம் | ,, |
| சீரகம் | ,, |
| பரங்கிப்பட்டை | ,, |
| கடுக்காய் | ,, |
| ஆனை எலும்புப் பொடி | எலுமிச்சை அளவு |
| உலர்ந்த நெருஞ்சில் சமூலம் | ,, |

**செய்முறை:** எட்டிவேரைத் தூள்செய்துகொண்டு வறுத்து எடுத்துக்கொண்டு, கம்பளியில் சலித்துக்கொள்ளவும். கடைச்சரக்குகளைப் பொடிசெய்து கொண்டு வேப்ப எண்ணெயிலிட்டுக் கலக்கவும். எட்டித்தூளையும் சேர்த்துக் கொள்ளவும். வடிகட்டவும். என்புப்பொடி சமூலத்தை எண்ணெயுடன் கலந்துகொண்டு சூரிய புடமாக 3 நாட்கள் வைக்கவும்.

**பயன்:** வெளித்தடவ

**முறை:** உண்ண

**கால அளவு:** கால் மண்டலம்

**உணவு:** நீரிச்சோறு, பூசணிக்காய், நல்லெண்ணெய் உளுந்து, புகையிலை, புளி, வெங்காயம், அகத்திக்கீரை பாகற்காய், கடுகு கூடாது. பசு நெய், பால் சாப்பிடவும். வாயு உணவு கூடாது.

வெந்நீரில் குளிக்கவும்.

## 57 சூலை கட்டு போக

**சரக்குகள்:**

| | |
|---|---|
| சேங்கொட்டை | 1 பலம் (35 கிராம்) |
| பரங்கிப்பட்டை | 2 பலம் |
| ஓமம் | 1 பலம் (35 கிராம்) |
| பூண்டு | ,, ,, |
| பனைவெல்லம் | ,, ,, |

**செய்முறை:** ஐந்து சரக்குகளையும் இடித்துப் பொடி செய்து, அமுரியில் தினம் 2 கழஞ்சு போட்டுக் கலக்கிக் குடிக்கவும்.

**அளவு:** 2 வேளை காலை, மாலை குடிக்க.

**உணவு:** கெட்டி வெந்நீர் சாதம் 10 நாட்கள்.

## 58 பேதிக்குக் குடிநீர்

**சரக்குகள்:**

விழுது இலை
பிரமி இலை
கற்றாழை மடல்

**செய்முறை:** இவைகளைச் சம எடை எடுத்து, 20 கடுக்காய் கூடப்போட்டு, மிளகு கால் பலம் சேர்க்கவும். இவற்றை முடிச்சுக்கட்டி, குறுணி நீர் (5. 3 லிட்டர்) விட்டு காய்ச்சவும். அரைக்கால் பங்காகக் குறுக்கி, இறுத்துக் கொள்ளவும்.

**உணவு:** மிளகுச்சோறு, இரவு சுக்குக் கஷாயம் சாப்பிடவும்.

## 59 சிவனார் வேம்புத் தைலம்

**சரக்குகள்:**

சிவனார் வேம்புச் சமூலம்
விழுது சமூலம்
அழிஞ்சில் வேர்

**செய்முறை:** சம எடையாக எடுத்துக்கொள்ளவும். உலர்த்தி, இடித்து, பானையில் போட்டு, சேங்கொட்டை 10 எண்ணிக்கையுடன் பூ புடம் வைத்து, தைலம் எடுக்கவும். பிங்கானில் வைத்துக்கொள்ளவும்.

**அளவு:** வெருகடி பிரமாணம்.

புதுப்பானைச்சோறு உண்ணவும். வெந்நீரில் சாதம் சாப்பிடலாம்.

**தீரும் பிணிகள்:** குட்டரோகம், மேகம், கிரந்திகள் கடிகள்.

**குறிப்பு:** பத்தியம் 10 நாட்கள் மறு பத்தியம் பத்து நாட்கள் இருக்கவும்.

## 60 குட்டரோகம் போக

**சரக்குகள்:**

| | |
|---|---|
| இரசம் | 1 வராகன் (3. 5 கி.) |
| பாடாணம் | 1 ,, |
| கந்தகம் | 1 ,, |
| கௌரி | 1 ,, |
| தாளகம் | 1 ,, |
| மனோசிலை | 1 ,, |
| துத்தம் | 1 ,, |
| துருசு | 1 ,, |
| நாபி | 1 ,, |
| நிர்விஷம் | 1 ,, |
| நேர்வாளம் | 13 ,, |
| சேங்கொட்டை | 5 ,, |
| கார்போக அரிசி | 3 ,, |
| நல்லெண்ணெய் | 2 சேர் |
| நிலாவாரைப் பட்டை | 1 பலம் (35 கி.) |

**செய்முறை:** அரைத்து எண்ணெயுடன் சேர்த்துக் குழப்பி, எரித்து, வடித்து வைத்துக்கொள்ளவும்.

**பயன்:** குட்டரோகம் போகும்.

## 61 குழந்தைகள் பெருக்க நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நற்சீரகம் | 5 பலம் |
| கோட்டம் | கால் பலம் |
| சர்க்கரை | 6 பலம் |
| மிளகு | கால் பலம் |
| சுக்கு | * பலம் |
| திப்பிலி | * பலம் |
| சிற்றரத்தை | 5 பலம் |
| ஏலம் | கால் பலம் |
| கிராம்பு | ,, |
| கடுக்காய் | * பலம் |
| கடுகுரோகணி | * பலம் |
| பசுநெய் | 5 படி |

**செய்முறை:** கடைச் சரக்குகளை அரைத்து, நெய்யுடன் கலந்து அடுப்பிலேற்றிப் பதத்தில் இறக்கிக்கொள்ளவும்.

**அளவு:** காலை, மாலை தக்கவாறு

**தீரும்பிணிகள்:** கணைநெய், மெலிந்த உடல்பெருக்க

## 62 மாந்தம் தீர எண்ணெய்

**சரக்குகள்:**

இண்டங்கொழுந்து
விளக்கெண்ணெய்

---

* இதன் அளவு இன்னதென்று தெரியவில்லை.

வெள்ளைக்காக்கரட்டான்வேர்

வசம்பு

மிளகு

வெங்காயம்

பச்சைநெல் உமி

ஏலம்

**செய்முறை:** இண்டங்கொழுந்தை எலுமிச்சங்காயளவு அரைத்து ஆமணக்கு எண்ணெய் அரைபடியில் கலக்கவும். ஏனைய சரக்குகளை எண்ணெயுடன் கலக்கவும். அடுப்பிலேற்றி, எரித்துப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**தீரும் நோய்கள்:** கணைமாந்தம், பொருமல், ஊது மாந்தம் பட்சிதோடம் என்பன.

**குறிப்பு:** வெளியிலும் தடவலாம்.

## 63 மகப்பேறு உண்டாக

**சரக்குகள்:**

பிரண்டை சமூலம்

நல்லெண்ணெய் — 1 படி

**செய்முறை:** பிரண்டை சமூலத்தை உலர்த்திப் பொடி செய்து, எண்ணெயுடன் கலந்துகொண்டு வடிகட்டிப் பயன் படுத்தவும்.

**அளவு:** 1 கரண்டி

**முறை:** உட்கொள்ளவும்.

**குறிப்பு:** இளவெதுப்பாய் பிரண்டை சமூலத்தை வெதுப்பி வெய்யிலில் வைத்துக் கலந்துகொள்ளவும்.

## 64 பிள்ளைகளுக்கு நெய்

**செய்முறை:** அதிமதுரம், சீரகம், ஏலம், செண்பகப்பூ, தண்ணீர்விட்டான் கிழங்கு, குழிவிட்டான்சாறு என்பன வற்றை எடுத்துக்கொண்டு பசு நெய்யில் அடுப்பேற்றி எரித்துப் பதத்தில் இறக்கிப் பயன்படுத்தவும். உள்ளுக்கு உண்ண.

## 65 கரப்பான் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| புளிநரளைக்கிழங்கு | |
| சாரணைவேர் | |
| அவுரிவேர் | |
| கள்ளிப்பால் | 2 நாழி |
| விளக்கெண்ணெய் | 16 நாழி |

**செய்முறை:** இவைகளை விளக்கெண்ணெயில் கலந்து அடுப்பேற்றி எரித்துப் பதத்தில் எடுக்கவும்.

**முறை:** உட்கொள்ள, வெளித்தடவ.

**உணவு:** வெந்நீர் சாதம்.

## 66 சகல கிரந்திக்கும் தீர எண்ணெய்

**சரககுகள்:**

குரட்டைக்கிழங்கு
சிற்றாவரைக்கிழங்கு
கொடிவேலிவேர்
குறிஞ்சாவேர்
கும்மட்டி
மாதளைவேர்
பெருமருந்து

கருங்கொடி விதை
வேளைவேர்

**செய்முறை:** இவைகளைப் பால்வார்த்து அரைத்துக் கொள்ளவும். இலுப்பை எண்ணெய், வெங்காயம், பூண்டு, வசம்பையும் சேர்த்துக்கொள்ளவும். இக்கல்கத்தை அடுப்பி லேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

**அளவு:** தேவையான அளவு வெளித்தடவ

**தீரும்பிணிகள்:** கிரந்தி

**உணவு:** வெந்நீர் சாதம்.

## 67 கொள்ளிக்கரப்பான் தீர

**சரக்குகள்:**

பூதகரப்பான்பட்டை 1 பலம் (35கி)
பூண்டு
வசம்பு தலா காசெடை
கிளவைப்பட்டை 1 பலம் (35கி)
முருங்கைப்பட்டை ,,
எண்ணெப்பட்டை ,,

**செய்முறை:** இவைகளை அரைத்து நல்லெண்ணெயு டன் கலந்துகொண்டு எரித்துப் பதத்தில் எடுத்துக்கொள்ள வும்.

**அளவு:** உட்கொள்ள, வெளித்தடவ.

**உணவு;** வெந்நீர் சோறு.

## 68 குளுத்தி எண்ணெய்

**சரக்குகள்:**

சிற்றாமணக்குக்கொட்டை
வில்வ இலை
பொன்னாவாரை சமூலம்

சிற்றாமணக்குக் கொட்டையை வில்வ இலையுடன் போட்டு வேகவைக்கவும். பின்பு காயவைத்து, இடித்துக் கொள்ளவும். பொன்னாவாரை சமூலத்தை 8 பங்கு தண்ணீர் விட்டுக் கஷாயம் காய்ச்சவும். காய்ச்சி எடுத்த கஷாயத்துடன் கொட்டையைச் சேர்த்து மீண்டும் எரித்து, எண்ணெய் எடுத்துக்கொள்ளவும். 2 சேர் எண்ணெய் எடுத்துக் கொண்டு, சிமைக்கடுக்காய் ஒன்றரை, கடுகுரோகணி ஒன்றரை, நெல்லிமுள்ளி முக்கால், கருஞ்சீரகம் முக்கால், தாளிசபத்திரி 6, சீரகம் 6, மிளகு முக்கால், வெந்தயம் முக்கால், சாதிக்காய் முக்கால் பலம் பொடிசெய்து போடவும். கலக்கிச் சூரிய புடத்தில் வைத்து வெது வெதுப்பாக்கவும்.

**குறிப்பு:** கடுக்காய் விதை நீக்கவேண்டும்.

**அளவு;** விசம் சேர் உள்ளுக்கு உண்ண.

**உணவு:** மிளகுச்சாறு அன்னம், துவரம்பருப்புச் சட்டினி, மாலை கறுஞ்சிரகக் கஷாயம் குடிக்கவும்.

## 69 உடல் பெருக்க நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வசம்பு | மிளகு |
| பூண்டு | பேயன் வாழைக் கிழங்கு |
| பசு நெய் | பசும்பால் |

**செய்முறை:** வசம்பு, மிளகு பூண்டு தலா 1 கழஞ்சு (4. 4 மி. கி.) வீதம் எடுத்து அரைத்துக்கொள்ளவும். பேயன் வாழைக்கிழங்கு தேங்காய் அளவு அரைத்துக் கொள்ளவும். இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, பசும் பாலில் கலக்கி, நாழி பசு நெய்யுடன் கலந்து (கால் படி) அடுப்பிலேற்றி எரித்துக்கொள்ளவும்.

---

**நூலில் 13ம் எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ளது.**

**அளவு:** காசெடை

**முறை:** உட்கொள்ள

**தீரும் பிணிகள:** உடல் பருக்கும். பிணிகள் யாவும் தீரும். இச்சா பத்தியம்.

## 70 உலர்ந்துபோகும் பிள்ளை பெருக்க

**சரக்குகள்:**

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | 1 படி | |
| வேலிப்பருத்திச்சாறு | ,, | |
| கருவை இலைச்சாறு | ,, | |
| பொடுதலைச்சாறு | ,, | |
| பேய் பாச்சோத்தி இலைச்சாறு | | 1 படி |
| பொன்னாங்காணி சமூலம் | | ,, |
| மிளகு | | |
| சீரகம் | | |
| கருஞ்சீரகம் | | |
| வெளிச்சைப் பிசின் | தலா கால் பலம் | |

**செய்முறை:** அனைத்துச்சாறு, விளக்கெண்ணெயையும் கலந்துகொள்ளவும். கடைச்சரக்குகளைப் பொடி செய்து, எண்ணெயுடன் சேர்த்து, அடுப்பிலேற்றி எரித்து எடுத்துக்கொள்ளவும். வடிகட்டிப் பயன்படுத்தவும்.

**அளவு:** காசெடை உண்ண, காலை, மாலை.

**பயன்:** உடல் பருக்கும்.

---

1 இந்நூலில் 20வதாக இது இடம்பெற்றுள்ளது.

2 இந்நூலில் 33வதாக இடம்பெற்றுள்ளது.

## 71 இரத்த பித்தம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நொச்சி இலைச்சாறு | 5 படி |
| எலுமிச்சம் பழச்சாறு | ,, |
| நெல்லிக்காய்ச் சாறு | ,, |
| பசு நெய் | கால் படி |

**செய்முறை:** அனைத்தையும் கலந்து, அடுப்பிலேற்றிப் பதத்தில் எரித்து எடுத்துக்கொள்ளவும்.

## 72 சன்னிக்குத் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| எருக்குப்பால் | கள்ளிவேர் |
| முருங்கை வேர் | தூதுவளை வேர் |
| சிறுவழுதளை வேர் | கண்டங்கத்திரிவேர் |
| நாய்வேளை வேர் | சாரணை வேர் |
| மூக்கரட்டை வேர் | நுணா வேர் |
| உள்ளிப் பூண்டு | வசம்பு |

**செய்முறை:** மேற்படி சரக்குகளைச் சமஎடை எடுத்துக் கொள்ளவும். நறுக்கிக்கொண்டு, பிழிந்து சாறு எடுத்துக் கொண்டு நல்லெண்ணெயுடன் கலக்கவும். அடுப்பிலேற்றி எரித்து, பதத்தில் வடிகட்டவும்.

**அளவு:** உண்ண, வெளித்தடவ.

**பயன்:** சன்னி வாதம் தீரும்.

## 73 மண்டைக்கரப்பான் தீர

**செய்முறை:** தலைசூடி வேர்ப்பட்டையை இடித்து சாறு எடுத்துக்கொண்டு பசுவின் நெய்யில் வேகவிடவும்.

**பயன்படுத்தும் முறை:** தலையில் தடவி, நாசியில் வார்த்து, உள்ளே உண்ணத் தரவும். மேலுக்கும் பூசலாம்.

**தீரும் பிணிகள்:** மண்டை கரப்பான், ஓடு கரப்பான், கட்டு கரப்பான்.

## 74 மண்டை வியாதி தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| சிற்றாமுட்டி வேர் | |
| குன்றிமணி வேர் | |
| குதிரைவாலி வேர் | |
| சாரணை வேர் | |
| கள்ளி | |
| அரத்தை | |
| சதகுப்பை | |
| விளக்கெண்ணெய் | அரைக்கால் படி |
| நல்லெண்ணெய் | ,, |
| நார்த்தம்பழச்சாறு | ,, |
| ஆதண்டை இலைச்சாறு | அரைப்படி |
| பசும் பால் | 1 படி. |

**செய்முறை:** மேற்சொன்ன வேர்களை 1 பலம் வீதம் எடுத்துக் கொள்ளவும். சதகுப்பை 1 பலம் (35 கி.) ஆதண்டை இலையை காடி வார்த்தரைத்துச் சாறு அரை படி எடுத்துக்கொள்ளவும். அனைத்தையும் பசும் பாலில் கலந்து, அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் எடுக்கவும்.

2 நல்லெண்ணெயில் சாரணை வேரைப் போட்டு சூரிய புடம் வைத்து, எடுத்துக்கொள்ளவும்.

3 வெதுப்படக்கி வேர், குதிரைவாலி வேர், இசங்கு வேர், கிளா வேர், வசம்பு, பூண்டு சேர்த்து நல்லெண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றி எரித்து எடுக்கவும்.

4 தேங்காய் துருவல் செய்து, வறுத்து ஒத்தடம் தரவும்.

**பயன்:** வெளித்தடவ, குளிக்க, தலைநாசியில் தடவ.

## 75 சுக்குத் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| எண்ணெய் | ககா (1) |
| சுக்கு | 5 பலம் |
| தண்ணீர் | 10 படி |

**செய்முறை:** கலந்துகொண்டு, அரைக்கால் படியாக வற்றக்காய்ச்சவும். பசும்பால் 2 படி. வெட்பாலை, விளவரிசி, சிற்றரத்தை, சிறுதேக்கு, சந்தனம், சிறுமூலம், கோட்டம், திரிபலை, திரிகடுகு, நன்னாரிவேர், சடாமாஞ்சில், கச்சோலம், சிறுநாகப்பூ, மஞ்சிட்டி, இருவேலி, அதிவிடையம், சமுத்திராப்பச்சை, மகாப்பூ, திப்பிலிமூலம். தேவதாரம், சந்தனம், குக்கில், விலாமிச்சவேர், சாதிக்காய் வகைக்கு 1படி (35 கி) வீதம் இவைகளை 1 படி எண்ணெய்க்கு 1 பலம் வீதம் மொத்தமாகக் கணக்கிட்டு எண்ணெய்க்குத் தக்கவாறு எடுத்துக்கொள்ள வேண்டும். இவைகளைப் பொடி செய்து எண்ணெயுடன் கலந்து, அடுப்பேற்றி எரித்துப் பதத்தில் வடிகட்டவேண்டும்.

**பயன்:** குளிக்க

**தீரும் நோய்கள்:** பீனிசம் நாசியில் இரத்தம்,நீரேற்று தோடம்.

## 76 வாதசன்னி போக

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கந்தகம் | மனோசிலை |
| தாரம் | இலிங்கம் |

வெங்காரம் துத்தம்
இரசம்

**செய்முறை:** இலிங்கம், இரசம் 1 வராகன் (3. 5கி) ஏனைய 2வராகன் எலுமிச்சம்பழச்சாற்றில் அல்லது காடியில் அரைத்து, பழந்துணியில் தடவித், திரித்துக்கொள்ளவும், நல்லெண்ணெய் உழக்கு, வேப்பெண்ணெய் உழக்கு. ஆமணக்கு நெய் உழக்கு மூன்றையும் கலந்துகொண்டு, திரியை ஒரு சலாகையில் செருகி வைக்கவேண்டும். திரியை எண்ணெயில் நனைத்துக் கொளுத்தி விடவும். சிறிது சிறிதாகச் சிந்தும் எண்ணெயை ஒரு கலத்தில் பிடிக்கவும்.

இது சுடர் தைலம் ஆகும்.

**பயன்:** வெளியில் பயன்படுத்த உள்ளுக்குக் காசெடை உண்ண வெளியில் தொளை போடவும். சிறிது காதில் விடலாம்.

**கால அளவு:** 14 நாட்கள்.

**தீரும்பிணிகள்:** சகல வாதம், சன்னி, பாரிசவாதம், கொள்ளுப்பொடியைத் துவட்டிப் போடவும்.

## 77 குறிஞ்சி எண்ணெய்

**சரக்குகள்:**

குறிஞ்சிவேர் சாரணைவேர்
அமுக்ராவேர்

**செய்முறை:** வகைக்கு 16 பலம் எடுத்துக்கொண்டு 48 நாழி நீர்விட்டுக் கால்பங்கு குறுக்கவும். தேவதாரம் வேர், கொம்பரத்தை, சதகுப்பை அனேக இவை கழஞ்சு (4.4மி.கி.) அரைத்துக் கல்கமாக்கவும். நாழி (கால்படி, 1. 3 லிட்டர்) அளவு நல்லெண்ணெயில், கரைத்துப் பதத்தில் எரித்து எடுக்கவும்.

**தீரும் பிணிகள்:** நெஞ்சுவலி, கை கால் குடைச்சல் ஒருநாள் விட்டு ஒருநாள் தேய்த்துக் குளிக்கவும். பின்பு 4 நாட்களுக்கு ஒருமுறை பயன்படுத்தவும்.

**உணவு:** பன்றிக்கறி, பாகல் கூடாது.

**குறிப்பு:** நத்தாடர்ந்து 40 நாட்கள் கூடாது.

## 78 சிறு குறிஞ்சி எண்ணெய்

**சரக்குகள்;**

| | |
|---|---|
| சிறுகுறிஞ்சான்வேர் 12 பலம் | கச்சோலம் |
| பெருங்காயம் | ஓமம் |
| சந்தனம் | சதகுப்பை |
| இந்துப்பு | செல்லியம் |
| சிறுமூலம் | சீரகம் |
| சடாமாஞ்சில் | அமுக்ராவேர் |
| அரேணுகம் | நன்னாரிவேர் |
| அகில் | அரத்தை |
| மஞ்சள் | குங்கிலியம் |

**செய்முறை:** இவைகளை வகைக்கு 1 கழஞ்சு (4. 4 கி) விதம் அரைத்துக் கல்கமாக்கி எண்ணெயில் கலந்து, அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் வடிகட்டிக்கொள்ளவும்.

**பயன்:** நசியமாக

**தீரும் பிணிகள்:** சகலவாதம், நெஞ்சுவலி, கை கால் குடைச்சல். பத்தியம் கடைபிடிக்கவேண்டும்.

## 79 நொச்சி எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நொச்சிச்சாறு | பதக்கு |
| வெள்ளாட்டு மூத்திரம் | ,, |

**செய்முறை:** நொச்சிவேர் 32ஐ தண்ணீரிலிட்டு, எரித்து, கஷாயமாக்கவும். இத்துடன் தேவதாரம், குந்துருக்கம், அகில், அரத்தை, இந்துப்பு, கொடிவேலிவேர், ஓமம், அதிமதுரம், கோட்டம், குணடகமூலம்-இருகழஞ்சி வகைக்கு எடுத்து அரைத்துக் கல்கமாக்கவும். நொச்சிவேர், புறத்தோல் 12 கழஞ்சி, பூநாகம் நாழி (கால்படி) கல்கத்துடன் சேர்த்தரைத்து, எண்ணெய் (அரைப்படியுடன) இரு நாழியுடன் கலந்து அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவேண்டும்.

**பயன்:** உள்ளுக்கு உண்ண.

**தீரும் நோய்கள்:** வாதப்பிணிகள், பக்கவாதம், சுரோணிதவாதம் 30-ம் தீரும்.

## 80 பயித்தியத்துக்கு எண்ணெய்*

"முற்றாத மொழிமடவில் ஒன்று கேளீர்
 முதுபித்தமாய் கிடந்து சுழற்றிடாதே
கற்றாழை வேரினுட சாறுநாழி அதிமதுரம்ஓமம்
 கழஞ்சு அரைத்தேஎண்ணெயிடு
நாழி வெந்திறக்கி சற்றே தேய்ப்பீராகில்
 பித்தம் போகும் சத்தியமே"

**சரக்குகள்:**

கற்றாழைச்சாறு மதுரம் ஓமம்

**செய்முறை:** கற்றாழை வேர்ச்சாறு நாழி (கால்படி) மதுரம், ஓமம்(4·4மி.கி) கழஞ்சு, பொடிசெய்துகொண்டு, இரு நாழி (அரைப்படி) எண்ணெயில் கலந்து, அடுப்பிலேற்றி, எரித்து எடுத்துக்கொள்ளவும், பதத்தில் வடிகட்டி உபயோகப்படுத்தவும்.

**பயன்:** குளிக்க

**தீரும் பிணி:** பைத்தியம்.

---

* ஓர் அடி இல்லை.

## 81 முசுமுசுக்கை நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| முசுமுசுக்கைச் சாறு | 3 நாழி |
| பசும்பால் | 6 நாழி |
| கறுப்புக்கட்டி | 2 கழஞ்சு |
| தான்றிக்காய் | 4 பலம் |

**செய்முறை:** இவற்றை எல்லாம், பச்சிலை சாற்றிலரைத்துக்கொண்டு, அடுப்பிலேற்றி, எரிக்கவும், நெய் 1 உழக்கு எண்ணெய் விட்டு, ஒரு கொதிவந்தவுடன் இறக்கி எடுக்கவும்.

**பயன்:** தினம் ஒரு நெல்லிக்காயளவு உண்ணவும்.

## 82 இளநீர்த் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| இளநீர் | குறுணி (5 லிட்டர்) |
| நல்லெண்ணெய் | 3 நாழி |
| பால் | 3 நாழி |
| சீந்தில் | சீதா |
| செங்கழுநீர் | பொன்னாங்கண்ணி |
| நீர்ப்பூலா | குண்டுமணி |
| கற்றாழை | சிறுகீரை |
| தானி | குன்றிமணி |
| ஓரிதழ்த்தாமரை | பூசணிக்காய் |
| தாமரைக்கிழங்கு | கொத்தான் |
| வேலிப்பருத்தி | பேயன் வாழைக்கிழங்கு |

வகைக்கு 3 நாழி

**செய்முறை:** இளநீர் குறுணி (5. 3 லிட்டரில்) சரக்குகளைப்போட்டு 3ல் 1 பங்காக எரித்து எடுத்துக் கொண்டு, பின், நல்லெணணெயைக் கலக்கவும், கோட்டம், அதிமதுரம்,

ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, சீரகம், திப்பிலி, மஞ்சிட்டி, அரத்தை, செவ்வியம், சிறுதேக்கு, செண்பகப்பூ, செவ்வல்லிக்கொடி, சந்தனம், புனுகுச்சட்டம், பச்சைக்கற்பூரம், மரமஞ்சள், சதாவரி, அகில், ஆலவிழுது துளிர், விலாமிச்சைவேர் வகைக்கு ஒருகழஞ்சு (4.4கி) இருவேலி அரைத்துக்கொண்டு, பசுவின்பால் நாழி, குமிழம் பழச்சாறு 3 நாழி, நெல்லிச்சாறு 3 நாழியில் கலந்து எண்ணெயுடன் சேர்க்கவும். மீண்டும் அடுப்பிலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கி, வடிகட்டிப்பயன் படுத்தவும்.

**பயன்:** குளிக்க.

**குறிப்பு:** தைலம் இறக்கும் முன்னர், நெய் செய்து கொள்ளலாம்.

## 83 நெய்க் குழம்பு

**சரக்குகள்:**

பூசணிக்காய் வெள்ளரிக்காய்
குமட்டிக்காய் வள்ளிக்கிழங்கு
சிந்தில்தண்டு குன்றிஇலை
முசுமுசுக்கை பொன்னாங்கணி
நீர்ப்பூலா குமிழம்பழம்
சீதேவி செழுங்கிழங்கு முசுறுமுட்டையை
கழுதைப்பால் குறுணி [வகைக்கு 2 நாழி
நெய் நாழி (கால்படி)
பேயன்வழைப்பழம் 20
முந்திரிப்பழம் உரி
சீனி இருநாழி
பனங்கறுப்புக்கட்டி இருநாழி
அதிமதுரம் கோட்டம்
செண்பகப்பூ ஏலம்
கிராம்பு சாத்திரபேதி
சந்தனம் காலிமண் — கழஞ்சு
(4.4கி) வகைக்கு

**செய்முறை :** இவைகளை எல்லாம் பொடிசெய்து, அரைத்து, சாறுகளுடன் கலந்துகொண்டு, அடுப்பிலேற்றி எரித்துப்பதத்தில் எடுத்துக்கொள்ளவும். வடிகட்டிப் பயன் படுத்தவும்.

**அளவு :** ஒரு அம்மானை அளவு.

**தீரும் நோய்கள் :** பித்தம், கிறுகிறுப்பு, இரத்த பித்தம்.

## 84 பித்தம் தீர

1 எலுமிச்சம்பழத் தண்ணீரில் தலையில் தேய்த்துக் குளிக்க.

2. நல்ல மஞ்சளை அரைத்துப் பசும்பாலில் கரைத்துக் குடிக்க.

3 செங்கழுநீர்க்கிழங்கு, கிராம்பு, சுக்கு, மாதுளம்பழத் தோல், அதன் சமூலம் 3 கழஞ்சு விதம் எடுத்துக்கொண்டு, கழுநீரில் பிசைந்துகொள்ளவும். இத்துடன் தேன்சேர்த்து மறுநாள் உழக்கு கழுநீரில் வடிகட்டிக் குடிக்கவும்.

**தீரும் பிணிகள்:** பித்த விகாரம்

## 85 பேதி எண்ணெய்

**சரக்குகள் :**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | அரைக்கால்படி |
| பசும்பால் | ,, |
| முசுமுசுக்கைச்சாறு | ,, |

**செய்முறை:** ஒன்றாகக் கலந்துகொண்டு, வடிகட்டிக் குடிக்கவும், பேதியாகும்.

**குறிப்பு:** 4, 6 முறை பேதியானால், புளி கூட்டாமல் வெங்காயம், மிளகுநீர் செய்து விளாங்காயளவு சாதம் போட்டுப் பிசைந்து உண்ணவும், முசுமுசுக்கை இலைக்கறி, வெங்காயம் சேர்த்து, கடைந்து உண்ணவும்.

## 86 மிளகுத் தைலம்

**சரக்குகள்:**

முற்றின வெள்வேலம்பட்டை — 18 பலம்

| | |
|---|---|
| மஞ்சட்டி | சாதிக்காய் |
| கச்சோலம் | சந்தனம் |
| இருவேலி | நன்னாரி |
| மஞ்சள் | செண்பகப்பூ |

வசுவாசி வகைக்கு 1 கழஞ்சு (4.4கி)

நல்லெண்ணெய் கால்படி

பசும்பால்—குறுணி (5.3லிட்டர்)

**செய்முறை:** முற்றின வெள்வேலம் பட்டை 18 பலத்தை, 8 மரக்கால் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். கடைச் சரக்குகளைப் பொடிசெய்து பாலில் அரைத்து, கரைத்து, கஷாயத்தில் கலக்கவும். நல்லெண்ணெய் கால் படியைச் சேர்த்து, அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கிக்கொள்ளவும்.

**பயன்:** 108 வகை மன நோய்கள் போகும்.

## 87 விளாம்பட்டைத் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளாம்பட்டை | 6 மரக்கால் |
| கந்தகம் | 2 பலம் |
| தகரை விதை | ,, |
| சித்திர மூலம் | ,, |
| அமுக்ரா வேர் | ,, |

**செய்முறை:** வேர்களை நறுக்கி, ஒன்றாக வைக்கவும். கடைச்சரக்கை பொட்டணம் கட்டி, கூடவைத்து, பூப்புடத்தில் தைலம் இறக்கவும்.

**பயன்:** உட்கொள்ள, கிரிகைகள்[1] 18 குட்டம் நீங்கும். கார்போக அரிசி, தகரைவிதி அரை பலம் வீதம் தலா பொடிசெய்துகொண்டு, தைலம் பண விடையுடன் (4. 88 கி.) 49 நாட்கள் உட்கொண்டு, வெளியிலும் பூசவும்.

**உணவு:** கசப்பு, புளிப்பான உணவு, வெள்ளாட்டு உப்புக்கண்டம், விரால், குறவைக்கருவாடு, கெளுத்திக் கருவாடு, கீரை, அதன் தண்டு, அவரைப்பிஞ்சு ஆகும். உஷ்ணம் அதிகரிக்க பால், நெய் சேர்த்துக் கொள்ளலாம்.

## 88 நார்த்தம்பழத் தைலம்

**சரக்குகள்:**

நல்லெண்ணெய் நாழி (1.3 லிட்டர் கால்
பசும்பால் ,, படி)
எலுமிச்சம்பழச்சாறு
நாரத்தம்பழச்சாறு
பொன்னாங்கண்ணி
கையான்
ஆதண்டை இலை
சவரிக்கொழுந்து
சிறுகீரை
முசுமுசுக்கை இலை வகைக்கு நாழி (கால் படி)

மதுரம்
ஏலம்
கோட்டம்
செண்பகப்பூ
கிராம்பு

---

1 18 வகையான மனநோய்கள் என்பது பொதுவழக்கு.

சதகுப்பை
மரமஞ்சள்
திரிகடுகு
சீரகம்
பூண்டு
வசம்பு 1 காசெடை வகைக்கு
பஞ்சதிரவியம்
வகைக்கு 5 பலம்

**செய்முறை:** பொடி செய்துகொண்டு சாறுகள், பழச் சாறு, பால் எண்ணெயுடன் கலந்துகொண்டு, அடுப்பி லேற்றி, எரித்து, பதத்தில் இறக்கி, வடிகட்டவும்.

**தீரும் நோய்கள்:** மண்டை-இடி, பயித்தியம், வாதம் பிடரிவாதம், சூசிகாவாதம், கை, கால் எரிவு.

## 89 வெள்ளறுகு நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வெள்ளறுகுச்சாறு | 16 நாழி |
| பசும்பால் | (கால் படி) நாழி |
| மஞ்சட்டி | விலாமிச்சவேர் |
| அதிமதுரம் | பேரீச்சம்பழம் |
| முத்தக்காசு | முந்திரிப்பழம் |
| செங்கழுநீர்க்கிழங்கு | தாமரை வளையம் |

குமிழம்வேர் வகைக்கு 3 கழஞ்சு
நெய் நாழி (கால் படி)

**செய்முறை:** இவைகளைப் பொடிசெய்து எடுத்துக் கொண்டு, சாறு, பால், நெய்யுடன் கலந்துகொண்டு, 3 நாட் கள் வைக்கவும். பின் வடிகட்டிப் பயன்படுத்தவும்.

**தீரும் பிணிகள்;** இரத்த ரோகங்கள் மூக்கில்விட மூக்கிலிருந்து இரத்தம் விழுவது நிற்கும். உட்கொள்ள வாயில் இரத்தம் வடித்தல், காதில் இரத்தம் வருதல், கண் ணில் இரத்தம் வருதல், இரத்த வாந்தி நிற்கும்.

## 90 பிருங்காமலத் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கையான்சாறு | பதக்கு |
| நெல்லிச்சாறு | ,, |
| சிந்தில் சாறு | வகைக்கு 5 படி |
| ஆலவிழுதுச்சாறு | ,, |
| சிதேவிசெங்கழுநீர்ச்சாறு | ,, |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | ,, |
| வாழைக்கிழங்குச்சாறு | ,, |
| நல்லெண்ணெய் | ,, |
| பசும்பால் | குறுணி (5.3 லிட்டர்) |

**செய்முறை:** இவைகளை அரைத்துக் கல்கமாக்கவும். பெருங்குறும்பை, சடாமாஞ்சில், வசம்பு, கோட்டம், கல் மதம், சந்தனம், அதிமதுரம், தேவதாரம், மஞ்சட்டி, வெட்டிவேர், விலாமிச்சவேர், முத்தக்காசு, தாமரைவளையம் செண்பகப்பூ, அசோகப்பூ, தாமரைப்பூ, நெய்தல், வளைபூ பாரிசாதகம், கற்பூரம் இவைகளை நாழி எண்ணெய்க்கு (அரை படி) 5 வராகன் என்ற கணக்கில் எடுத்துக்கொள்ள வும். கல்கத்தைச்சாறு எண்ணெயுடன் கலந்துகொண்டு அடுப்பிலேற்றி எரிக்கவும். பதத்தில் வடிகட்டிக்கொண்டு மணமுள்ள பூக்களின் வாசனையைக் காட்டி, குங்குமப்பூ கஸ்தூரியைப் பொடித்து, அரைத்துச் சேர்த்துக் கொள்ள வும்.

**குறிப்பு:** பத்து நாழி மெதுவாக எரித்து எடுக்கவும்.

## 91 குண்டலாதித் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| சங்கம்வேர்ச்சாறு நாழி (கால் படி) | |
| நல்லெண்ணெய் | ,, |
| மிளகு | 4 அழிஞ்சில் விதை |
| கோட்டம் தலா கழஞ்சு (4.4 மி.கி.) | |

**செய்முறை:** கடைச்சரக்குகளை அரைத்துக் கரைத்து எண்ணெயுடன் சேர்த்துக்கொண்டு, அடுப்பிலேற்றி எரித்து எடுத்துக்கொள்ளவும். ஏழு நாட்கள் தானியப்புடம் வைக்கவும்,

**தீரும் பிணிகள்:** கடிவிடம், மயிர் உதிர்தல், தினவு.

## 92 இளநீர் எண்ணெய்

**சரக்குகள்:**

| | | | |
|---|---|---|---|
| இளநீர் | 4 படி | கற்றாழை வேர்ச்சாறு | 5 படி |
| பசும்பால் | 5 படி | எண்ணெய் | 5 படி |
| அதிமதுரம் | 5 படி | சந்தனம் | |
| குங்குமப்பூ | | நன்னாரி வேர் | |
| அகில் | | கோட்டம் | |
| ஏலம் | | இலவங்கம் | |
| பச்சிலை | | சிறுநாகப்பூ | |
| இருவேலி | | தகரம் | |
| சடாமாஞ்சில் | | தண்ணீர்விட்டான் கிழங்கு | |
| எலுமிச்சை வேர் | | | |
| செண்பகப்பூ | | கச்சோளம் | |
| சாதிக்காய் | | கடுகுரோகணி | |
| தாமரை வளையம் | | முத்தக்காசு | |
| புனுகு | | செங்கழுநீர்க்கிழங்கு | |
| பச்சைக்கற்பூரம் | | | |

வகைக்கு வராகன் எடை (3. 5 கி.)

**செய்முறை:** பொடிசெய்து சாறு, இளநீர், எண்ணெயுடன் கூட்டி அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் எடுத்துக் கொள்ளவும்.

**தீரும் பிணிகள்:** குளிக்கப் பைத்தியம் தீரும்.

## 93 அசன வில்வாதித்தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வேங்கை சிராய் | 2 பலம் |
| வில்வ பத்திரி | ,, |
| குறுந்தொட்டி வேர் | ,, |
| சிந்தில் கொடி | ,, |

**செய்முறை:** 8 படி நீரில் போட்டு, எண்ணெய் 1 படியும், கல்கமாக்கிய கடைச்சரக்குகள் அரத்தை, கடுக்காய் நெல்லிமுள்ளி, தான்றிக்காய், அதிமதுரம், தேவதாரம் மஞ்சள், சடாமாஞ்சில், சுக்கு, கச்சோலம், கிராம்பு பச்சிலை, சிறுநாகப்பூ வகைக்கு 1 கழஞ்சு (4. 4 மி. கி.) எடுத்துக்கொள்ளவும். அடுப்பிலேற்றி எரித்து, பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** தலைவலி தீரும். குளிக்க.

## 94 கண்டமாலை தீர

**சரக்குகள்:**

மனித சுட்ட எலும்புச் சாம்பல்
நாய்க்கோட்டான் வேர், பட்டை
நல்லெண்ணெய் (கால் படி) நாழி
பூண்டு
மிளகு
வசம்பு

வகைக்கு 2 கழஞ்சு

**செய்முறை:** நாய்க்கோட்டான் வேர், பட்டையை அரைத்து, விளாங்காய் அளவு எடுத்துக்கொள்ளவும். கடைச்சரக்குகளைப் பொடிசெய்து. நல்லெண்ணெயுடன் கலந்துகொள்ளவும். கல்கம், என்புப் பொடியையும் சேர்த்து, அடுப்பிலேற்றி, பதத்தில் எரித்து, வடித்துக் கொள்ளவும்.

**குறிப்பு:** எண்ணெயைப் போடும்முன், மெல்லிய துணியில் மோர் தோய்த்து, எட்டு நாட்கள் தடவ வேண்டும். பிறகுதான் எண்ணெயை, கண்டமாலைக்குத் தடவ வேண்டும்.

## 95 வல்லாரை நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வல்லாரை சமூலம் | 5 படி |
| செங்கழுநீர்ச்சாறு | ,, |
| கரிப்பாலைச்சாறு | கால் படி (நாழி) |

**செய்முறை:** பசும்பால் 5 படி, இளநீர் 1 படி, பசு நெய் 1 படி, சாறுகளையும் கலந்துகொள்ளவும். அதிமதுரம், கோட்டம், செங்கழுநீர்க்கிழங்கு, குன்றிவேர் அவுரி இலை, கோரோசனை, கற்பூரம் வகைக்கு 4 கழஞ்சு எடுத்துக்கொளளவும். பசுவின் பால் விட்டரைத்து, கலக்கி கல்கமாக்கவும். பின்னர், அடுப்பேற்றி, சிறுதீயாக எரித்து 3 நாட்கள் கழித்து, 4ஆம்நாள் வடிகட்டிக்கொள்ளவும்.

**அளவு:** கழஞ்சு (4. 4 மி. கி.) உட்கொள்ளவும்.

**தீரும் பிணிகள்:** சயம், கைகால், உடம்பு எரிச்சல் வயிற்றெரிவு, வாய், நாக்கு, நெஞ்சு உலர்தல், சயகாய்ச்சல் ஈளை, இருமல், (மருந்தீடு) நாபி, எட்டி, அரளி, கழுதை வண்டு போன்ற நஞ்சுகளுக்கும், உடல் இளைத்தபேருக்கும் ஆகும்.

## 96 இரத்த பீனிசம் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 படி |
| மிளகு | ,, |
| பெருங்காயம் | 1 வராகன் (4.4 மி. கி.) |
| அவுரி இலை | 5 படி |

**செய்முறை:** அவுரி இலையை அரைத்து, தேங்காய் அளவு கல்கம் செய்துகொள்ளவும். கடைச்சரக்குகளைப் பொடி செய்துகொண்டு, கல்கத்துடன் கலந்துகொண்டு நல்லெண்ணெயுடன் சேர்க்கவும். மேலும், கீழும் சட்டி கொண்டு மூடி, குப்பைக் குழியில் பூமி புடமாகக் புதைக்க வேண்டும். 20 நாட்கள் சென்றபின் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு:** 4 நாட்களுக்கு ஒரு முறை தலை முழுக.

**உணவு:** புளி, கசப்பு உணவு, புகை பிடித்தல் என்பன.

## 97 சஞ்சீவித் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| குழலா தண்டைப் பட்டை பலம் | |
| ஆதண்டைப்பட்டை | 35 கி. |
| அழிஞ்சில்பட்டை | ,, |
| முடக்கொத்தான் வேர்ப்பட்டை | ,, |
| எருக்கம் பட்டை | 5 பலம் |
| மயிலிறகு | 2 பலம் |
| பெருங்காயம் | 2 பலம் |
| வேப்பெண்ணெய் | 6 மாகாணி |

**செய்முறை:** வேப்பெண்ணெயை சட்டியிலிட்டுக் கொள்ளவும். பெருங்காயம் தவிர ஏனைய சரக்குகளைப் பொடிசெய்து, வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சவும். வேப்பங்குச்சி கொண்டு மெல்லத் துழாவவும். பதத்துக்கு வந்தபின் இறக்கவும். பின் காயத்தைப் பொடித்துப் போடவும்.

**பயன்:** உண்ண, வெளித்தடவ

**அளவு:** காசு எடை உட்கொள்ள.

**தீரும் பிணிகள்:** வாத நோய்கள், சன்னி.

## 98 இளநீர்த் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| இளநீர் | 1 படி |
| பசும்பால் | 4 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |

அதிமதுரம்
சந்தனம் — குங்குமம்
அகில் — நன்னாரி வேர்
செங்கழுநீர் — கோட்டம்
ஏலம் — கிராம்பு
பிச்சி இலை — இருவேலி வேர்
செங்கழுநீர்க்கிழங்கு — தாமரை வளையம்
மரமஞ்சள் — தண்ணீர்விட்டான் [கிழங்கு
செண்பகப்பூ — விலாமிச்சவேர்
புனுகுச்சட்டம் — தக்கோலம்
கற்பூரம் — சிறுபலம்
சாதிக்காய் — தேவதாரம்
கடுகுரோகிணி — சிறுகிழங்கு
முத்தக்காசு

வகைக்கு கழஞ்சு (4. 4 மி. கி.)

**செய்முறை:** மேற்சொன்ன சரக்குகளைப் பொடிசெய்து இளநீர், பால், எண்ணெயுடன் கலந்து, அடுப்பிலேற்றி, எரித்துப் பதத்தில் வடிகட்டி எடுத்துக்கொள்ளவும்.

**தீரும்பிணிகள்:** தலைவேதனை, கண்வேதனை, எரிச்சல் குளிக்க.

## 99 நீரடைப்புத்தீர நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| பசுநெய் | 2 படி |
| சிறுகிளுவம்பட்டை | 5 பலம் |
| குளப்பாலைவேர் | 1 ,, |

| | |
|---|---|
| ஏலம் | 5 பலம் |
| சிரகம் | 5 ,, |
| சுக்கு | 5 ,, |
| மிளகு | 5 ,, |
| ஓமம் | 5 ,, |

**செய்முறை:** பசும்பால்விட்டுக் கடைச் சரக்குகளை அரைத்துக்கொண்டு, கோவைத்தண்டுப்பால் 7 படியையும் கூட்டி நெய்யுடன் கலந்துகொள்ளவும். அடுப்பிலேற்றி, எரித்துப்பதத்தில் வடிகட்டிக்கொள்ளவும்.

**அளவு:** தினம் 3 கழஞ்சு உட்கொள்ளவும். பத்தியமாக இருக்கவும்.

"குல்லை மேனிச்சாறு சுரசமுடன்
சொல்லும் பலங்கள் அரைகூட்டி
சுகமாய் வெந்து மூழ்கிவர *
கொல்லவரும் பூசைநோய் குலைந்து குலைந்து ஓடுவதே"

## 100 மயூர கேசரித் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| மயிலிறகு | குதிரைக்குளம்பு |
| கழுதைக்குளம்பு | கடாகொம்பு |
| வேப்பம்பிண்ணாக்கு | பேய்ப் பீர்க்கம் விதை |
| சன்னி நாயகன் | வெளிச்சப்பிசின் |
| பெருங்காயம் | திரிகடுகு |
| பீர்க்கிலைச்சாறு | வேலிப்பருத்திச்சாறு |

வகைக்கு மூன்று வராகன்

---

* அடி குறைவாக உள்ளது.

**செய்முறை:** கடைச்சரக்குகளை வறுத்துப் பொடி செய்துகொண்டு, வேப்பெண்ணெயில் அரைப்படி போட்டுக் காய்ச்சி, எரித்துப் பதத்தில் எடுத்து வடிகட்டிக்கொள்ளவும்.

**பிரயோகம்:** காதில்விட, துவாலை போடவும்.

**பயன்:** வாதம், உட்குத்து, புறவீச்சு, பிடரிக்கணம்.

## 101 குமரித் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கற்றாழைச்சாறு | 2 படி |
| கையான்சாறு | ,, |
| பொற்றலைக்கையான் | ,, |
| நெல்லிச்சாறு | 1 படி |
| நல்லெண்ணெய் | 2 படி |
| எலுமிச்சைப்பழச்சாறு | ,, |
| இளநீர் | 4 படி |

**செய்முறை:** ஒன்றாகக்கலக்கி, சிறுதேக்கு, திப்பிலி, மஞ்சள், கோட்டம், சந்தனம், கிராம்பு, சாதிக்காய், கற்பூரம், சிறுநாகப்பூ, அகில், அதிமதுரம், ஏலம், இலவங்கப்பட்டை, பெருங்குரும்பைப்பட்டை, தாமரைவளையம், தாமரைப்பூ வகைக்கு வராகன் எடை இளநீரில் அரைத்துக்கொள்ளவும். பொடி செய்துகொண்டு பின்பு மேற்சொன்ன கரைசலில் கலந்துகொண்டு, அடுப்பிலேற்றி, எரித்து எடுத்துக்கொள்ளவும்.

**தீரும் பிணிகள்:** சர்வசுரம், சயம், காசம், உளைப்பு, இளைப்பு, உன்மாதம் உடல் இளைக்கும் காச சுவாசம் என்பன.

## 102 கணை தீர எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| ஆமணக்குநெய் | 1 படி |
| இழச்சி இலை | ,, |
| மிளகுதக்காளி இலை | ,, |
| பாவட்டை இலை அல்லது விட்ணுகிரந்தி இலை | 1 படி |
| கோழிஆவாரை இலை | ,, |
| கோவை இலை | ,, |
| வெங்காயம் | ,, |

**செய்முறை:** இவைகளை அரைத்து, எண்ணெயில் கலந்து அடுப்பிலேற்றி, எரித்துப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**அளவு:** ஒருகாசு எடை உட்கொள்ளத் தொடர்ச்சியாக 6 நாட்களுக்குத் தரவும். 7ஆம் நாள் கால்படி எண்ணெய் தர, பேதியாகும்.

**உணவு:** உப்பு, புளிகூடாது, வெந்நீர்சோறு உண்ணவும்.

## 103 கல்லடைப்புத் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | 6 படி |
| வெங்காயம் | 10 பலம் |
| முடக்கத்தான் | 1 பிடி |

**செய்முறை:** விளக்கெண்ணெயில் வெங்காயத்தை உரித்துப்போடவும். முடக்கத்தான் இலையை உருவி எண்ணெயில் போட்டு, அடுப்பிலேற்றி, எரிக்கவும். சிவந்த பதத்தில் எடுக்கவும்.

**குறிப்பு:** ஒருநாள்விட்டு ஒருநாள் உண்ண.

**உணவு:** கார்ப்பு, புளிப்பு கூடாது.

## 104 நொச்சித் தைலம்

**செய்முறை:** நொச்சிக்கொம்பு கொண்டுவந்து, நறுக்கி உலர்த்தவும், உலர்ந்த கொம்புகளை உள்ளீரமுள்ள பானையில் அடைக்கவும். குழிவெட்டிக்கொள்ளவும், பானையைப் புதைக்கவும். பானையை மேல்மூடி கொண்டு, மூடி. மூடியில் துளைகள் இடவும். மூடியில் எருக்குச்செடி 4 விரலுக்கு அடுக்கி வைக்கோலைப்போட்டுக் கொளுத்தவும். பின்பு வைக்கோலைப் பிரித்துச் சேறு பூசி மூட்டம் போடவும். மூட்டத்தைப் பிரித்துக்கொண்டு தைலத்தை வடித்துக் கொள்ளவும்.

**துணை மருந்து:** திரிகடுகு, திரிபலை.

**அளவு:** பணவிடை சூரணத்துக்கு நாழித்தைலம் எடை.

**தீரும் பிணிகள்:** கிராணி, வயிற்றுக்கடுப்பு, குன்மம் வாதகுன்மம், சிலேத்தும குன்மம், ஈளை, இருமல், எட்டு வகைக் காசம், நீராணம்.

## 105 கபால வியாதி தீர

கண்டந் தன்னில் மேல்மூன்றும்
　　குதித்த மண்டை வரட்சிதன்னால்
துண்டம் புருவம் கூடுதலும்
　　சுளியில் கண்ணில் குத்துண்டாம்
மண்டும் துயரம் வலிபோலக்
　　கண்ணுள் தெரிவரி தாய
மண்டை முழுவ குத்த
　　வருத்தும் கபால வியாதியுமே.

சரக்குகள்;

| | |
|---|---|
| ஆடாதோடை | வெண்நொச்சி |
| பெரிய துளசி | கரிய தக்காளி |

என்பன வகைக்கு கால் படி

**செய்முறை:** பசுநெய் நாழி (கால் படி) அரைத்த கஸ்தூரி மஞ்சள், விளா, சதகுப்பை, தேவதாரம், மஞ்சள் வெட்பாலை அரிசி, மிளகு, கம்பிபிசின், கரியசீரகம் பெருங்காயம், பூண்டு, கற்கடகசிங்கி, வசம்பு ஓர் எடை வகைக்கு எடுத்துக்கொண்டு, பொடி செய்து. கரைத்து அடுப்பிலேற்றவும். பதத்தில் எரித்து எடுத்துக்கொள்ளவும்.

**தீரும் பிணிகள்:** மண்டைப்பிணிகள், வாதகரப்பான்.

## 106 சன்னி வாதம் தீர

சரக்குகள்:

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | 2 நாழி |
| ஆதண்ட வேர் | எருக்கம் வேர் |
| மாவலிங்க வேர் | அவுரி வேர் |
| வேளைவேர் | நத்தைச்சூரிவேர் |
| சித்திரமூல வேர் | வகைக்கு 2 வராகன் |

**செய்முறை:** வேர்களை இடித்துக்கொண்டு, கருப்புக் கம்பளியால் வடிகட்ட வேண்டும். எண்ணெயுடன் சேர்த்துக் கலக்கவேண்டும். ஒரு சிரங்கை அளவு பூநாகம் இட்டு அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும். பின் பெருங்காயம் 2 வராகன் பொடித்துப்போடவும்.

அளவு: துட்டு எடை உண்ண.

**தீரும் பிணிகள்:** சன்னி வாதம், கழுத்து நரம்புகள் விம்மி, தாள் வாய் கிட்டி, பல் இறுக்கும். மேல் மூச்சு நெஞ்சு நோவு, மார்பு விலா, இழைப்பு, வலிப்பு.

## 107 பீனிசம் தீர

**சரக்குகள்:**

| | | |
|---|---|---|
| எண்ணெய் | 1 கழஞ்சு | (4. 4 மி. கி.) |
| ஏலம் | 2 | ,, |
| கிராம்பு | 2 | ,, |
| அதிமதுரம் | 4 | ,, |
| சிறுநாகப்பூ | 2 | ,, |
| செல்லியம் | 2 | ,, |
| கொத்தமல்லி | 4 | ,, |
| சதகுப்பை | 4 | ,, |
| வாய்விளங்கம் | 4 | ,, |
| கடுகுரோகணி | 4 | ,, |
| சீரகம் | 2 | ,, |
| சாத்திரபேதி | 5 | ,, |
| செண்பகப்பூ | 5 | ,, |
| சந்தனம் | 5 | ,, |
| தேவதாரம் | 5 | ,, |
| தாமரை வளையம் | 5 | ,, |
| கூகை நீர் | 2 | ,, |
| அகில் | 2 | ,, |
| மஞ்சள் | 2 | ,, |
| நல்ல மஞ்சள் | 5 | ,, |
| மிளகு | 5 | ,, |

**செய்முறை:** இறுதியில் உள்ள 8 சரக்குகளுடன் பொன்னாங்கண்ணி, சிறுகீரை, சீதேவி செங்கழுநீர், சிற்றா முட்டிவேர், பேராமுட்டி வேர், கற்றாழை வேர்க்கிழங்கு மாகாளிக்கிழங்கு, வெட்டிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு விலாமிச்சவேர், துளசி, ஆடாதோடை இவைகளைக்கூட்டி குடிநீர் வைக்கவும்) வடிகட்டிக்கொண்டு, முன் உள்ள சரக்குகளைப் பொடிசெய்துகொண்டு, நல்லெண்ணெய் வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் தலா 2 கழஞ்சு வீதம்

கலக்கி அடுப்பிலேற்றிக்கொண்டு, பதத்தில் எடுத்துக் கொள்ளவும்.

**பயன்:** தலை முதல் உள்ளங்கால் வரை பூசி ஊற விட்டுக் குளிக்கவும்.

**தீரும் பிணிகள்:** ஆறு வகைப் பீசைம், தலைவலி உடற்வெட்டை பயித்திய விகாரம்.

## 108 வெட்டை, சரபீனசம்பீரத் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | நாழி (கால் படி 1.3 லி |
| எலுமிச்சம்பழச்சாறு | ,, |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, |
| பசுவின் பால் | ,, |
| நன்னாரி வேர் | 1 பலம் (35 கிராம்) |

**செய்முறை:** பசுவின் பாலில், நன்னாரி வேரை அரைத்துக்கொள்ளவும். சாறுகளை, எண்ணெயுடன் கலந்து கொள்ளவும். கல்கத்தை, எண்ணெயுடன் சேர்த்து சந்தனச்சிறாய் அரைக்கால் சேர்த்து, அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** வெளிப்பிரயோகம், குளிக்க

**தீரும் நோய்கள்:** பயித்திய வெட்டை, உஷ்ணம் மேக வெட்டை, என்பு சுரம்.

## 109 பேதிக்குத் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| ரசம் | 2 வராகன் |
| காட்டாமணக்கு விதை | ,, |

**செய்முறை:** இரசம், காட்டாமணக்கு விதையைத் தேங்காய்ப்பாலில் அரைத்து, எடுத்துக் கொள்ளவும்,

தேங்காயின் கண்ணைத் திறந்து, இளநீரை வெளியேற்றவும். தேங்காயின் உள்ளே மருந்துக் கலவையைப்போட்டு மூடவேண்டும், 7 நாட்கள் சென்றபின், எடுத்து, விழுதுடன் எடுத்து, அரைத்து, வெய்யிலில் வைக்கத் தைலம் இறங்கும்.

**பயன்:** நாக்கில் தடவ பேதியாகும். எலுமிச்சம் பழத்தில் தடவி முகர்ந்து பார்க்கப் பேதியாகும்.

## 110 குமரி எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| ஏலம் | அதிமதுரம் |
| சாத்திரபேதி | கோட்டம் |
| மரமஞ்சள் | இலவங்கம் |
| சிறுநாகப்பூ | சதகுப்பை |
| தேவதாரம் | நற்சிரகம் |
| வெந்தயம் | தக்கோலம் |
| செண்பகப்பூ | |

வகைக்கு 6 காசெடை

| | |
|---|---|
| செவ்வல்லிக்கொடி | செஞ்சந்தனம் |
| கடுகுரோகணி | |

தலா 2 காசெடை

| | | |
|---|---|---|
| கிராம்பு | 1 | காசெடை |
| நெல்லிப்பருப்பு | 11 | ,, |
| பூலாசம்பட்டை | 10 | ,, |
| கோதும்பை | 1 | ,, |
| சாதிக்காய் | 9 | ,, |

| | |
|---|---|
| வெட்டுமருந்து | சிற்றாமுட்டி வேர் |
| பேராமுட்டிவேர் | வட்டத்துத்தி |
| பொன்முசுட்டை | ஆவரைப் பஞ்சாங்கம் |

வகைக்கு 5 பலம்

| | |
|---|---|
| நீர்ப்பூலா | ஆலம் விழுது |
| அல்லித்தண்டு | நிலப்பனைக்கிழங்கு |
| தண்ணீர்விட்டான்கிழங்கு | சவரிக்கொழுந்து |
| சிந்தில் தண்டு | நன்னாரி |
| குழித்தாமரை | பொன்னாங்கண்ணி |
| சிடேதவிசெழுநீர்கிழங்கு | சிறுகீரை |
| முத்தக்காசு | குறுந்தொட்டி |
| தாமரைவளையம் | வெட்டிவேர் |
| விலாமிச்ச வேர் | |

வகைக்கு ஒரு பிடி.

இளநீர் 5 படி

**செய்முறை:** தனித்தனியாகச் சரக்குகளை எல்லாம் கற்றாழைச்சாற்றில் அரைத்துக்கொண்டு, பாளை, கற்றாழைச்சாறு, காபசுவின் பால் படி 9. சருகெண்ணெய் படி 9 கரைத்துக்கொண்டு, மாலை இளஞ்சூட்டில் 4 நாட்கள் வேக வைக்கவும். மெழுகு பதத்தில் எடுத்துக்கொண்டு, சந்தனம் நார்த்தங்காய் அளவு 3 வராகன் விதம் பச்சைக் கற்பூரம் புனுகு, கஸ்தூரிமஞ்சள், குங்குமப்பூ வகைக்குக் கூட்டி பயன்படுத்தவும்.

**பயன்:** குளிக்க.

**தீரும் பிணிகள்:** 18 வாயு, மனமாந்தம், யோனிதம் தந்த வாதம், மங்கு வாதம்' குலை நடுக்கம், ஈளை இருமல் பெரும்பாடு, உடம்பு எரிவு, பிரமியம், என்பு உருக்கி

## 111 சீதேவிச் செங்கழுநீர்க் கிழங்கு

**சரக்குகள்:**

| | |
|---|---|
| சிடேதவிச் செழுங் கடுநீர்ச்சாறு | 4 படி |
| சிந்தில் தண்டு | 2 படி |
| சிடேதவிச் செழுங்கழுநீர் வேர் | |
| இருவேலி | விலாமிச்ச வேர் |

| | |
|---|---|
| தாமரை வளையம் | நன்னாரி வேர் |
| முத்தக்காசு | தண்ணீர் விட்டான் |
| கடுகுரோகணி | சிறுநாகப்பூ [கிழங்கு |
| செங்கழுநீர்க்கிழங்கு | செண்பகப்பூ |
| கடுகுரோகிணி | அதிமதுரம் |
| கோட்டம் | ஏலம் |
| இலவங்கம் | சதகுப்பை |
| மஞ்சட்டி | |

வகைக்கு 1 பலம் (35 கிராம்)

**செய்முறை:** பொடி செய்துகொண்டு, சாற்றில் கலந்து, கரைத்து, அடுப்பிலேற்றி கொதிக்கவைத்துப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** உடலில் பூச.

**தீரும் நோய்கள்:** உள்வெக்கை, கை, கால் எரிவு வரட்சி.

## 112 நாயுருவி நெய்

**சரக்குகள் :**

| | |
|---|---|
| நாயுருவிச் சமூலம் | 1 துலாம் |
| தண்ணீர் | பதக்கு |
| பசுநெய் | நாழி (கால்படி) |
| அதிமதுரம் | கடுகுரோகணி |
| இலுப்பைப்பூ | செங்கழுநீர் |
| கோட்டம் | சதகுப்பை |
| பச்சிலை | சிறுதேக்கு |
| வாய்விளங்கம் | சுக்கு |
| திப்பிலி | திப்பிலி சமூலம் |

வகைக்கு 3 கழஞ்சு

**செய்முறை:** நாயுருவி சமூலத்தை நறுக்கிக்கொண்டு நீரில்போட்டு எரித்து, அரைப்படியாகக் காய்ச்சிக்கொண்டு கால்படி பசு நெய் விடவும். கடைச்சரக்குகளைப் பசும்பாலில் அரைத்துக்கொண்டு குடிநீரில் கலந்து கரைக்கவும். அடுப்பிலேற்றி எரித்து, எடுத்துக்கொள்ளவும்.

**அளவு முறை:** மூன்று காசெடைவீதம் உட்கொள்ள வெந்நீருடன்

**தீரும் பிணிகள்:** அறுவகை மூலம்

## 113 குடல் புரட்டு, குடல் வாதம் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நேர்வாளம் | 4 காசு எடை |
| பெருங்காயம் | 5 ,, |
| விரிச்சம் | 2 ,, |
| கடுகுரோகணி | 2 ,, |
| சாணைவேர் | உடும்புருளிப்பட்டை |
| அமுக்ராவேர் | கொடிவேலிவேர் |
| நிலைவகைவேர் | பெருமரத்துவேர் |
| வெள்ளைக்காக்கரட்டான் வேர் | |
| ஆகாசக்கருடன் கிழங்கு | |

வகைக்கு ஓர் எடை

**செய்முறை:** காட்டு மருந்துகள், கடை மருந்துகளைப் பொடிசெய்துகொள்ளவும். முற்றின தேங்காயின் கண்ணைத் திறந்து இளநீரை வெளியேற்றவும். பொடியை உள்ளே திணித்து, கழற்சி 1 பலம் (35 கிராம்) பூண்டு 1 சேர் (280கி) சேர்க்கவும். ஓடு வெடிக்க தீயில் சுடவும். தேங்காய் மருந்தை அரைத்து, உரி நெய், உரி நல்லெண்ணெய் (672 மி. லி.) உச்சிக்கரண்டி சிற்றாமணக்கு நெய் (16 மி. லி.) கூட்டி, அடுப்பிலேற்றி, எரித்துப் பதத்தில் வடிகட்டவும்.

**அளவு:** வெருகடி உட்கொள்ள

**தீரும் பிணிகள்;** வயிறு இரையும், குடல் புரட்டும், வயிறு உள்ளிட்ட வலி, பொருமிக்கழியும், உணவு செரியாமை.

## 114 கற்றாழை எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | 1 படி |
| வரிக்கற்றாழைவேர் | 4 படி |

**செய்முறை:** கற்றாழைவேரைச் சுரண்டி, சுத்தம் பண்ணவும் பின்பு துண்டுகளாக்கிக்கொண்டு, சிறிது எண்ணெய் விட்டு வைக்கவும். வெந்தையம் 2 பலம், நீர்ப்பூண்டு 1பலம், கடுச்சாய் 3 பலம், களிப்பாக்கு 5 பலம் இரவில் ஊறவைக்கவும். எண்ணெயில் மறுநாள் காலையில் பதத்தில், வேக வைத்து கலசத்தில் வைத்துக்கொண்டு, எண்ணெய் இறக்கவும்.

**அளவு ;** பிணிக்குத்தக்கபடி 1 துட்டு, 2 துட்டு உள்ளுக்கு உண்ண பேதியாகும்.

**உணவு:** மிளகு நீர், சோறு.

## 115 வலிப்புத் தீர நோய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| சங்கிலைச்சாறு | தூதுவளைச்சாறு |
| பிரமி இலைச்சாறு | இலந்தை இலைச்சாறு |
| பேராமுட்டிச்சாறு | தெளிபருத்திச்சாறு |
| பொடுதலைச்சாறு | முருக்க இலைச்சாறு |
| நொச்சி இலைச்சாறு | சிறுசெருப்புச்சாறு |
| கீழாநெல்லிச்சாறு | மூத்தெருக்கன்செவிச்சாறு |

வகைக்கு ஒரு உழக்கு

| | |
|---|---|
| ஏலம் | இலவங்கம் |
| தேவதாரம் | சாதிக்காய் |
| அரிசிதிப்பிலி | வசுவாசி |
| கார்போக அரிசி | கருஞ்சீரகம் |
| நல்லதிப்பிலி | அதிமதுரம் |

வகைக்கு 2 கழஞ்சு

| | |
|---|---|
| கோட்டம் | முந்திரிப்பழம் |
| கச்சோலம் | சடாமாஞ்சில் |
| இந்துப்பு | சதகுப்பை |
| பெருங்காயம் | சந்தனம் |

வகைக்கு 2 கழஞ்சு

பசுநெய் (அரைப்படி 2 நாழி)

**செய்முறை :** கடைச்சரக்குகளை அரைத்துச் சாறுகளில் கலந்துகொள்ளவும். அரைப்படி பசு நெய்யுடன் சேர்த்துக்கொண்டு, அடுப்பிலேற்றி எரித்துப்பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**அளவு :** தினம் 1 கரண்டி உண்ணவும்.

**தீரும்பிணி :** வலிப்பு

## 116 சூல் உண்டாக

**சரக்குகள் :**

அமிர்தவள்ளிக்கிழங்குச்சாறு
கற்றாழைச்சாறு
வாழைக்கிழங்குச்சாறு
முடக்கற்றான்சாறு
பசும்பால் இளநீர்
கரும்புச்சாறு

வகைக்கு நாழி (கால்படி)

| | |
|---|---|
| அதிமதுரம் | செங்கழுநீர் |
| கோட்டம் | சீரகம் |
| கருஞ்சீரகம் | இலவங்கம் |
| இலவங்கப்பத்திரி | சாதிக்காய் |
| கஸ்துாரிமஞ்சள் | சந்தனம் கழஞ்சு |

பசுநெய் (முக்கால்படி) நாழி [ (4.4மி.கி,)

**செய்முறை :** முன்சொன்ன சாறுகளைக்கூட்டி, கடை மருந்துகளைப் பொடிசெய்து தூவவும். நெய்யுடன் எல்லா வற்றையும் கலந்துகொண்டு அடுப்பிலேற்றி கொதிக்க வைத்து வடிகட்டவும்.

**பயன் :** தினம் உண்ண சூல் உண்டாகு.

## 117 சூல் உண்டாக எண்ணெய்

**சரக்குகள் :**

| | |
|---|---|
| வெள்ளறுகுவேர் | குன்றிஇலை |
| குன்றிபாலை இலை | சங்கங் குப்பி இலை |
| மூசுறுமுமுட்டை | தூதுவளை வேர் |
| இலுப்பைவேர் | தேத்தான்வேர் |
| திப்பிலி | சீரகம் |
| மிளகு | வெளிச்சப்பிசின் |
| முத்தெருக்கின்செலிவேர் | |

முத்தக்காசு வகைக்குச் சம எடை

**செய்முறை :** சரக்குகளுக்கு எடை, கடை மருந்துகள் சம எடை இவைகளை அரைத்துக்கொண்டு, நெய் எண்ணெ யில் கலந்து (672மிலி வகைக்கு) உரி அளவில், அடுப் பேற்றி, கொதிக்கவைத்து வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.

**தீரும் பிணிகள் :** கிரந்தி நோய்.

## 118 பிள்ளை பெற்றவர்களுக்கு எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கஞ்சாங்கோரைவேர் | முத்தக்காசு |
| முத்தெருக்கஞ்செலிவேர் | தலைகுடுவளனிவேர் |
| சங்கம்வேர் | விட்ணுகிரந்திவேர் |
| சங்காதரிவேர் | சென்னகரம் |
| வெள்ளெருக்கம்வேர் | நொச்சிஇலை |
| தேற்றான்வேர் | தும்பைஇலை |
| கத்தூரிமஞ்சள் | சாதிக்காய் |
| கருஞ்சீரகம் | மிளகு |
| மஞ்சள் | பூண்டு |
| ஏலம் | செண்பகப்பூ |

வகைக்குச் சம எடை.

**செய்முறை:** மேற்படி சரக்குகளைச் சமஎடை எடுத்து அரைத்து நல்லெண்ணெய் கால்படி அளவு கலந்து 4 நாட்கள் சூரியபுடம் வைத்து எடுத்து வடிகட்டிப் பயன்படுத்தவும்.

**அளவு:** உள்ளங்கை அளவு

**உணவு;** கார்ப்பு, புளிப்பு கைவிடவும்.

## 119 மாந்தம் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| எருமை வெண்ணெய் | புடா இலைச்சாறு |
| நுணா இலைச்சாறு | சாரணத்தி இலைச்சாறு |
| வேலிப்பருத்தி இலைச்சாறு | |
| பேய்ப்பீர்க்கன் இலைச்சாறு | |
| கருஞ்சீரகம் | திப்பிலி |
| பூண்டு | வசம்பு |

**செய்முறை :** சம எடையாகச் சாறுகளை எடுத்துக் கொண்டு, கடைச்சரக்குகளைச் சேர்த்துக் கொதிக்கவைத்து வடிகட்டிப் பயன்படுத்தவும்.

**தீரும் பிணி :** வயிற்றுக் கழிச்சல்.

**சரக்குகள்:**

| | |
|---|---|
| பிடாவேர் | நுணாவேர் |
| கருஞ்சூரைவேர் | சாரணைவேர் |
| பொடுதலை இலை | குப்பை இலை |
| வேலிப்பருத்தி இலை | கடுக்காய் |
| பூண்டு | வசம்பு |
| பாகல் இலை | விளக்கெண்ணெய் |
| ஏலம் | அதிமதுரம் |
| சாதிக்காய் | செண்பகப்பூ |
| நிலக்குமிழ்வேர் | புளிச்சகீரைவேர் |
| பேய்குமட்டிவேர் பால் | தண்டு |
| ஈ தின்னி வெளவால் | நாங்கூழ் என்ற பூநாகம் |

**செய்முறை :** முதலில் உள்ள 11 சரக்குகளை ஆமணக்கு நெய்யில் கொதிக்க வைத்து, எண்ணெயைத் தரவும், பின்பு ஏனையவற்றை கலந்து, எண்ணெயைக் கொதிக்கவைத்து வடிகட்டிப் பயன்படுத்தவும்.

**முறை:** உட்கொள்ள. குதிரை வாலி வேரைக் குளிச மாகக் கட்டவும்.

## 120 மாந்தம் தீர எண்ணெய்

| | |
|---|---|
| சாரணை வேர் | கொம்புப் பாகல்வேர் |
| பூண்டு 1 பல் | வசம்பு 1 சேர் (280 கி.) |
| ஓமம் 3 விரல் அளவு | |

---

1 ஆனாவேர்,

**செய்முறை:** இவைகளை நறுக்கி, ஆழாக்கு (168 மி. லி.) எண்ணெயில் சூடுபடுத்திக்கொண்டு, வடிகட்டி எடுத்துக்கொள்ளவும்.

**முறை:** ஒரு காசெடை உட்கொள்ள மேலுக்குத் துவாலை இடவும். இம்முறையில் தொடர்ந்து மூன்று நாட்கள் பயன்படுத்தவும்.

## 121 கர்ப்பக்கரப்பான் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வெங்காயம் | 1 படி |
| கடுக்காய் (சுத்திசெய்தது) | 12 எண்ணிக்கை |
| சீரகம் | 1 பிடி |
| விளக்கெண்ணெய் | கால் படி |

**செய்முறை:** சரக்குகளை அரைத்து, விளக்கெண்ணெயில் கலக்கவும். கரிச்சூரை வேரை சிரங்கை அளவு எடுத்து அரைத்து, எண்ணெயில் சேர்க்கவும். மூன்று நாள் சூரிய புடத்தில் வைத்து, வடித்துக்கொள்ளவும்.

**முறை:** உட்கொள்ள. 1 கரண்டி, 3 நாட்கள் 4 நாட்கள் சென்றபின் மீண்டும் ஒரு முறை உட்கொள்ளவும். ஆறு மாதம் முதல் 10 மாதம் வரை.

**தீரும் நோய்கள்:** எழுமாந்தம், கிரந்திக்கரப்பான் பிள்ளைப்பேறு, சுகமாய் ஏற்படும்.

## 122 மாந்தம் தீர எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| அத்திப்பட்டை | இலுப்பைப்பட்டை |
| நற்குருந்தம்பட்டை | நாவல்பட்டை |
| நள்ளைத்தண்டு | கொன்றைம்பட்டை |

| | |
|---|---|
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| செவ்வல்லிக்கொடி | அதிமதுரம் |
| கோட்டம் | கருஞ்சீரகம் |
| இலவங்கப்பட்டைவேர் | ஏலம் |
| செண்பகப்பூ | கொத்தமல்லி |
| வாய்விளங்கம் | கிராம்பு |
| சாத்திரபேதி | பற்பாடகம் |
| அதிவிடையம் | சந்தனம் |
| பேரீச்சம்பழம் | முந்திரிப்பழம் |

கடுக்காய் வகைக்கு வராகன் (3. 5 கிராம்)

விளக்கெண்ணெய் படி

**செய்முறை:** பட்டைகளை இடித்துக்கொண்டு, சாறு எடுத்தும் கடைச்சரக்குகளைப் பொடி செய்துகொண்டு விளக்கெண்ணெயில் கலந்துகொள்ள வேண்டும். அடுப்பிலேற்றி எரித்துக்கொண்டு பதத்தில் இறக்கிக்கொள்ளவும்,

**முறை:** ஒரு துட்டு எடை உட்கொள்ள வெளியிலும் பூசலாம். வயிற்றுப்போக்கு ஏற்படாவிடில் சுடவைத்துத் தரவும்.

**தீரும் பிணிகள்:** மாந்தம், கணம்.

## 123 துவர எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 6 சேர் |
| காசுக்கட்டி | துரிசு |
| களிப்பாக்கு | கடுக்காய்ப் பூ |
| வேம்பாடம்பட்டை | சந்தனத்தூள் |

வகைக்கு வராகன் (3. 5 கிராம்)

**செய்முறை:** அரைத்து, எண்ணெயில் கலந்து கொண்டு, அடுப்பிலேற்றி, எரித்துப் பதத்தில் எடுத்துக் கொள்ளவும்.

**பயன்:** வெளித்தடவ

**தீரும் நோய்கள் :** புரை, புண் என்பன.

## 124 மாந்தம் தீர எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வல்லாரை ஈர்க்கு | பொடுதலை ஈர்க்கு |
| வெங்காயம் 1 பிடி | பூண்டு |
| வசம்பு | விளக்கெண்ணெய் |
| உழக்கு | |

**செய்முறை:** வல்லாரை, பொடுதலை, வெங்காயம் என்பன ஒருபிடியும் பூண்டு, வசம்பு தலா ஒன்றும் எடுத்துக் கொண்டு, நறுக்கிக்கொள்ளவும். விளக்கெண்ணெயில் பிசைந்து, சூரியபுடம் வைக்கவும், வடிகட்டிப் பயன் படுத்தவும்.

**பயன் :** துட்டு எடை உண்ண.

**தீரும் பிணிகள் :** மாந்தம், கணம்.

## 125 கணைக்காய்ச்சல் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நீர்ப்பூலாக்கிழங்கு | வரப்பூலாக்கிழங்கு |
| துடரிக்கொழுந்து | துவரங்கொழுந்து |
| முடக்கொத்தான் கொழுந்து | |
| கழற்சிக்கொழுந்து | இண்டங்கொழுந்து |
| காஞ்சோரைக் கொழுந்து | |

விடவங்கொழுந்து இலந்தைக்கொழுந்து
பருத்திக்கொழுந்து ஆனாகொழுந்து
வேலிப்பருத்திக்கொழுந்து
தூதுவளை இலை சூரைக்கொழுந்து
பழம்பாசி ஓரிலைத்தாமரை
சிறுகீரைவேர் பொன்னாங்காணிவேர்
கீழாநெல்லிவேர் குழிவிட்டான்வேர்
சிற்றாமுட்டிவேர் பேராமுட்டிவேர்
நன்னாரிவேர் சீதேவி செங்கிழங்கு
செப்பு நெரிஞ்சில் சமூலம்

வகைக்கு ஒருபிடி வீதம் எடுத்துக்கொள்ளவும் ($\frac{1}{4}$ படி)

எண்ணெய் நாழி எடை. கடை மருந்துகள்
ஏலம் இலவங்கம்
இலவங்கப்பத்திரி நற்சீரகம்
கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள்
செவ்வல்லிக்கொடி சந்தனம்
சதகுப்பை சாதிக்காய்
கிராம்பு செண்பகப்பூ
கடுகுரோகணி

வகைக்கு 1 வராகன் (3.5 கி)

கடுக்காய் 20 எண்ணிக்கை
பூண்டு 15 எண்ணிக்கை
உசிலம்பட்டை

**செய்முறை:** பட்டைகள், கொழுந்துகளை இடித்துச் சாறு எடுத்துக்கொள்ளவும்.

**அளவு பயன்:** ஒரு கரண்டி உட்கொள்ள

**உணவு:** மிளகு கலந்த புலால் உணவு தாய்க்கு ஆகாது.

**தீரும் பிணிகள்:** கணைக்காய்ச்சல், வயிறுபொருமல், வரக்கணை.

## 126 மாந்தம் தீர

சரக்குகள்:

| | |
|---|---|
| நல்லவேளைவேர் | குப்பைமேனிவேர் |
| சாரணைவேர் | கொம்புபாகல்வேர் |
| பூண்டு | வசம்பு |

வகைக்குச் சம எடை

ஓமம் — 3 விரலளவு.

**செய்முறை:** இவற்றை நறுக்கி ஆழாக்கு (168 மிலி) எண்ணெயில் போட்டு சூடுபடுத்தி வடித்துக்கொள்ளவும்.

**அளவு:** ஒரு காசெடை மூன்றுநாட்கள் உண்ண

**முறை:** விலா வயிற்றில் வெளியில் பூசலாம்.

**தீரும் பிணி:** மாந்தம்.

## 127 இரத்தக் கழிச்சல் தீர

சரக்குகள்:

| | |
|---|---|
| சுழற்சிப்பருப்பு | பேய்குமட்டிவேர் |
| முப்பிடாவேர் | நல்லவேளைவேர் |
| நாய்வேளைவேர் | பூண்டு |

வசம்பு சம எடை

**செய்முற:** இவற்றை விளக்கெண்ணெயில் சூடுபடுத்தி இறக்கிக்கொள்ளவும், வடிகட்டிப்பயன்படுத்தவும்.

**பயன் அளவு:** தக்க அளவு உண்ண.

**தீரும் பிணி:** இரத்தக்கழிச்சல்

## 128 இலக்கத் தைலம்

சரக்குகள்:

| | |
|---|---|
| சிற்றாமுட்டி | 16 பலம் |
| அமுக்ராக்கிழங்கு | ,, |
| விலாமிச்சவேர் | 1 பலம் |
| சுகந்தபால்வேர் | 1 பலம் (35கி) |
| தண்ணீர் | 30 படி |
| அரக்கு | 12 பலம் |
| நல்லெண்ணெய் | 12 படி |
| பசுமோர் | 2 படி |

| | |
|---|---|
| செண்பகப்பூ | அரத்தை |
| கிராம்புப்பட்டை | திப்பிலிமூலம் |
| செங்கழுநீர் | கோட்டம் |
| பெருங்குரும்பைச்சாறு | தேவதாரம் |
| சந்தனக்கட்டை | மரமஞ்சள் |
| அதிமதுரம் | ஏலரிசி |
| செவ்வல்லிக்கொடி | சிற்றாமுட்டி |
| முத்தகாசு | அமுக்ராக்கிழங்கு |
| கோரோசனை | |

வகைக்கு 5 பலம்

**செய்முறை:** 30 படி நீரில் முதலில் உள்ள 4 சரக்குகளைப் போட்டுக் காய்ச்சி 4, 5 படியாகக் குறுக்கவும். 12 பலம் அரக்கைப் பொடி செய்து மீண்டும் 12 படி தண்ணீர் விட்டு, 3 படியாக எரித்து எடுத்துக்கொள்ளவும். கஷாயத்துடன் அரக்குக் குடிநீரைக்கலக்கி, 8படி குடிநீரில் 12 படி நல்லெண்ணெய் சேர்க்கவும். பின் 3 படி பசுமோர் கடை மருந்துகள் வாசனைத்திரவியங்களைப் பொடிசெய்து கொண்டு, எண்ணெயில் கலந்துகொள்ளவும். அடுப்பிலேற்றி, எரித்துப் பதத்தில் எடுக்கவும்.

**பயன்:** வெளிப்பிரயோகம்.

**தீரும் பிணிகள்:** என்பு சுரம், பீன்சம், சயம், ஈளை இருமல், வாதபித்த பீசைம், சிலேத்துமம், மேகம், சத்தி இருமல்.

## 129 சன்னி 13ம் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | 1 படி |
| கடுகு | ,, |

**செய்முறை:** கடுகை எண்ணெயுடன் அரைத்துச் சீலையில் தடவி பச்சை எருக்கிலைக் கொப்பில் சுற்றவும். விளக்கில் பிடிக்க தைலம் வரும். மீதி எண்ணெயைப் பந்தத்தில் விட்டு சாம்பலாக்கவும். மேற்படி சாம்பலை எண்ணெயிலிட்டு கலந்து பயன் படுத்தவும்.

**முறை:** உடலில் தடவிப் பிடித்துலிட்டு உட்கொள்ள 1 பண எடை காதில் விடவும்.

**தீரும் பிணிகள்:** 13 வகையான சன்னி பாதங்கள்.

## 130 முட்டைத் தைலம்

**சரக்கு:**

| | |
|---|---|
| கோழி முட்டை | 100 எண்ணிக்கை |

**செய்முறை:** எருக்கம் விறகில் எரித்து, வேகவைத்து மஞ்சள் கருவை தனியே எடுத்துக்கொள்ளவும். எண்ணெய் சட்டியில் போட்டு, அடுப்பிலேற்றி, எரிக்கவும். பச்சை எருக்குக்கொம்பு மூன்று எடுத்து, அதை குன்றிமணிக் கொடியால் கட்டவும். இதனால் முட்டைக் கருவைக் கிளறவும். பொங்கி வரும்போது, குன்றிமணித் தழையை அரைத்துப் போடவும். எண்ணெய் கிடைக்கும். எடுத்துக் கொள்ளவும்.

**பயன், முறை:** வெளித்தடவ

**உணவு:** துவரம்பருப்பு, மிளகுநீர் உண்ணவும்.

## 131 சன்னி தீரத் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| எருக்கம்பூ | வெங்காயம் |
| திப்பிலி | வேப்பெண்ணெய் |

**செய்முறை:** சரக்குகளை அரைத்து வேப்ப எண்ணெயில் எரித்துக் காய்ச்சி, பதத்தில் வடிசட்டிக்கொள்ளவும்.

**பயன்:** உட்கொள்ள, வெளித்தடவ.

**தீரும் பிணிகள்:** வெட்டை, சன்னி என்பன-

## 132 என்புருக்கி தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நெல்லிப்பட்டைச்சாறு | உழக்கு |
| பசும்பால் | ,, |
| விளக்கெண்ணெய் | ,, |

**செய்முறை:** இவற்றைக் கலந்து, காய்ச்சி, பதத்தில் எடுத்து வடிகட்டி குடிக்கவும்.

## 133 வறட்சி இருமல் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| சிறுமலை வாழைப்பழம் | 14 எண்கள் |
| பசு நெய் | 2 படி |
| சுக்கு | 4 பலம் |
| திப்பிலி | f (அரை பலம்) |
| சீரகம் | வ |
| சாதிக்காய் | 5 பலம் |
| கிராம்பு | 5 பலம் |
| ஏலம் | 5 ,, |
| சர்க்கரை | 5 ,, |

**செய்முறை:** கடை மருந்துகளை வறுத்துப் பொடி செய்துகொள்ளவும். புதுப்பானை ஒன்றில், பழத்தைப் பிழிந்து போட்டு சூரணத்தூவி, சர்க்கரை, நெய் விட்டு சட்டியால் மூடவும். வெள்ளாட்டு எருவில் வைத்துப் புதைத்து 15 நாள் சென்றபின் எடுத்துச் சூரியபுடம் வைத்து வடிகட்டிப் பயன்படுத்தவும்,

**நாள் அளவு:** காலை, மாலை *1* கரண்டி விதம் உட்கொள்ள,

**உணவு:** கார்ப்பு, புளிப்பு நீக்கவும்.

**தீரும் பிணிகள்:** இருமல், இளைப்பு

## 134 தீப்புண், மருந்து வேகம் கை கால் முடக்கம் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளவி வேர் | *1* பிடி |
| இலை | *1* படி |
| விளக்கெண்ணெய் | *1* படி |

**செய்முறை:** மேற்படி விளவி வேர், இலை என்பவற்றை விளக்கெண்ணெயில் கலந்து எரித்துப் பதத்தில் எடுக்கவும்.

**பயன்:** முடக்கி, இறுக்கி இவைதப்போடவும், நாளடைவில் குணமாகும்.

## 135 மேகம் தீர

**சரக்குகள்:**

சிற்றாமணக்கு முத்து எண்ணெய்
கற்றாழைச்சாறு
வெங்காயச்சாறு
முடக்கொத்தான் சாறு

சிறுசெருப்புச்சாறு
வல்லாரைச்சாறு
கொழிஞ்சில்லச்சாறு
கடுக்காய்
இந்துப்பு
வெள்ளைச்சாரணை வேர்
இளநீர்

**செய்முறை:** சிற்றாமணக்கு கொட்டையைக் கொண்டு வந்து, வேகவைத்துக் காயவைத்து, தண்ணீரில் போட்டு எண்ணெய் வாங்கவும். எண்ணெய் 1 படி எடுத்துக் கொண்டு, வகைக்கு சாறுகள் கால் படி வீதம் கலக்கவும். கடைச்சரக்குகள் கடுக்காய் 5 பலம், இந்துப்பு 4 வராகன் வேர்கள் வெள்ளைச்சாரணை வராகன் 4, வெள்ளைக் காக்கண வேர் வராகன் 5 இவைகளை இளநீர் 5 படியில் அரைத்து, எண்ணெயில் கலந்து, அடுப்பேற்றி, எரித்துக் கொண்டு, பதத்தில் இறக்கி வடிகட்டவும்.

**பயன்முறை:** உண்ண

**அளவு:** 1 கரண்டி, 3 நாட்கள் தந்து 6 நாட்கள் பத்தியம்.

**உணவு:** மிளகுநீர் சாதம் உண்ணவும். புளி, புகை கூடாது.

**தீரும் பிணிகள்:** கரப்பான், கிரந்தி, அண்டவாயு மேகம், சலவெட்டை, கால், கை பிடிப்பு, குழந்தைகளுக்கு கணை, மாந்தம், தோடம், விச்சுளி என்பன.

## 136 பீனசம் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 படி |
| மிளகு | கால் படி |

| | |
|---|---|
| அபின் | 3 வராகன் |
| கருஊமத்தைச்சாறு | கால் படி |
| நொச்சி இலைச்சாறு | கால் படி |
| வெற்றிலைச்சாறு | கால் படி |

**செய்முறை:** இச்சாறுகளில் அபினை அரைத்துக் கொண்டு எண்ணெயில் கலக்கவும். பின் அடுப்பேற்றி எரித்து, மெழுகு பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** நசியமிட வெளிப்பிரயோகம்

**குறிப்பு:** வெந்நீரில் குளிக்கவும்.

## 137 முலைக்குத்து தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 5 படி |
| சித்திரமூலவேர் சட்டை | 1 பலம் |
| மிளகு | கால் பலம் |
| மாவிலங்கக் கொழுந்து | கொட்டைப் பாக்களவு (அரைத்தது) |

**செய்முறை:** இவைகளை நசுக்கி, எண்ணெயில் போட்டு, அடுப்பிலேற்றி, எரித்துக்காய்ச்சி, முறுக்குப் பதத்தில் இறக்கிக்கொள்ளவும்.

**தீரும் பிணிகள்:** முலைக்குத்து. அரையாப்பு. பவுத்திரம், கண்டமாலை. தொடைவாழை, விப்புருதி, அழிகிரந்தி, செல்லாப்பு, செங்கரப்பான், கருங்கரப்பான்.

**அளவு:** 2, 3 கரண்டி எண்ணெய் உட்கொண்டு வெளியில் தடவவும்.

**உணவு:** உப்பு, புளி கூடாது. 6 நாட்கள் பத்தியம் காக்கவும்.

| | |
|---|---|
| பூவரசங்காய் | 4 படி |
| சங்கங்குப்பி | கழற்சி |
| வெருகன் கிழங்கு | துத்தி |
| கோடைக்கிழங்கு | வாதமடக்கி |
| அசுவகந்தி | கிளிமூக்குக்கிழங்கு |
| கோழி அவரை | பெருமரத்தின் இலை |

வகைக்குச் சாறு 5 படி வீதம்

| | |
|---|---|
| பூவரசம்பட்டை | 1 பலம் |
| பெருமரப்பட்டை | 4 பலம் |
| அமுக்ராக்கிழங்கு | 5 பலம் |
| கருவப்பட்டை | |
| மாவிலிங்கப்பட்டை | |
| செங்கதாரிப்பட்டை | |
| அவுரி வேர் | |
| வேப்பம்பட்டை | |
| வெருகன் கிழங்கு | |
| சுடுதுத்தி | வகைக்கு 5 பலம் |

| | |
|---|---|
| காந்தம் | |
| கருஞ்சீரகம் | |
| கார்போக அரிசி | |
| தாளகம் | |
| கந்தகம் | |
| கடுகுரோகணி | |
| காட்டுச்சீரகம் | |
| வாலுளவை அரிசி | வகைக்கு 5 வராகன் |

சிற்றாமணக்கு நெய் 3 படி

**செய்முறை:** பூவரசங்காய்ச்சாறு 4 படி எடுத்துக் கொண்டு, பின் சொன்ன சாறுகளுடன் கலக்கவும். பின்பு கஷாய வகைகளை 5 பலம் தனித்தனியே எடுத்துக்கொண்டு பெருந் தாழியில் பொடிசெய்து போட்டு, 8 படி நீர்விட்டு

கால் பாகமாகக் காய்ச்சவும். இந்தக் கஷாயத்தை முன் சொன்ன சாறுகளுடன் கலந்து கொள்ளவும். கடைச் சரக்குகளை 5 வராகன் வீதம் தனித்தனியே எடுத்துக் கொண்டு, அரைத்துப் பொடியாக்கி சாற்றில் தூவவும். சாற்றில் ஆமணக்கு நெய் 3 படியைக் கூட்டிக்கொண்டு அடுப்பேற்றி எரித்து, வடித்துக்கொள்ளவும்.

**அளவு:** ஒரு கரண்டி வீதம் உண்ண.

**தீரும் பிணிகள்:** அரி கிரந்தி, சொரி கிரந்தி, அத்திக் காய், ஆலங்காய், கிரந்திகள், புண் கிரந்தி, வெள்ளை சூலை 18, மேகம் 21, பவுத்திரம், புண், சூலை, கை கால் ஊறல், குட்டம், கரப்பான், வெடி சூலை, அண்டவாதம் தீராத்தினவு, சீழ் பிரமியம், யோனிப்புற்று, இலிங்கப்புற்று அழல் மேகவாயு, அந்தர வீக்கம், கருங்கிரந்தி.

**உணவு:** முருங்கைப்பிஞ்சு, பசும்பால், கத்தரிப்பிஞ்சு பச்சைப் பயறு, புடல் பிஞ்சு, முளைக்கீரை ஆகும்.

**குறிப்பு:** முருங்கை இலையை வறுத்துச் சேர்க்கவும்.

**உணவு:** புளி, உப்பு, கறி, புகையிலை, பொடி கூடாது. உடல் வன்மைக்குத் தக்கபடி பத்தியம்.

## 139 மேகத்துக்கு எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| சத்திச்சாரணைக்கிழங்குச்சாறு | 1 சேர் (280 கி) |
| கிரந்தி நாயகம் இலைச்சாறு | 1 சேர் |
| விளக்கெண்ணெய் | 1 சேர் |
| சுக்கு | கண்டத்திப்பிலி |
| திப்பிலி | ஓமம் |
| சிற்றரத்தை | அதிமதுரம் |
| அக்கரகாரம் | சடாமாஞ்சில் |

| | |
|---|---|
| செவ்வல்லிக்கொடி | பூதகரப்பான்பட்டை |
| வாதகரப்பான்பட்டை | இலவங்கப்பத்திரி |

| | | |
|---|---|---|
| பூண்டு வகைக்கு | 10 | வராகன் |
| சாதிக்காய் | 3 | ,, |
| கஸ்தூரி மஞ்சள் | 10 | ,, |
| கடுகுரோகணி | 4 (ட) | ,, |
| கடுக்காய் | 10 | ,, |

**செய்முறை:** கடைச்சரக்குகளை பொடி செய்து கொண்டு, சாறு எண்ணெயில் கலந்து, அடுப்பேற்றி எரித்துப் பதத்தில் வடிகட்டிக் கொள்ளவும்.

**உணவு:** இச்சா பத்தியம்

## 140 மேகப்பிடிப்புத் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கந்தகம் | 5 வராகன் |
| விளக்கெண்ணெய் | 5 சேர் (கால்) |
| சேங்கொட்டை | 5 பலம் |

**செய்முறை:** சேங்கொட்டையை நறுக்கி, எண்ணெயில் போட்டு, கந்தகத்தைப் பொடிசெய்து, தூவி வடிகட்டி எடுத்துக்கொள்ளவும்.

**தீரும் பிணி:** மேகப் பிடிப்பு.

**முறை:** 3 நாட்கள், 3 வேளை வீதம் உண்ணவும். கடும் பத்தியம் கடைபிடிக்கவும்.

## 141 மேகத்தடிப்புத் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| அவுரி இலைச்சாறு | வ படி (கால் படி) |
| புளியாரைச்சாறு | ,, |
| கரிசாலைச்சாறு | ,, |

| | |
|---|---|
| ஊத்தெண்ணெய் | படி ௫ |
| எண்ணெய் | சீரகம் |
| சர்க்கரை | |

**செய்முறை:** எண்ணெயில் சாறுகளைக் கலந்து கொள்ளவும். 3 நாட்கள் சூரிய புடம் வைத்து எடுத்துக் கொண்டு, அடுப்பிலேற்றிச் சூடுபண்ணவும். 5 பலம் சீரகம் 5 பலம் சர்க்கரையைப் பொடிசெய்து போட்டு பதத்தில் வடிகட்டிக் கொள்ளவும்.

**அளவு:** கால் சேர் 1 நாளைக்கு 3 நாட்கள் குடிக்கவும்.

**உணவு:** வெந்நீர் சாதம், துவரம் பருப்புத்துவையல் மறுபத்தியம் மூன்று நாட்கள் 1 மண்டலம் வாயுப் பொருட்கள் நீக்கவேண்டும்.

**குறிப்பு:** விளக்கெண்ணெய் தேய்த்துக் குளிக்கவும்.

**தீரும் நோய்கள்:** மேகத்தடிப்புகள், வெண்குட்டம்.

## 142 பீனசம் தீர

**செய்முறை:** தேங்காயைத் துருவி எடுத்துக்கொள்ளவும். புளியங் கொட்டையை அரைக்கால் மாகாணி பொடித்துக்கொண்டு, தேங்காய்த் துருவலுடன் கலந்துகொள்ளவும், இக்கலவையைப் பிசைய, நெய் கிடைக்கும். பதனம் செய்து உண்ணவும். வாயில் அவல், பொரி அடக்கிக் கொள்ளவும்.

**முறை:** நசியமாக அரைத்துட்டு, நாசித்துளைகளில் இடவும். தொடர்ந்து 5 நாட்கள் செய்யவும்,

## 143 பீனசத் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| அழிஞ்சில் வேர்ப்பட்டைக் கஷாயம் | படி 1 |
| துளசிச்சாறு | 5 படி |
| குப்பைமேனிச்சாறு | வ படி (கால்) |
| ஆடுதின்னாப்பாளை | ,, |
| மிளகு | 1 பலம் |
| வெங்காயம் | ,, |
| பூண்டு | ,, |
| நல்லெண்ணெய் | 1 படி |

**செய்முறை:** இவைகளைக் கலந்துகொண்டு, அடுப்பிலேற்றி எரித்து பதத்தில் வடிகட்டிக் கொள்ளவும்.

## 144 செவி நோவு தீர*

கையாந்தகரை, நெல்லிமுள்ளிச்சாறு இரு நாழி.

## 145 காதுகேட்க எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வேப்ப எண்ணெய் (169 மிலி) | ஆழாக்கு |
| மஞ்சள் | 5 |
| வசம்பு | 5 |
| பூண்டு | 5 |
| எண்ணெய் | 1 படி |

**செய்முறை:** இவைகளைக் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சி வடிகட்டிப் பயன்படுத்தவும்.

---

* இது முழுமையாக இல்லை.

**பயன்:** காதில் விட்டுத் தலை உச்சியில் தேய்க்கவும்.

**தீரும் பிணிகள்:** சலம் விழுதல், காதில் இரைச்சல் தீரும்.

## 146 காது குத்தல் தீர

**சரக்குகள்:**

பேய்ச்சுரை விதை
இந்துப்பு
எண்ணெய்

**செய்முறை:** எண்ணெயில் சூடுபடுத்தி, பொறுக்கும் நிலையில் காதில், வடிகட்டி விடவும்.

**தீரும் பிணி:** காது குத்து.

## 147 உள்ளி, ஆமணக்கு நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| பூண்டு 100 பலம் | சிற்றாமுட்டிவேர் |
| பேராமுட்டிவேர் | பேராமுட்டிவேர் |
| மாவலிங்கவேர் | முருங்கைவேர் |
| விளாவேர் | திரிபலை |

வகைக்கு 5 பலம்

ஆமணக்கு நெய் (5. 3லிட்) குறுணி

| | |
|---|---|
| திரிகடுகு | பெருங்காயம் |
| வசம்பு | செவ்வியம் |
| சிறுமூலம் | சீரகம் |
| கடுகு | சிவதை |
| இந்துப்பு | அரத்தை |
| அரிசித்திப்பிலி | ஓமம் |
| புங்கம்பாளைவேர் | கொடுவேலிவேர் |

வகைக்கு 5 வராகன்

**செய்முறை:** முதலில் கூறப்பட்ட 7 சரக்குகளைத் தண்ணீரில்போட்டுக் காய்ச்சிக்கொள்ளவும். கடைச்சரக்குகளை வெள்ளாட்டுப்பாலில் அரைத்து, கல்கமாக்கவும். கல்கம் இளநீர், எண்ணெயைக் கலந்துகொண்டு, அடுப்பிலேற்றிக் காய்ச்சி வடிகட்டவேண்டும்.

**தீரும் பிணிகள்:** மூத்திரதோடம், குடல்வாதம், பிலிகம், விருப்புருதி 12 வாதம், பெருவயிறு, யோனிச்சூலை, பவுத்திரம்.

## 148 உள்ளி ஆமணக்கு நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| தேங்காய்ப்பால் | குறுணி (5.3கி) |
| ஆமணக்குநெய் | 1 படி |

**செய்முறை:** கலந்துகொண்டு, காய்ச்சி, வடிகட்டி. வடித்து எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** உட்கொள்ள

**தீரும் பிணிகள்;** எரிகுன்மம், வலிகுன்மம், நீராமை, வயிற்றுவலி, நெஞ்செரிப்பு, நேத்திரவாயு, சத்திகுன்மம், அந்திரவாயு.

## 149 கிரந்திப்புண் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 படி |
| சித்திரமூலவேர்ப்பட்டை | பலம் (35கி) |

**செய்முறை:** வேரை அரைத்து, நல்லெண்ணெயில் கலந்து சூடுபடுத்தி வடித்துக்கொள்ளவும்.

அளவு : காலையில் $\frac{1}{8}$ சேர் மாலையில் விசம் சேர் குடிக்கவும்.

உணவு: மூன்று நாட்கள் பத்தியம் மறு பத்தியம் மூன்று நாட்கள் உப்பு, புளி நீக்கவும். 7ஆம் நாள் கஞ்சி தேய்த்து, முழ்கவும். உப்பு வறுத்துக் கூட்டவும். எட்டாம் நாள் பத்திய முறிப்பு.

**தீரும் பிணிகள் :** கிரந்திப்புண், சூலைக்கட்டு.

## 150 அண்டவாதத்துக்கு மருந்து

**சரக்குகள்;**

| | |
|---|---|
| முடக்கொத்தான்சாறு | 5 சேர் |
| விளக்கெண்ணெய் | ,, |
| பூண்டு | வராகன் (3.5கி) |
| மிளகு | ,, |
| வெள்ளைச்சாரணைவேர் | ,, |

**செய்முறை :** பொடிசெய்து காய்ச்சி இறக்கி, கம்பளியைச் சுட்ட சாம்பல் 1 வராகன் (3.5கி) கலந்து, உட்கொள்ள வேண்டும் தக்கபடி.

## 151 மேகம் 21ம் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | 2 படி |
| முத்தெருக்கம் செவிக்சாறு | 1 படி |
| இஞ்சிச்சாறு | ,, |
| முடக்கொத்தான்சாறு | ,, |
| வெங்காயச்சாறு | ,, |
| மூக்கரட்டைச்சாறு | 5 படி |
| கழற்சிஇலைச்சாறு | 1 படி |
| வல்லாரைச்சாறு | ,, |

| | |
|---|---|
| மயிர்க்கெண்ணெய் | 1 படி |
| வெள்ளைக்காக்கரட்டான்வேர் | 5 பலம் |
| கடுக்காய் | 1 பலம்(35கி) |
| சாதிப்பத்திரி | று பலம் |
| சீரகம் | (கால் பலம்) வ பலம் |
| கருஞ்சீரகம் | 1 பலம்(35கி) |
| சாதிக்காய் | 1 வராகன் (3,2கி) |
| நிலப்பனங்கிழங்கு | 5 பலம் |
| கடுகுரோகணி | ,, |

**செய்முறை:** முதலில் எண்ணெயுடன், சாறுகளைக் கலந்துகொண்டு, அடுப்பிலேற்றிக் காய்ச்சவும், கடைச்சரக்குகளைச் சூரணித்து, அடுப்பில் ஏற்றிய எண்ணெயில் தூவி கிளறிப் பதத்தில் எடுத்து வடிகட்டவும்.

**அளவு:** துட்டு எடை — பெரியவர்களுக்கு
அரைத்துட்டு எடை — சிறுவர்களுக்கு

**தீரும் பிணிகள்:** மேகவெட்டை, 21 வகை மேகம் தீரும்.

## 152 முட்டைத் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| முட்டை வெண்கரு | இஞ்சிச்சாறு |
| வெங்காயச்சாறு | தேன் |
| நல்லெண்ணெய் | |

**செய்முறை:** கோழிமுட்டை வெண்கருவுடன் சரக்குகளை அளவுடன் கலந்து, அடுப்பிலேற்றிக் காய்ச்சிப் பதத்தில் எடுக்கவும்.

**பயன்:** குளிக்க மேல் கடுப்பு, மேல் நோவு, தலைக் குத்தல் தீரும்.

## 153 சொறி தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| ஆடுதின்னாப்பாளை தனிச்சாறு | ஆமணக்குநெய் |
| பூண்டு | வசம்பு |

**செய்முறை:** சாறுடன் எண்ணெய் சமஅளவு கலந்து அடுப்பிலேற்றி எரித்துக் காய்ச்சிக்கொள்ளவும். பூண்டு, வசம்பு பொடிசெய்து தூவவும். வடிகட்டிப் பயன்படுத்தவும்.

**பயன்:** அரிப்பு, ஆறாச்சொறிக்கு வெளித்தடவ.

## 154 இளைத்த பிள்ளைகளுக்கு நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| பசுநெய் உழக்கு | நீர்ப்பூலாவேர் 6 பலம் |
| பூண்டு | வசம்பு |

**செய்முறை:** எல்லாவற்றையும் கலந்துகொண்டு கோழி இரத்தம் துளிவிட்டு, அடுப்பிலேற்றிச் சூடு செய்து பதத்தில எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** இளைத்த பிள்ளைகளுக்கு உட்கொள்ள 15 நாட்களுக்குத் தரவும்.

## 155 கணைகள் தீர

**சரககுகள்:**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | 2 படி |
| திரிகடுகு | நெல்லிப்பருப்பு |
| வசம்பு தலா 2 வராகன் | |
| நாயுருவிச்சாறு | கால்படி |
| கவிழ்தும்பைச்சாறு | ,, |
| நொச்சிச்சாறு | ,, |
| கண்டங்கத்திரிச்சாறு | ,, |

**செய்முறை :** கடை மருந்துகளைச் சாறுகளில் அரைத்துக் கலந்துகொண்டு எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**பயன் :** வராகன் — சிறுவர்களுக்கு
வராகன் — பெரியபிள்ளைகளுக்கு
வராகன் — பெரியவர்களுக்கு

## 156 மலசலம் போக

**சரக்குகள்:**

கற்பூரவல்லிச்சாறு உரி (672மிலி)
ஏரண்டை எண்ணெய் ,,
கொடிக்கள்ளிப்பால் —3 துளிகள்

**செய்முறை :** மிளகு பதத்தில் சூடுபடுத்திக்கொண்டு கொடிக்கள்ளிப்பாலில் 3 துளிகள்விட்டு வடித்துக்கொள்ளவும். உட்கொள்ளவும்.

**பயன் :** மல சலம் போகும்.

## 157 வாயு பிடிப்புக்குத் தைலம்

**சரக்குகள்:**

எருக்குப்பால் நாழி (கால்படி)
நல்லெண்ணெய் ,,
கோழிமுட்டைத்தைலம் ,,
பூண்டு ரசம் ,,
தழுதாழைச்சாறு நாழி
புளியிலைச்சாறு 2 நாழி
திப்பிலி திப்பிலிமூலம்
சித்திரமூலம் செவ்வியம்
மரமஞ்சள் சிற்றரத்தை
சுக்கு மிளகு

வகைக்குக் கால்பலம்.

**செய்முறை:** கடைச்சரக்குகளை சாற்றால் அரைத்துக் கரைத்து 3 நாட்கள் சூரியபுடத்தில் வைத்து, 3-ம் நாள் எடுத்து தைல பதத்தில் இறக்கவும்.

**பயன்:** வாயுக்குத் தடவிப் பிடிக்கவும்.

## 158 பீனசம் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| மலைவேம்புச்சாறு | கால் படி |
| பேய்ப்பீர்க்குச்சாறு | ,, |
| நல்லெண்ணெய் | ,, |
| அவுரி வேர் | கால் பிடி |

**செய்முறை:** நல்லெண்ணெயில் ஊறவைத்து 3 நாட்கள் சென்று எடுத்துக் காய்ச்சி, வடிகட்டிப் பயன்படுத்தவும்.

**குளிக்க:** நீர் பீசைம் தீரும்.

## 159 வண்டுகடி தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | கால் படி |
| சதுரக்கள்ளிச்சாறு | ,, |
| நீரடிமுத்து | கால் பலம் |
| பூதகரப்பான்பட்டை | |
| செங்கதாரிப்பட்டை | |
| வேம்பாடம் பட்டை | |
| நெல்லிக்காய்கந்தகம் | |

வகைக்கு 1 வராகன் (35 கி.)

**செய்முறை:** இவைகளைச் சேர்த்துக்கொண்டு, எண்ணெயுடன் கலந்து காய்ச்சி வடிக்கவும்.

**அளவு:** ஒரு கரண்டி உட்கொள்ளவும்.

**உணவு:** புளி, உப்பு விலக்கவும்.

## 160 நெஞ்சு வறட்சி போக

**சரக்குகள்:**

| | |
|---|---|
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கிராம்பு | அதிமதுரம் |
| சந்தனம் | சென்னகரபழம் |
| சிறுநாகப்பூ | கடுகரோகணி |
| விளாமிச்சவேர் | வகைக்கு 2 காசெடை |
| பசு நெய் | கால் படி |

**செய்முறை:** இவைகளை நெய்யில் அரைத்து, சூடு படுத்தி பதத்தில் எடுத்துக் கொள்ளவும்.

**தீரும் நோய்கள்:** நெஞ்சு வறட்சி, மேல்மூச்சு.

## 161 வேப்பெண்ணெய்த் தைலம்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | குறுணி (5. 3லிட்) |
| நல்லெண்ணெய் | ,, |
| மயிலிறகுப்பொடி | கால் படி |

**செய்முறை:** எண்ணெய்களைக் கலந்து சூடுபடுத்த வேண்டும். கொதி வந்தபிறகு, மயிலிறகுப் பொடியைப் போட்டுத் துரவவேண்டும். மேல் மூடிகொண்டு மூட வேண்டும். உருகின வெண்ணெய் பதம் வந்தவுடன் இறக்கி வைக்கவும்.

**பயன்:** உட்கொள்ள, வெளித்தடவ.

**தீரும் பிணிகள்:** சகலகுட்டம், சன்னி, கடிவிடயம் கால் கை முடக்கம் என்பன.

## 162 படை தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 படி |
| 27 தகரை விதை | கால் படி |

**செய்முறை:** தகரை விதையைப் பொடித்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி எடுக்கவும்.

**பயன்:** உட்கொள்ள காலை, மாலை 1 கரண்டி விதம்.

## 163 கும்மட்டிக்காய் எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | 10 சேர் |
| கும்மட்டிக்காய் குடைந்த நீர் | ,, |
| எலுமிச்சம்பழச்சாறு | ,, |
| தேங்காய்ப்பால் | ,, |
| வெங்காயச்சாறு | ,, |
| சுக்கு | ஒன்னரை சேர் |
| இந்துப்பு | 10 சேர் |
| திப்பிலி | அரை சேர் |

**செய்முறை:** சாறுகளைக் கலந்துகொண்டு, கடைச் சரக்குகளை விழுதுச் சாற்றிலரைத்து, எண்ணெயுடன் கலந்து, கரைத்து, எரித்து, மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டிக்கொள்ளவும்.

**தீரும் பிணிகள்;** வாயுக்கட்டி, உதிரக்கட்டி, அக்னி மாந்தம், வயிற்று வலி, குன்மவலி, நாக்குப்பூச்சி வன்மைக்குத் தக்கபடி தரவும்.

## 164 குளிர்ச்சி எண்ணெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கிராம்பு | 5 வராகன் |
| சாதிக்காய் | 1 வராகன் (3.5 கி.) |
| குங்குமப்பூ | 5 வராகன் |
| ஏலம் | கால் |

| | |
|---|---|
| சுக்கு | 2 வராகன் |
| அதிமதுரம் | 10 வராகன் |
| கொத்தமல்லி | 2 வராகன் |
| இலவங்கப்பட்டை | 11 வராகன் |
| தாளிசபத்திரி | 11 வராகன் |
| வால்மிளகு | 1 வராகன் (3.5 கி.) |
| சிற்றாமணக்கு எண்ணெய் | 2 சேர் |
| நெய்சுண்டி | வல்லாரை |
| புளியாரை | கற்றாழை |
| இளநீர்ப்பாளை வகைக்கு 2 சேர் | |

**செய்முறை:** சரக்குகளை அரைத்து, எண்ணெயில் கலந்துகொண்டு எரித்துப் பதத்தில் வடிகட்டவும்.

**பதம்:** மெழுகு பதம்,

**தீரும் பிணிகள்:** மூலக்கடுப்பு, மூலவாயு, பித்தவாயு, சோகை வகைக்களை வன்மை அறிந்து எண்ணெய் உட்கொள்ளவும்.

## 165 காதுவலி தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| பருத்தி இலைச்சாறு | சிறுபுள்ளடிச்சாறு |
| பூக்குறுத்துச்சாறு | நல்லெண்ணெய் |

**செய்முறை:** இவைகளைக்கலந்து, கொதிக்கவைத்து வடிகட்டி காதில் விடவும். வலி தீரும்.

## 166 காதுவலி தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| இந்துப்பு | ஆடுதின்னாப்பாளை |
| மஞ்சள் 51 எடை | வெற்றிலை 20 |

**செய்முறை:** இவைகளை, சிறுநீரில் அரைத்து, எண்ணெயில் கலந்து எரித்து எடுத்துக்கொண்டு காதில் விடவும்.

## 167 கரப்பான் சிலந்தி தீர

**சரக்குகள்:**

ஆடுதின்னாப்பாளைச்சாறு 2 படி

| | |
|---|---|
| மிளகு 10 | பூண்டு |
| வசம்பு | தேன் |

**செய்முறை:** இவைகளை எல்லாம் கலந்து எண்ணெய் கால்படி விட்டு எரித்துப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** சிலந்தி, செவ்வாப்புக்கு வெளியில் தடவ.

**குறிப்பு:** எண்ணெய் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வடிப்பது நன்று.

## 168 கண்நோவு தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கையான்சாறு உரி | (672 மிலி) |
| நல்லெண்ணெய் | நாழி(கால்படி) |
| அதிமதுரம் | 1 பலம் (35கி) |

**செய்முறை:** பால் வார்த்தரைத்து எண்ணெயில் கலந்துகொண்டு காய்ச்சிப்பதத்தில் வடிகட்டிப் பயன் படுத்தவும்.

**பயன்;** குளிக்க செவிடு, குருடு, சோவை நீங்கும்.

## 169 பெருவயிறு தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கள்ளிப்பால் | தில்லைப்பால் |
| அரத்தை | இந்துப்பு |
| திரிகடுகு | பூண்டு |

| | |
|---|---|
| நுனி மஞ்சள் | கருஞ்சீரகம் |
| வகைக்கு கழஞ்சு (4. 4 மி.கி.) | |
| பசுநெய் | கால் படி (நாழி) |

**செய்முறை:** சரக்குகளைப் பசுந்நயிரால் அரைத்து நெய்யுடன் கலந்துகொண்டு, அடுப்பிலேற்றி எரித்துக் கொண்டு, பதத்தில் இறக்கி, வடிகட்டிப் பயன்படுத்தவும்.

**பயன்:** உட்கொள்ள பெருவயிறு தீரும். பிரமேகம் போகும் எண்ணெயில் எரித்து, வெழுகுபதம்வர எடுத்து உண்ணவும்.

## 170 இரைப்புத் தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| பசு நெய் | கால் படி |
| திரிகடுகு | 1 வராகன் (3. 5 கி.) |

**செய்முறை:** கடைச்சரக்குகளை வறுத்துப் பொடி செய்துகொண்டு சலித்துக்கொள்ளவும். நெய்யை அடுப்பில் சூடுபண்ணி கொதிக்கும்போது பொடியைத்தூவி, மெழுகு பதத்தில் இறக்கவும்.

**அளவு:** துட்டு எடை உட்கொள்ள, துணியால் நெய்யை மூடி வைக்கவும்.

**உணவு:** தூதுவளைக் காய் பூ, முருங்கைக்காய் அயிரை, தேனி, குரவை, ஓலை, வாளை, கருவாடு, திருக்கை கருவாடு சேர்க்கவும்.

## 171 சொறி தீர

**சரக்குகள்:**

| | |
|---|---|
| பேய்ப்பீர்க்கஞ்சாறு | கால் படி |
| நல்லெண்ணெய் | பாதி அளவுக்கு |

**செய்முறை:** கலந்துகொண்டு, அடுப்பிலேற்றி எரித்து எடுத்துக்கொள்ளவும்.

**பயன்:** வெளித்தடவ

## 172 சூல் உண்டாக நெய்

**சரக்குகள்:**

| | |
|---|---|
| கடுகு | 1 கழஞ்சு (4.4 மி. கி.) |
| கள்ளிப்பால் | 3 கழஞ்சு |
| முடக்கொத்தான் இலை | 1 படி |
| பசுநெய் | கால் படி |

**செய்முறை:** இவைகளை அரைத்து, பசு நெய்யில் கலந்துகொண்டு அடுப்பிலேற்றி, எரித்துக்கொண்டு, இறக்கிக் கொள்ளவும்.

**அளவு:** உள்ளங்கையில் துட்டு எடை 3 நாட்கள் உண்ணவும். 2ம் நாள் பேதியாகும். மூன்றாம் நாள் செங்கல்லாய் பேதியாகும். புழு விழும். மறுபடியும் சூல் ஏற்படும்.

## 173 பிள்ளைதோடம் போக

**சரக்குகள்:**

பூவரசு வடக்கே செல்லும் வேர்

| | |
|---|---|
| நத்தை | குளத்து நண்டு |
| பூண்டு | வசம்பு |

**செய்முற:** இவைகளை ஒன்றாக நசுக்கி எடுத்துக் கொண்டு, எண்ணெயுடன் கலந்துகொண்டு, சூரிய புடம் வைக்கவும். பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

**பயன்:** உச்சந்தலையில் தேய்த்துவிடவும். வயிறு பேதியானால் 1 காசு எடை உள்ளே கொடுக்கவும்.

**தீரும்நோய்.** தோடம் தீரும்.

# பொதுவியல்

## பாகம்—2

### அளவைகள்

| | |
|---|---|
| குன்றி | 4.4 கிராம் |
| காசெடை | 4.4 கிராம் |
| உழக்கு | 336 மி.லி. |
| குன்றி எடை | 780 மி.கி. |
| சுண்டைக்காய் அளவு | 390 மி.கி. |
| துட்டு எடை | 25 மி.கி. |
| படி | 1.344 லிட்டர் |
| பண எடை | 488 மி.கி. |
| பலம் | 35 கி. |
| வராகன் | 3.5 கி. |
| விசை | 168 மி. லி. |
| ஆழாக்கு | 672 மி. லி. |
| உரி | 1.3 லி, கால் படி. |
| நாழி | 5.3 லிட்டர் |
| குறுணி | 21.5 லிட்டர் |
| தூணி | 4.4 மி.கி. |
| கழஞ்சு | 12 கி. |
| ரூபாய் | 280 கி. |
| சேர் | அரை |
| வ | கால் |
| 2 அரை நாழிகை | 1 மணி |
| தீர்த்தக்கரண்டி | 1.33 மி.லி. |
| நெய்க்கரண்டி | 4000 மி.லி. |
| உச்சிக்கரண்டி | 16 மி. லி. |
| பாலாடை | 240 மி. லி. |

## தைலத்தின் பிறப்பு

இதை 12 வகையாகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| கொதித்தல் | உருக்கல் |
| புடம் | தீநீர் |
| ஆதவம் | பூமி |
| மரம் | மலை |
| நீர் | புகை |
| சுடர் | இயந்திரம் |

**கொதித்தைலம்:** முத்துக்கொட்டையை இடித்து நீரில் கொதிக்கவைத்து எடுப்பது.

**உருக்கல்:** முட்டையை உருக்குவதால் உண்டாவது.

**புடம்:** குழிப்புடம் வைத்து எடுப்பது (சான்று சிவனார் வேம்புக் குழித்தைலம்)

**தீநீர்:** சந்தனம், அகில் போன்றவற்றைத் தூள் செய்து, பானையிலிட்டு எரித்து எடுப்பது.

**ஆதவத்தைலம்:** சூரிய ஒளியில் எடுப்பது.

**பூமி:** தானாக ஊற்றாக கொப்பளித்து வருவது.

**மரம்:** மரத்தின் வெட்டப்பட்ட பகுதியிலிருந்து வடிவது.

**மலை:** மலைகளின் பாறைகளில் உறைந்து எடுப்பது.

**நீர்:** நீரில் ஊறவைத்து, பிறப்பது சலத்தைலம். (சான்று, புனுகு)

**புகை:** தீயிலிட்டு, எரித்துக் குளிரவைத்துப் பெறப் படுவது. (சான்று சாம்பிராணித் தைலம்)

**சுடர்:** சீலையில் தடவிக் கொளுத்தி எடுப்பது. (சான்று: ஓணான் சுடர்த் தைலம்)

**இயந்திரம்:** செக்கிலிட்டு ஆட்டி எடுப்பது.

## தைலம்

இது ஐந்து வகைப்படும் 1 குடித்தைலம் 2 பிடித் தைலம் 3 சிலைத்தைலம் 4 துளை சிகிச்சைத் தைலம்

[தேரையர் தைலவர்க்கச் சுருக்கம்]

## எண்ணெய் விதி

| | |
|---|---|
| மருத்துவர்க்கு | 1 பங்கு |
| நோயாளி | 2 பங்கு |
| ஆதுலர்க்கு | 1 பங்கு |
| உச்சிக்கு | 7 துளிகள் |
| காதுகள் | 3 ,, |
| நாசித்துளை | 2 ,, |

## அரைப்பு

உயர் தைலம் — சிகைக்காய், ஈங்கைப்பட்டை.

விரணம், வரட்சி — உசிலைத்தூள், இறுப்பைத்தூள்

பசுநெய் — பச்சைப்பயறு

மாமிசநெய் — சிறுகாரைச் செடித்தூள்

நல்லெண்ணெய் — மணிபுங்குக்காய்த்தூள்

## இச்சாபத்திய விதி

புட்பாகல், மா, கத்தரி, கொத்தவரை, வெண்பூசணிக் காய், அகத்திக்கீரை, மந்த வகை உணவுகள், இவைகளை நீக்குதல்.

## மருந்துப் பொருட்களின் செய்கை

**அசத்தி:** மருந்திடுதல் போகும். வன்கிரந்தி வாய் வெந்திருந்த ஆசனம் செரிக்கும். வருந்த சகத்திலெழு பித்தமதி சாந்தியாம நாளும் அகத்தி இலை தின்னு மலர்க்கு.

**பொருள்:** மருந்தீடு, கிரந்தி, வாய்வேக்காளம் பித்தம் என்பன போகும். உணவு சிரணமாகும்.

**அதிமதுரம்:** மெயிறு, கழுத்து. தலை. நாரவாய் இவ்விடத்து நோய்கள் சுரம், அதைப்பு, உதாவர்த்தரோகம், வாயு, மூலமுடி. எலி, பாம்பு, மரம் இவற்றின் விடம் நீங்கும்.

## அதிவிடையம்

அதிவிடையஞ் சர்க்கராற்புதநோய் வெப்பு கொதி மருவு பேதியொடுகோழை எதிர் வாந்தி என்றுரைக்கும் நோய்க் கூட்டம் இல்லாத சுற்றிவிடும் குன்றி நகர் முலையாய் கூறு."

**பொருள்:** பேதி, வெப்பு, கோழை, வாந்தி என்றுள்ள நோய்கள் எல்லாம் போகும்.

## அரத்தை

"தொண்டையிற் கட்டும் கபத்தை தூர துரத்திவிடும் பண்டை சீதத்தைப் பனகழக்கும் - கெண்டைவிழி மின்னே கரப்பனைலேருக்கும் பசி கொடுக்கும் சொன்னோம் அரத்தை சுகம்."

**பொருள்:** கபம், சீதம், கரப்பான் நீக்கும் பசியைத் தரும்.

## அத்தி

"காரமோ உட்டிணமாம் காதுகின்ற பித்தத்தை நீரிழிவைத் தலை, நீழ, இரத்தம்-சேரும் கிரிச்சாரத்தைப் போக்கும் கிளர் கோளி என்னும் மரச்சரும் பாலதனைவாங்கு."

**பொருள்:** காரம், உட்டிணம், பித்தம், நீரிழிவு, ஆலை, மூத்திரக் கோளாறுகள் எல்லாம் அத்திமரப்பால் போக்கும்.

## அகில்

" தளர்ந்தலிருத்தருக்காம் தக்க மணத்தால்
வனைந்த சுரமணைத்துமோடு—வளந்திக்கு
மானே அகில் புகைக்கு வாந்தி, அரோசகம்போம்
தானே தளர்ச்சி அறும் சாற்று."

**பொருள்:** முதியோர்க்கு ஆகும் மணத்தல் சுரம், வாந்தி, அரோசகம் தளர்ச்சி நீங்கும்.

## அத்திப்பட்டை

விறு கடுப்பு இரத்தம் வெண் சீதஇரத்தமொடு
நாறு விரணங்களெல்லாம் நாடாவாம்—கூறுங்கால்
அத்திதரும் மேகம் போம் ஆயிழையே எஞ்ஞான்றும்
அத்திப்பால் பட்டை கறி.

**பொருள்:** சீதபேதி, இரத்தபேதி, இரணங்கள், மேகம் எல்லாம் பால், பட்டை, காய் என்றவற்றால் தீரும்.

## அரிதாரம்

தாகைத்தின் பேருரைக்க தால் கவுள் நோய் குட்டம்
நீளக்குளிர் காய்ச்சால் நீடுகபம்—நாளங்கொள்
துட்டப்பரங்கிப்புண், சூழ் அழுகண் மண்டைநோய்
கிட்டப்படுமோ கிளத்து.

**பொருகள்:** குளிர்காய்ச்சல், கபரோகம், பரங்கிப்புண். தாடை, நாக்கில் உண்டாகும் நோய்கள், குட்டம், அழுகண், மண்டைநோய் என்பன நீங்கும்.

## அசுவகந்தி

கொஞ்சம் துவர்ப்பாம் கொடிய சுயம் சூலை அரி
மிஞ்சு கரப்பான் பாண்டு வெப்பதப்பு—விஞ்சி
முசுவுறு தோடமும்போம் மோகம் அனலுண்டாம்
அசுவகந்திக் கென்றறி.

**பொருள்:** துவர்ப்பு ருசி உண்டு. சயம், சூலை, கரப்பான், பாண்டு என்பன நீங்கும், வெப்பம் உண்டாக்கி, தாதுவிருத்தி.

## அவுரி

பெரிய அவுரித் தழைதான் ஓதுபதினெண்
அரிய நஞ்சை தின்றவர்க்கும் ஆகும்—தெரிவரிய
வாத வெப்பு காமாலை மைந்தர்க்கு உறுமாந்தம்
சீதம் அகற்றும் நெரி.

**பொருள்:** நஞ்சு முறிப்பான். வாதவெப்பம், காமாலை, மாந்தம், சீதம் போகும்.

## அமுரி

காணாக்கடிபோம் கதித்தெழுந்த விக்கமது
காணாது காயசித்தி கைகுளாம—பூணே
பதித்த கொங்கை மாதே பகர் மாந்தருள்
உதித்த சிறு நீருக் கென்றோது.

**பொருள்:** காணாக்கடி, விக்கம் என்பன நீங்கும். காய கற்பமாகும்.

## அபின்

நல்ல அபின் குணத்தை நாடறியும் நாம் புகல்வ
நல்ல குன்மம் வாதம் அருஞ்செவிநோய்-பல்லில் வலி
பேதி மந்தம் அத்தி நோய் பீனசம்போம் வன்மை
உண்டாம் சாதி உதர துத்திதான்

**பொருள்:** குன்மம், வாதம், செவிநோய், பல்வலி, பேதி, அத்திசுரம், நீங்கிடும் பீசைம்.

## அக்ரகாரம்

அக்ரகாரம் அதன்பேர் உரைத்தக்கால்
உக்கிராக அத்தோடம் ஒடுங்கான்—மூக்கியமாய்
கொண்டால் சலம் ஊறும் கொம்பனையே தாக சுரம்
கண்டகல் பயந்தோடும் காண்.

**பொருள்:** ஊழிநோய், தாகசுரம் போகும்.

## அரக்கு

குட்டம் அசுர்க்கு பித்தம் குன்மம் இரைப்பென்
புருக்கி பட்டிடுபுண் ஆகச்சூர்பங்கநோய் தொட்டோர்
அரக்கரக்குஞ் சன்னிசுரம் ஐயம் இவைக்கெல்லாம்
அரக்கரக்குநூலை அறி

**பொருள்:** குட்டம், பித்தம், குன்மம், இரைப்பு, என் புருக்கி, சன்னிசுரம் ஐயம் என்பன நீங்கும்.

## ஆலமரம்

சொல்லுகின்ற மேகத்தை துஷ்ட அகக்கடுப்பை
கொல்லுகிற நீரிழிவை கொல்லுங்கான்—நல்ஆவின்
பாலும் விழுதும் பழமும் விதையும் பூவும்
மேலும் இலையுமென விள்.

**பொருள்:** மேகம், உட்கடுப்பு, நீரிழிவு போக்கும் ஆவின் பழம் விதை, பூ என்பன.

## ஆகாசக் கருடன் கிழங்கு

அரையாப்பு வெள்ளையகலாக் கொறுக்கை
கரையாத கரையாத கட்டி இவை காணார்—வரையில்
திருடரெனச் செல்லும் விடம்சேர் பாம்பும் அஞ்சும்
கருடன் கிழங்கதனைக்கண்டு.

**பொருள்:** கொறுக்கைப்புல், அரையாப்பு, கட்டி பாம்பு விடம் என்பன கருடன் கிழங்கால் நீங்கும்.

## ஆடாதோடை

ஆடாடைப் பன்னம் ஐயாறுக்கும் வாதமுதற்
கோடா கோடி சுரத்தின் கோதொழிக்கும் நாடின்
மிகுத்தெழுந்து சன்னி பதிமூன்றும் விலக்கும்
அகத்து நோய் போக்கும் அறி.

**பொருள்:** கோழையை நீக்கும் சுரம், சன்னி 13ம் போக்கும்.

## ஆளிவிதை

வீக்கம், அதிவாந்தி பேனி வலி, வாயு
தூக்கு நரம்பின் குத்தல் தொல் அழலை—ஓக்காளம்
மளி அருசி விரை வாதப் போக்கும்
ஆளி விதை தன்னால் அறி.

**பொருள்:** விக்கம், மிகு வாந்தி, வாதக் குடைச்சல், அரோசகம், விரைவாதம் போக்கும்.

## இளநீர்

இளநீரால் வாதபித்தமேகு மனதும்
தெளிவாய்த்துவங்கு இகுமிகு திருஷ்டி தொளிவும்
குளிர்ச்சியு முண்டாகும் கொடிய அனல்நீங்கும்
தளர்த்தகள நொய்யதா தம் சாற்று.

**பொருள்:** வாதபித்தம் போகும், கண்ஒளி ஏற்படும். உட்கொள்ளக் குளிர்ச்சி உடல் இலகுவாகும்.

## இலவங்கப்பத்திரி

மேக சுரம் சீதசுரம் வெட்டை சுவாசங்காசம்
தாக பித்தம் வாந்தி சர்வாசிய நோய் மேகத்திறன்
கட்டி யொடு தாதுநட்டம் கைப்புருசி போக்கிவிடும்
இட்ட இலவங்கத்தின் இலை.

**பொருள்:** மேகசுரம், சீதசுரம், சுவாசகாசம், வாந்தி, மேகக்கட்டி, தாதுநட்டம் என்பன போக்கும்.

## இந்துப்ப

"அட்ட குன்மம், அசுர்க்கர சூர் சீதபித்த 1 துட்ட
ஐயம் நாடிப்புண் தோடங்கள்—கெட்டமல கட்டு
விடவிந்துப்பை, காமிய நோய் வன்கரப்பான்
விட்டுவிட இந்துப்பை விள்"

**பொருள்:** 8 வகை குன்மம், ஐயம், புண், இந்துப்பை உண்ண தீரும்.

## இரசம்

விழி நோய் கிரந்தி குன்மம் மெய் சூலை புண்குட்
அழிசொல் இல் விந்துவினால் அத்தை—வழியாப்
பரியும் விதியாதும் புரியினோயெல்லாம்
இரியும் விதி யாதுமிலை.

**பொருள்:** கிரந்தி, குன்மம், சூலை, கண்ணோய் என்பன தீரும்.

## இண்டு

பீனிசத்தைப் போக்கும் பெருகியதோர் நீரேற்ற
தானசிக்கச் செய்யும் இது சத்தியங் காண்—வானசைக்
மண்டைக் குடைச்சல் மருவுமுக சன்னியும்போம் [கும்
பண்டையுற்ற இண்டினுக்குப் பார்.

பொருள்: பீசைப், நீரோற்றப், மண்டைக்குடைச்சல் சன்னி தீரும்.

## இலுப்பை

புண்ணும் புரையும் அறும் போநத் துவர்ப்பாகும்
எண்ணும் அகக்கடுப்பிருகமோ—பெண்ணே கேள்
நீரிழிவு ஏகும் நெடுமோனம் மூலத்தால்
போரடர் கடுப்பு இரத்தம் போம்

பொருள்: புண், புரை, நீரிழிவு, மூலம், இரத்தக் கடுப்பு தீரும். துவர்ப்புச்சுவை உள்ளது.

## இலந்தை

பித்தம் மயக்கம் ருசி போராய் பெரும் வாந்தி
மொத்த நிலம் எல்லாம் முடித்திடுங்காண்—மெத்த
உலர்ந்த வெறும் வயிற்றில் உண்டால் எரிவாம்
இலந்தை நறுங் கனியை என்

பொருள்: பித்தம், மயக்கம், அருசி, வாந்தி போக்கும். வெறும் வயிற்றில் உண்ண, எரிச்சலை உண்டு பண்ணும்.

## இரஸ்தாளிவாழை

வெவ்வாழை வெள்வாழ சேர்ந்தரஸ்தாளி மொந்தன்
ஒவ்வும் இதை நோயோர்க்கு உலகத்தில் — சவ்வருக்கு
வாழை மலைவாழை பசும்வாழை கருவாழைகளில்
ஊழி கருவாழை நன்றாம் ஓது.

## இஞ்சி

இஞ்சிக்கிழங்கு இருமல் ஐயம் ழக்காளம்
வஞ்சிக்கும் சன்னிசுரம் வன்பேதி விஞ்சுகின்ற

சூலையறும் வாதம்போம் தூண்டாத தீபனமாம்
வேலையுறுங் கண்ணாய் விளம்பு

பொருள்: இருமல், கோழை, சுரம், சன்னி, பேதி சூலை என்பன நீக்கும்.

## உள்ளி

சன்னியோடு வாத்தலைநோவு தாளின்வலி
மன்னியவரு நீர்க்கோவை வன்சீதம்—அன்னமே
உள்ளுள்ளிக் காண்பாய் உளைமூலைரோகமும்போம்
கொள்ளுள்ளி தன்னால் வெகுண்டு.

பொருள்: சன்னி, வாதநோய், தலைவலி, கால்வலி பீனைசம், மூலம் என்பன தீரும்.

## ஊமத்தை

வாதம் அறும் பித்தமயக்கம் அறும் மாநிலத்தில்
தீது கரப்பான் சிரங்கு அகலும் கோதாய்கேள்
மாமத்தமாகும் வரஎசி எல்லாம் போகும்.
ஊமத்தங்காய் என்றுரை.

பொருள்: வாதம், பித்தமயக்கம், கரப்பான், சிரங்கு என்பன ஊமத்தங்காய் போக்கும்.

## ஊசிக்காந்தம்

காந்தத்தால் சோபை, குன்மம் காமிலமேகம் பாண்டு
சேர்ந்ததிரி தோடம் வெட்டைசீதங்கால்—ஓய்ந்தபசி
பேருதரம் கண்நோய் பிரமியம்நீர் ஆமையும் போம்
ஓரினிறை ஆயுட் உறும் உன்.

பொருள்: சோபை குன்மம், மேகம், பாண்டு, திரிதோடம், வெட்டை, சீதம் அசிரணம், பெருவயிறு, கண்நோய், பிரமியம், நீர், ஆமை, என்பன நீக்கும்.

## எலுமிச்சை

தாகங் குகைநோய் சூழா சிலிபதநோய்
வேகம் கொள் உன்மாதம் விறுபித்தம்-மா கண்ணோய்
கன்னநோய் வாந்திபோம் கட்டுவாதித் தொழிலில்
மன்னெலுமிச்சங் கனியை வாழ்த்து.

**பொருள்:** தாகம், யானைக்கால், பயித்தியம், பித்தம், கண்ணோய் வாந்தி என்பன தீரும்.

## எருக்கு

எருக்கம் பால் கட்டிகளையே கரைக்கும் வாயுவைத்
திருக்கறவே கொன்று விடும் தீர—செருக்கான
சந்நி வலி தீர்க்கும் சார்ந்த பல செந்தூரம்
உன்ன முடியுமென ஓது.

**பொருள்:** கட்டிகளை உடைத்துக்கரைக்கும், வாயுவைப் போக்கும் பல செந்தூரங்களை அரைக்கப்பால் பயன் படும் சன்னி நோய், வலி போக்கும்.

## எருமை மோர்

தாகம் கிரகணி சலக்கழிச்சல் காமாலை
ஆக்கம் குடையுய் அற்றுப்போ மோக மில்லா
தேவாமிரதமு மாஞ்சீர் மானிடர் தமக்கு
மூவா மருந்து எருமைமோர்.

**பொருள்:** தாகம், கிராணி, சகலக் கழிச்சல், காமாலை, வயிற்றுக்குடைச்சல் தீரும்.

## எண்ணெய்

புத்திநயங்குளிர்ச்சி பூரிப்பு மெய்புகளும்
சத்துவங் காந்தி தனி இளமை மெத்தவுண்டாம்.
கண்ணோய் செவிநோய் கபாலஅழல் காசநோய்
புண்ணோய் போம் எண்ணெயால் போற்று

**பொருள்:** குளிர்ச்சி, பூரிப்பு, இளைமை, கண்ணோய், செவிநோய், மூளையின் வெப்பம், காசநோய் என்பன தீரும்.

## எருமை வெண்ணெய்

எருமை வெண்ணெய்க்கு எரி நீரிழிவு
பருவ மயிலே கேள் இப்பாரில்—திருமியுறும்
மந்தமாம் வாதமிகு மாறா சுபாங்கரப்பான்
தொந்தமா நோயடருஞ் சொல்.

**பொருள்:** நீரிழிவு, கிருமி மந்தம், கரப்பான் தீர்க்கும்.

## ஏலம்

தொண்டைவாய் கவுள் தாலு குதங்களில்
தோன்றும் நோய் அதிசாரம் பன் மேகத்தால்
உண்டை போல் எழும் கட்டி கிரிச்சரம்
உழலை வாந்தி சிலந்தி விவுசுரம்
பண்டை வெக்கை விநாக நோய் காசமும்
பாழும் சோமப்பிணி விந்து நட்டம் உள்
அண்டை ஈளை வன்பித்தம் இவைகலாம்
ஆலமாம் கமழ் ஏலமருந்தே.

**பொருள்:** தொண்டை, வாய், சூதங்களில் உள்ள புண்கள், அதிசாரம், கட்டிகள், மூத்திரநோய் என்பன தீரும்.

## ஓரிதழ் தாமரை

ஓரிதழ்த் தாமரையின் உற்ற குணத்தைக் கேளாய்
மார்பில் இல்லாத மங்கையர்க்கு மோரில்
குடிக்கப்பால் உண்டாகும் கோர மேகத்தை
படிக்குளிருக்கா தொழிக்குபார்.

**பொருள்:** மங்கையருக்கு பால் பெருகும். மார்பு பெருக்கும் கோர மேகம் போக்கும்

## ஓமம்

சீதசுரம் காஞ்செரியா மந்தம் பொருமல்
பேதி இரைச்சல் கடுப்பு பேர் ஆமம்—ஓதிருமல்
பல்லொடு பல்மூலம் பகம் இவை நோயென்செயு மோர்
சொல்லொடுபோம் ஓமெனச்சொல்.

**பொருள்:** சீதசுரம், மந்தம், பொருமல், பேதி, இரைச்சல், கடுப்பு, வயிற்று நோய் என்பன தீரும்.

## கந்தகம்

நெல்லிக்காய் கந்திக்கு நீள் பதினெண் குட்டமந்தம்
வல்லைக்கலிசை குன்மவாயு கண்ணோய்—பொல்லா
விடக்கடிவன் மேக நோய் வீறுசுரம் பேதி
திடக கிரகணி கபம் போம் தேர்.

**பொருள்:** 18 குட்டம், ஈரல் நோய்கள், குன்மவாயு, கண்ணோய், விடக்கடுவன், மேகம், சுரம், பேதி, கிரகணி என்பன தீரும்.

## கடுக்காய்

கடுக்காயும் தாயும் கருதில் ஒன்றென்றாலும்
கடுக்காய் அத்தாய்க்கு அதிகம் காண் நீ—நோய்
ஓட்டி உடல்தேற்றும் உற்றஅன்னையோ சுவைகளை
ஊட்டியுடல் தேற்றும் உவந்து

**பொருள்:** தாய்க்கு ஒத்த குணம் கொண்டது. கடுக்காய் அது உடல் தேற்றும், நோய் அகற்றும்

## கடுகுரோகணி

மாந்தம் ஐயம் சுரம் வாயுகரப்பன் ஆமஞ்
சேர்ந்த மலக்கட்டு திரிதோடம்-பேர்ந்த பொட்டு
புண் வயிறுநோய் இவைபோம் பொற்கொடியே பேதி
உண்டாம் திண் கடுகுரோகணிக்குத் தேர்.

**பொருள்:** மாந்தம், ஐயம், சுரம், வாயு, கரப்பான் மலக்கட்டு, திரிதோடம், புண், வயிற்றுநோய் என்பன தீரும்.

## கருஞ்சீரகம்

*கருஞ் சீரகந்தான் கரப்பானொடு புண்ணும்*
*கருஞ் சீராய் பீனிசமும் மாற்றும்—அருந்தினால்*
*காய்ச்சல் தலைவலியும் கண்வலியும் போம் உலகினில்*
*வாய்ச்ச மருந்தெனவே வை.*

**பொருள்:** கரப்பான், புண், பீசைம், தலைவலி, காய்ச்சல் கண்வலி போக்கும்.

## கடுகு

*இடிகாசம் நாசி சூர் ஈளை கபம் பித்தம்*
*கடிவாத சீதக்கடுப்போ—உடலில்*
**படு கோட்டு நோயென்னும் பங்கிவைகளைப்புண்*

**பொருள்:** காசம், பீசைம், இரைப்பு, பித்தம், சீதக் கழிச்சல் போக்கும்.

## கஸ்தூரி

சொல்லரும் வசியம் காந்தி சுகமுதல் அணுகும் பின்னும்
மெல்லியலார் தமக்கு நாதருத்தியாம் தலைநோய் ஏகும்
பல்லுரு கபமும் தீரும் பகரொணா பலமும் உண்டாம்
மல்லடர் சன்னி ருட்சை மாறும் கஸ்தூரிக்கென்னே

**பொருள்:** முகத்தில் ஒளி, வாசனை, நாதம் விருத்தி உண்டாகும். தலை நோய் கபம் தீரும்.

---

* ஒரு வரி இல்லை.

## கண்டங்கத்திரி

காசசுவாசம் கதித்த சய மந்த மனல்
விசு சுரம் சன்னி விளைதோடம் ஆசுறுங்கால்
இத்தரையுணிற் கா ஏரிகாரம் சேர் கணடங்
கத்தரி யுண்டாகில் காண்.

**பொருள்:** சுவாசகாசம், சயம், அனல் சுரம் சன்னி என்பன தீரும்.

## கற்றாழை

பொல்லா மேகம்கபம் புழு சூலை குட்டரசம்
அல்லாடு மந்தம் பகரந்த குன்மம்—எல்லாம் விட்
டே குமரிக்கு எரிச்சல் கிரிச்சரமும்
ஆகு குமரிக்கு மருண்டு.

**பொருள்:** மேகம், கபம், புழு, சூலை, குட்டம், மந்தம் குன்மம், எரிச்சல், நீர்த்தாரை, நீர்புழை, எரிச்சல் தீரும்.

## கருநொச்சி

மாதக்கடுப்பகலும் மாறாத பினசம் போம்
ஓதப் பேய் ஓடி ஒளிக்கும் காண்—வேதை செய்யும்
மண்டைக் குடைச்சலும் மாறும் கரு நொச்சிக்குப்
பண்டைத் தலைவலிபோம் பார்.

**பொருள்:** மாதவிடாய் தொடர்பான கடுப்பு, பீனசம் மண்டைக் குடைச்சலைத் தீர்க்கும்.

## கழற்சி

விரைவாதம் சூலை அறும் வெட்டையனல் ஏகும்
நிரை சேர்ந்த குன்மம் நிலையா—துறைசேர்
அழற்சி விலகும் அருந்தில் கசப்பாம்
கழற்சி இலை என்றுரைக்கும் காண்.

பொருள்: உஷ்ணக்கசக்கும், விரைவாதம், சூலை குன்மம் போக்கும்.

## கழுதைப்பால்

கழுதைப்பால் வாதம் கரப்பான் விரணம்
தழுதளையுள் வித்திரதிதானே —எழுகின்ற
முட்டிய புண் சீழ்மேகமொடு சொறி சிரங்கு
கட்டி இவை போக்கும் கழறு.

பொருள்: வாதம், கரப்பான், விரணம், புண், சீழ் மேகம், சொறி சிரங்கு, கட்டிபோகும்.

## கள்ளி

நரம்புச் சிலந்தி நலிர் வாதசன்னி
உரம் பெரிய வாதமிவை ஓடும்—செரும்புவியில்
கள்ளி மரப் பட்டையினால் காரநொச்சிப் பட்டையது
துள்ளு சன்னிவாத அகற்று

பொருள்: நரம்புச்சிலந்தி, வாதசன்னி என்பன போக்கும்.

## கஸ்தூரிமஞ்சள்

தலைவலி, நீரேற்றம், சளையாத மேகம்
உலைவு தரு பீனசத்தினூடே—வலிசுரப்பு
விஞ்சுகடி விடமும் வீறு விரணங்களும் போம்
மஞ்சட் கிழங்குக்கு மால்.

பொருள்: தலைவலி, நீரேற்றம், மேகம், பீனசம் கடிவிடம், விரணங்கள் போகும்.

## கஞ்சாக்கோரை

மாந்தக் கழிச்சலும் மாந்தம் கணம் போம்
சேர்ந்த மூலத்தின் இவை அடங்கும்—பூந்தடக்கை

அன்னமே, மேகம் அறுங் கஞ்சாக் கோரையினை
உன்ன இருமலை ஓது.

**பொருள்:** மாந்தக் கழிச்சல், மாந்தம், கணம், மூலம் மேகம்.

## களிப்பாக்கு

களிப்பாக்குத் தின்றக்கால் கண்டத்துள் கோழை
ஒளிப்பாகக் கட்டுஞ் துன்மை—தளிர்ப்பான
பித்த அரோசகம் போம் பேதிமிக உண்டாகும்
சித்த மகிழ்ச்சியும் செப்பு.

**பொருள்:** தொண்டையுள் கோழை போகும். பித்தம் அரோசகம் போகும். பேதி உண்டாகும். மன மகிழ்ச்சி உண்டாகும்.

## கற்பூரம்

கிருமி, சலதோடம் கிளை, வலிப்பு, சன்னி
பொருமல் மந்தம் அங்கிபட்டபுண்—எரிசுரங்கள்
வாந்தி பித்தம் சீதமுறு வாதம் செவிமுகநோய்கள்
சன்னி கற்பூரம் ஒன்றால் சாற்று.

**பொருள்:** கிருமி, சலதோடம், சன்னி என்பன தீரும், உட்கொள்ள வாந்தி பித்தம் தீரும். வெளித்தடவ வாதம் செவிமுகம் நோய்கள் தீரும்.

## கல்நார்

காசபித்தம் வாதங்கடுப்பிறு நோய் எரிவு வீசு
வீசுசர்த்தி நீரடைப்பு விந்து நட்டம்—பேசும் அசை
தின்னாரைக் கூவுமந்தம் தீக்குடர் கால் தாகமிவை
கன்னாரைக் கூவ விடுங் காண்.

பொருள்: காசபித்தம், வாதக்கடுப்பு, எரிச்சல், வாந்தி நிரடைப்பு, விந்து நட்டம், மாந்தம், நீர்த்தாரை எரிச்சல் என்பன தீரும்.

## கருஊமத்தை

விந்திரதம் கட்டும் எழின்மேனி தரும் குட்டமொடு
வந்த வியர்ப் பரிப்பு மாற்றும் காண்—முந்த
பெருமத்தம் செய்சுரத்தைப் போக்குங் கயப்பாங்
சருமத்தம் நன்மூலி காண்.

## கணைப்பூண்டு

கணைப் பூண்டிலை மேகக்கட்டியைக் கரைக்கும்
மணக்குமிக வாய்க்கு மதுரஞ்—சிணுக்கான
வாத கணம் பித்தகணம் மாறும் பசுரத்தின்கப
பேதம் அறப் போக்குமெனப் பேசு.

## காட்டுச் சீரகம்

கைகறுப்பு, மாறும்கடிய மேகம் போகும்
மெய்குளிரும் பித்தம் விளையுமோ—வெய்யகரி
கெட்டுபனை மூலையாய் குன்மவாதம் தொலையும்
காட்டுநற் சீரகத்தைக் காண்.

## காந்தம்

காந்தத்தால் சோபை குன்மம் காமில மேகம் பாண்டு
சேர்ந்த திரிதோடம் வெட்டை சீதம்கால்—ஓந்தபசி
பேருதரங் கண்ணோய் பிரமியம் நீர் ஆமை போம்
ஓரினிறை ஆயுள் உறும் உண்.

## கார்போக அரிசி

கார்போகமாம் அரிசி கண்டால் கரப்பான் புண்
பீர்சருவ நஞ்சிவைபோம் பித்தமுண்டாம்—பார்மீதில்

வாதகபம் நமைச்சல் வன்சொறி சிரங்கு அறும்
சீர் மலர் குழலாய் செப்பு.

## களாவேர்

விடத்துறு நோய் பித்தம் ஐயம் வேர்வை அதிதாகம்
திடத்த உதிரத்தினது சிக்கில்—சடத்து எழும்
அக்னிமந்தம் இவை அண்டாதொரு நாளும்
சிக்கெனக் களாவேரைச் சேர்.

## கிளியூரல்பட்டை

மணவர்க்கமாகும் வரு சுரத்தைப் போக்கும்
தணலாகிய வெப்பைத் தணிக்கும் குணமார்
கிளியூரல் பட்டையது சீதம்பயிலும்
அளியூரல் கூந்தன் மின்னே ஆய்.

## கிரந்தி நாயகம்

சீதமது மாவிஷமும் தீரும் விழி நோயகலும்
பூதமொடு மருளும் போகுங் காண்—மேதினியுட்
ஆயகத்துப் புண் கிரந்தி ஆறு மயிலே கிரந்தி
நாயகத்தினாலே நவில்.

## கூகைநீர்

கூகை நீற்றால் மாதர் குய்ய நோய் வித்திரதி
ஆகமென்னும் மார்பு நோய் அண்டுமோ-போகம்அதில்
வீரியமும் உண்டாகும் வீழ்கிருமி நோயோடு
தூர் இருமல் ஈளையும்போம் சொல்.

## குங்குமப்பூ

விந்து நஷ்டம் தாகம் அண்டம் மேகசலஞ் சூலைகபம்
உந்து சுரம் பித்தங்கால் உச்சிவலி—முந்துகண்ணில்

தங்குமப்பூவோடு உறுநோய் சர்த்தி இவைநிங்கவென்றால்
குங்குமப்பூ ஒரிதழைக் கொள்.

## குக்கில்

காச சுவாசம் கனத்த மேகக்கட்டி
விசுவிவுக்கடி விரிச்சு குட்டம்—பேசு
படர்தாமரைச் சிரங்கு பக்கை விரணங்கள்
இடர்செய்யில் குந்திரிக்கம் ஏந்து.

## குறிஞ்சான்

சிறு குறிஞ்சா வாதமொடு சீதத்தை நீக்கும்
மறுவுதிரம் இல்லாத மாதர்—குறுமூலகில்
அத்தி சுரமும் அகலாக் கடி விடமும்
தத்தி அகலத் தகர்ந்தான்.

## குன்றிமணி

நேத்திரநோய் பித்தம் நிறமழுங்கல் காமாலை
வேர்த்திடும் தாபச்சோப வெப்புடனே—கோத்திட்ட
ஐய முதல் யாவும் போம் ஆயிழையே காட்டிலுறை
செய்ய குன்றியின் விதையைச் சேர்.

## கொம்புபாகல்

மருந்துகளின் நற்குணத்தை மாற்றும் அஃதொன்றோ
திருந்தவலி வாதத்தைச் சேர்க்கும்—பொருந்துபித்தம்
கூட்டம் அவபத்தியத்தைக் கொண்டிருக்கும் வன்கரப்பன்
காட்டும் கொம்பு பாகற்காய்.

## கொன்றை

மலக்கிருமி ஓடும் மதுநீர் குடலாந்
தலத்து நோயும் குலைந்து சாயும்—நிலத்துள்
என்றைக்கும் வாடாத இன்பமலர்க் கொம்பே
கொன்றைப் பசுமலரைக் கொள்.

## கொல்லன்கோவை

சூலை பாண்டு திரிதோஷம் அக்கி வெப்பு கண்ட
மாலைகுடலின் வலி மாகுட்டர் — ஆலவிடம்
உட்கரப்பான் மெய்எரிப்பும் உண்டோகொல்லங்கோவை
கை குளிருக்க விளனுங்காண்.

## குங்கிலியம்

பெரும்பாடு மேகம்போம் பேரா உடலில்
அரும்பியபுண் ஆறும் இவையல்லால் — துரும்பாம்
எலும்புருக்கி புண் சீழும் ஏகும், உலகில்
சலம் பருகும் குங்கிலியத்தால்.

## குரோசானி ஓமம்

வெகு மூத்திரம் வாதம் விரிய நட்டம் புண்
உகு பேதி உட்கடுப்புனோடே—மிகுகரப்பான்
தீராக் கபம் இவைபோம் செய்யக் குரோசானி என்றால்
வாரா மயக்கம் உறுமால்.

## குமட்டி

பற்று தீப்பூச்சிகளைப் பற்பலவா மந்தத்தை
சுற்றுத்திரப் பித்தத்தைத் தூவிட—முற்றும்
அரிக்கும் அட்டி யாயிலை மாதங்கருரை அன்றோ
வரிக் குமட்டியாய் இலை மாதே.

## குப்பைமேனி

தந்த மூலப் பிணி, தீத் தந்திடு, புண் சர்வவிஷம்
உந்து குன்மம் வாத உதிர மூலந் தினவு
சூலஞ் சுவாசம் தொடர்ந்து பீனசம் கபம் போம்
ஞாலங் கொள் மேனியதனால்.

## குறுந்தொட்டி

வாத சுரம் தாகம் மதலை கணம் மாந்தம்
சீதசுரம் பித்தமென செப்பணங்கும்—ஓதுநம்பால்
நோய்
சேரா முட்டிக் கேதும் செய்யமட மயிலே
பேரா முட்டித் தூரைப் பேசு.

## கொடிக்கள்ளி

துய்யக்கரப்பன் சொறிசிரங்கும் புண்ணும்போம்
செய்யகடி குட்டநோய் சேருமோ—மெய்யில்
அடிக்கடிசேர் குன்மவலி அத்தனையும் தீரும்.
கொடிகள்ளிப் பாலுக்குக் கூறு.

## கொத்தான்

சித்தரறிவார் செறிகுழலே நீகேளாய்
கொத்தான் மிகக்குளிர்ச்சி கொண்டக்கால்—சுத்தம்
பிரமேகம் உட்கிரிச்சம் பித்தம் இளைப்பும்
அறுமே தவறாது அறி.

## கொத்தமல்லி

கொத்தமல்லிக்கீரை உண்ணில் கோர அரோசகம்போம்
பித்தமெல்லாம் வேருடனே பேருங்காண்—சத்துவமாம்
வெச்சனவே, போகம் விளையும் சுரம் தீரும்.
கச்சுமுலை மாதேநீ காண்.

## கொடிவேலி

கட்டி விரணம் கிரந்தி கால்கள் அரையாப்பு
கட்டி சூலை வீக்கங்காழ் மூலம்—முட்டி இரத்த
கட்டு நீரேற்றம் கனத்த பெருவயிறும்
அட்டும் கொடி வேலியாம்.

## கோரோசனை

நீரிழிவு மேகசுரம் நீங்கா கனல்வேகம்
கூறிய உன்மாதம் குழந்தைகள் நோய்—பாரகபம்
வீறும் மசூரியும்போம் வேகந் தன்னில் இரண்டாய்
கூறும் கோரோசனை கட்டு.

## கோட்டம்

நாட்டில் உறு வெட்டை நடுக்கம் எனும்நோய்கள்
கோட்டம் எனச் சொன்னால் தூலையுங்காண்—கூட்டில்
சுர தோடம் தொண்டை நோய் தோலாத பித்தம்
பரதேசம் போமே பறந்து.

## கோழி ஆவாரை இலை

ஆழி சுற்றும் வையத்தடர்ந்த பேராமை ஒரு
நாழியினில் கெட்டு நலியும் காண்—தோழிகள்
கோழி அவரைத் தழைக்குக் குன்மம் குடல்வாதம்
ஊழிவரைக்கும் வாரா ஓது.

## கோவை

கண்ணும் குளிர்ச்சி பெறும் காசமொடு வாயுவறும்
புண்ணும் சிரங்கும் புரண்டேகும்—நண்ணுடலம்
மதிலார் வெப்பகலும் வீழாநீர் கட்டேகும்
கோதிலா கோவை இலைக்கு.

## கோழிமுட்டை

வாதபித்தம் சேர்ப்பிக்கும் வன்தோடம் புண்போக்கும்
தாதுவை மெத்தத் தழைப்பிக்கும்—ஓது
கபத்தை அடக்கும் கரப்பான் உண்டாக்கும்
இபத்தை உறும் கோழிமுட்டை எண்.

## சந்தனம்

கோதில் சந்தஞ் சீதோஷ்ணம் கொண்டிருக்கும்
அச்சந்தம்
வாதபித்தம் ஐயம் மனபிரமை ஓதுசுரம்
மேகந் தனித்தாகம் வெப்பு சொறியும் போக்கும்
ஆகத் தனக்குறுதி ஆம்.

## சங்கம்வேர்

சங்கம் வேர்ப்பட்டை சளி இருமலை சுரத்தை
அங்கவாதக் கடுப்பை ஆட தப்பை—பங்கமே
செய்யும் கிரந்தியை உள் தீக்கால் கிருமியை இவ்
வையந் தனிலொழிக்கு மால்.

## சர்க்கரை

அருந்து மருந்தின் அனுபானமாக
பொருந்து மடல் வாந்தி பித்தம் போக்கும்-அருந்த ருசி
நீக்கு மதிக்கபத்தை நீற்று மகிழ்ச்சி உண்
ஆக்கு நறுஞ் சர்க்கரை.

## சடாமாஞ்சில்

குட்டம் சிலந்தி விடம் கோர புராண சுரம்
உட்டினங்கால் பேதி கண்மணோய் ஒட்டிருமல்—
கொட்டிரத்த
பித்தம் இரைப்பேகும் பெருங்கோரை என்றுரைக்கும்
சுத்த சடாமாஞ்சில் தனைச் சொல்.

## சதகுப்பை

வாதமொடு சூதிகா வாதம் சிரசு நோய்
மோது செவி நோய் கபநோய் மூடுசுரம்—ஓதுகின்ற
மூளைக்கடுப்பு முதிர் பீனசம் போக்கும்
ஞால் சதகுப்பை நாடு.

## சவ்வாது

சுரமும்தலைவலியும் துன்ட த்நடைப்பும்
உரமுந்து நோயோடு உட ற்குள் —பரவிமிகக்
குத்துகின்ற வாயுவும் போம் கோதில் சவ்வாதினுக்கு
மெத்த வசியமுமாம் விள்.

## சங்கங்குப்பி

கரப்பான் கிரந்தி கருங் குட்ட ரோகம்
உரப்பான மேகம் ஒழியும்—கருவாம்
கருங்கிர ந்தி செவ்வாப்புக் கட்டிகளும் ஏகும்
அருஞ்சங்கங் குப்பிக் கறி.

## சதுரக்கள்ளி

கரப்பான் சொறியும் கடியும் கபமும்
உரப்பான குன்மம் ஒழிக்கும்—நிரப்பான
பேதி தரும் சீதமென்ற பேச்சகற்றும் பூவுலகில்
சாது சதுரக் கள்ளிதான்.

## சம்பீரம்

தாகம் குணக நோய் தாழா சிலிபத நோய்
வேகங் கொள் உன்மாதம் வீறுபித்தம் —மாகண்ணோய்
கன்னநோய் வாந்தியும் போம் கட்டுவாதித் தொழிலில்
மன் எலுமிச்சங்கனியை வாழ்த்து.

## சாதிக்காய்

தாது நட்டம் பேதி சருவாசியம் சிரநோய்
ஓது சுவாசம் காசம் உட்கிரணி—வேதோ
ஏலக்காய் வரும்பிணிபோம் ஏற்றமயல் பித்தம்
குலக்காய் அருந்துவர்க்கு கூறு.

## சாதிபத்திரி

சாதி தரும் பத்திரிக்கும் தாபசுரம் தணியும்
ஓதுகின்ற பித்தம் உயரும் காண் — தாதுவிருத்தி
உண்டாம் கிராணியோட கழிச்சல் அறும்
பண்டாங் குறையே பகர்.

## சாதிலிங்கம்

ஆதி இரத உருக்காதலால் சாதிலிங்கம்
ஓதில் இரத குணம் உற்று உடலில் — தீதுபுரி
குட்டம் கிரந்தி கொடுஞ்சூலை வாதமுதல்
உட்டங்கு நோய்களை ஓட்டும்.

## சிற்றாமணக்கு

மருந்தின் அழலும் வளியின் மூலத்துள்
பொருந்து அழலும் போக்கும் — குருந்திற்கு
நன்றாய் என வளர்க்கும் நாளும் அழல் தணிக்கும்
சிற்றாமணக்கின் நெய்தான் நேர்.

## சிறுநாகப்பூ

சிறுநாகப் பூவினது செய்கைசொல்வோம்
குறியாடும் மேகத்தைக் கொல்லும் — நெறியை விட்டு
தீதா செல் வாயுவைத்தீர்க்கும் இருமல் போகும்
கோதா இதையறிந்து கொள்.

## சிற்றரத்தை

வாந்தி பித்தம் கரப்பான் வாத சிரோரோகம்
சேர்ந்த கபம் முத்தோஷம் சீதமொடு — நேர்ந்தசுரம்
மற்றரத்தைக் காட்டி வரும் இருமலும் தீரும்
சிற்றரத்தை வன் மருந்தால் தீர்.

## சிவனார்வேம்பு

சாய்க்கு இடிப்புண் பழம்புண் சர்மகுட்டம் பிளவை
தீக்கடுக்கால் வன்பெரு நோய் சிந்துமா—நோய்க்கு
விதையாதி வேம்பினா மெய்க்கழகு காலை
உதையாதி வேம்பினால் நன்று.

## சிறுகீரை

கண்புகைச்சல் நேத்திரநோய் காசம் படலம் ரசப்
புண் கிரிச்சரம் சோபை பொங்கு பித்தம்—மண்பரவு
தாவரவிடங்கள் போம் தாழாத்திருவும் உண்டாம்
கூவுசிறுக்கீரைதனைக் கொள்.

## சிறுகுறிஞ்சான்

சிறுகுறிஞ்சா வாதமொடு சீதத்தை நீக்கும்
மறுவு திரவு இல்லாத மாதர்—உறுஉலகில்
அத்திசுரம் அகலா கடி விடமும்
அத்திஅகல தகர்க்குந் தான்,

## சிறுபீளை

பாண்டு பெரும்பாடு பகர் மூத்திரக் கிரிச்சரம்
பூண்டதிரிதோடம் இவை போகும் காண்—தாண்டி
பரியவேளைத்துரத்தும் பார்வையில்கண் மாதே
சிறிய பீளைக்குச் சிதைத்து.

## சிறுபுள்ளடி

மாந்தகணம் போராமம் வன் மந்தம் நீங்கிவிடும்
ஓய்ந்த முலைப்பாலும் ஒழுகும் காண்—மோந்தே
சிறுபுள்ளடி உதையாத்தே மலர் பூங்கோதாய்
சிறுபுள்ளடியை நிதம் சேர்.

## சிறுகாஞ்சோரிவேர்

சிறுகாஞ்சோரி வேர் சிலேத்தும சுவாசத்தைக்
குறியாத முச்சுரக் குழாத்தை—சொரியும்
சுரப்பான் சிறு சிரங்கைக் காலை தாகத்தை
உரப்பாகச் சாடுமென ஓது

## சிவதை

உள்ள மலமும் உதாவர்த்தமும் வயிற்றைக்
கொள்ளு பித்த வாதமும்போம் கூறுங்கால்—பிள்ளைகட்கு
செப்பு கிரகமும் போம் தேனே உலகத்துள்
தப்பில் சிவதைக்குத் தான்.

## சிலாசத்து

கல்லடைப்பு மேகம் கன தூலம் வித்திரதி
சொல்லடைக்கு நீர் அருகல் சோணிதக்கால்—மெல்லிடை
இல்லச்சத்தில்லை எனும் இந்திரிய நட்டமாம் [யார்
கல்லச் சத்தில்லை எனும் கால்.

வாந்தி அருசி குன்மம் வாய்நோய் பிலிகம் இரைப்
பேந்திருமல் கல்லடைபிலாஞ்சனம் உட்—சேர்ந்தகம்மல்
ஆசன குடாரி எனும் அந்தக் கிராணியும்
போசன குடாரி உண்ணப் போம்.

## சீனி

சினிச்சர்க்கரைக்கு தீராத வன்சுரமும்
கூனிக்கும் வாதத்தின கூட்டுறவும்—ஏனிற்கும்
வாந்தியோடு கிருமி மாறாத விக்கலுமே
போந்திசையை விட்டுப் புரண்டு.

## சீதேவி கழுநீர்ப்பூ

உடற்குக் குளிர்ச்சியதாம் உள் அழலை மாற்றும்
அடற்கப அரோசகத்தை ஆற்றும்—கடற்குள்

எழுநீர் குமிழி இகழு முலையாய்
கழுநீர் மலர் எனவே காண.

## சீந்தில்

சிந்தில் கிழங்கு அருந்த திமைமா மேகவகை
போந்த உதிரப்பித்தம் பொங்கு சுர—மாந்தம்
அதிசாரம் வெய்ய கணம் ஆம்பல் நோயோடே
கதி விடமும் கெட்டுவிடும் காண்.

## சுக்கு

சூலை மந்தம் நெஞ்செரிப்பு தோடம் ஏப்பம் அழலை
மூலம் இரைப்பிருமல் மூக்குநீர்—வாலகப
தோடம் அதிசாரம் தொடர் வாத குன்மம்—நீர்
தோடம் ஆமம் போக்கும் சுக்கு.

## செவ்வியம்

சூலை அருசி சன்னி தொல்இருமல் ஈளைபித்தம்
மேலை குரல்கம்மல் வெங்களநோய்—மூலசுரம்
கவ்வியந் தேறு கண தாவர விடமும்
செவ்வியம் கொள்ளவிடும் தேர்.

## செவ்வல்லி

செவ்வல்லிப் பூவுக்குச் சேர்ந்திறங்த நீர்ப்பிணியோ
ஒவ்வு மேகப்பிணியும் ஓய்வதன்றி—இவ்வுலகில்
கண்ணின் நோய்தீரும் கனத்த பித்த இரத்தமொடு
புண்ணின் நோய் பன்னோயும் போம்..

## செரிகீரை

வயிற்றுக் கடுப்பு மலஞ்சீதம் பேதி
நியத்த ரத்தப் போக்கிவை நிறுத்தும்—குயத்தை ஒரு
பார் சரியக் காட்டும் பருவ வணங்கரசே
பார் செரிக் கிரையது பார்.

## செண்பகப்பூ

வாதபித்தம் அத்திசுரம் மாமேகம் சுத்தசுரம்
தாது நட்டம் கண் அழற்சி—மாதேகேள்
திண்டுறு மணக்களிப்பாம் திவ்யமணம் உட்டினம்சேர்
சண்பகப் பூவதற்குத் தான்.

## சேங்கொட்டை

குட்டம் சயரோகம் கொல்லும் விஷபாகம்
துட்டம் தருகிருமி சூலையும்போம—மட்டவரும்
கூந்தன் மயிலேல கிரந்திக் கூட்டம்போம் செங்கையில்
ஏந்து சேங்கொட்டை தனையே.

## தகரை

தகரை படர்தாமரையைச் சொறியை
தகரவடிக்கு மந்தன் தன்னோடு இகலான
அத்தி சுரத்தையும் அதம்செய்யும் இம்மூலி
உத்தம மாஎன்றே உரை.

## தழுதாழை

வாதப்பிடிப்பென்ற வற்தாலியைப் புலிபோல்
போதப்பிடிக்கும் புகலவன்றோ—காத
அழுதாழை பீனசத்தை அண்டா அகற்று
தழுதாழைப் பன்ன அதுதான்.

## தண்ணீர்விட்டான்

நீரிழிவைப்போக்கும் நெடுநாள் சுரத்தை எல்லாம்
ஊரைவிடுத்தோட உரைக்கும் காண்—நாரியரே
வெண்ணீர் பெய் சோமநோய் அனல் தணிக்கும்
தண்ணீர் விட்டான் கிழங்குதான்.

## தலைச்சுருளி

பாண்டகற்று மெய்யில் படர்குட்ட நோய் விலக்கும்
நீண்ட இருதய நோய் நீக்கும்காண்—தாண அதப்பை
முன்னே ஒழித்துவிடு மூவாத்தலை சுருளி
என்னே உலகிலிசை.

## தராய்

சூலையொடு மேகம் இவைதோன்றாயல் ஓட்டிவிடும்
மேலைவரு காலை விலக்கும் காண்—ஆல
அராமேவிய அல்குல் ஆரணங்கே வெட்டை
தராவென்னும் உலோகம் அதுதான்.

## தக்கோலம்

பாண்டுசுரம்போகும் பகரில் பலஞ்சேரும்
தீண்டும் உபயாசிமும் தீரும்காண்—நீண்டதொரு
தாதுவிருத்தியாகும் தளர்ந்த மலமும் கட்டும்
கோது அகலும் தக்கோலம் கொள்.

## தாமரைப்பூ

பருத்த நற்தாமரைப்பூ பல்வாந்தி சோபை
துரத்திவிடும் இன்னும் சொலவோ—சுரத்தில்
எடுத்து அணைக்கக் கண்குளிரும் ஏகும் சுரமும்
எடுத்த வீதாகமும் போம்.

## தான்றிக்காய்

சிலந்திவிடம் காமியப்புண் சீழான மேகம்
சிலந்தி வரும் வாதபித்தம் காலோடு அலர்ந்து உடலில்
ஊன்றிக்காய் வெப்ப முதிர பித்தும் சுரக்கும்
தான்றிக்காய் கையில் எடுத்தால்.

## தாளிசபத்திரி

நாசி களப்பிணிகள் நாட்பட்ட காசம்
வாசம் அருசி வமனங்கால்—
மேகமந்தம் அத்திசுரம் விட்டேகும் தாளிசத்தால்
ஆகும் சுகப்பிரசவம்.

## தாழம்பூ

தலைநோய் சலதோடம் சண்ணுகபம் காசம்
உலைவாதம் எல்லாம் ஒடுங்கும்—நிலசேர்
திருந்துடற்குக் காந்திதரும் செம்மணமும் சூடும்
பொருந்துகிறை செந்தாழம்பூ.

## தாமரைக்கிழங்கு

கண்ணுக்கு ஒலிகொடுக்கும் காசபித்தம் போக்கும்
எண்ணும் குளிர்ச்சி தரும் ஏந்திழையே புண்ணுகளில்
தாமரைப்புண்ணும் போக்கும் தொந்திக்க கடுப்பகற்றும்
தாமரைக் கந்தமது தான்.

## தழுதாழை

வாதப் பிடிப்பென்ற வற்காலியைப் புலிப்போல்
போதப் பிடிக்கும் புகல்வற்றோ—காத
அழுதாழைப் பீனசத்தை அண்டா அகற்று
தழுதாழைப் பன்மைது தான்.

## திப்பிலி மூலம்

தாகம் பித்தம் சோகந்தணியா சுரம் இருமல்
மேகம் குரற் கம்மல் மெய்கடுப்பும்—ஏகும் காண்
திப்பிலிமூலம் கண்டத்திப்பிலியதாம் நறுக்கு
திப்பிலி என்றே எருக்கால் செப்பு.

## திப்பிலி

இருமல் குன்மம் இரைப்பு கயப்பிணி
ஈளை பாண்டு சன்னியாசம் அரோசகம்
பொறுமல் ஊதை சிரப்பிணி மூர்ச்சை நோய்
பூரிக் குஞ்சலதோடம் பீலிகமும்

வருமலப் பெருக்கோடு மகோதரம்
வாதம் ஆதிமுத்தோடச் சுரம் குளிர்
பெருமலைப்புரி மேகப் பிடகமும்
பெரும் திப்பிலிப் பேரங் குரைக்கவே.

## திரிபலை

வித்திரதி நாசிநோய் வெண்குட்டம் ஆசனப்புண்
குத்திருமல் பாண்டு குட்டம் குன்மம் இரை—பெற்று
மூர்ச்சை பிலிகம் பிரமியமோடு நண் சர்வவிட
மூர்ச்சையது முப்பலந்தான் முன்.

## திரிகடுகு

முக்கடுகால் ஆசியநோய் மூலம் கொடிறு பிணி
திக்கடுகு பாண்டோடு சிரத்துறுநோய் —அக்கடுக்குந்
தாவர நஞ்சென்றுலகில் சாற்று இந்நோய் முழுவதும்
தீவிர நஞ்சுண்டிறக்கும் தேர்,

## தில்லைப்பால்

பாரிசவாதம் சந்நிபாதம் சூலம் குட்டம்
நேரு முடவாதம் சில்விடம்போம்—பேருரைக்க
இல்லை இல்லை என்றோடு எண்பது வாதமுமே
தில்லை மரப் பாலாற் றெளி.

## திருகுகள்ளி

வாத முடக்கறும் வன்கிரந்தி குட்டம் போம்
சீத மொழியும் கிருமி சேருமோ—மாதே

பருகு பக்க நோயுடனே பாழ்கரப்பான் தீரும்
திருகு கள்ளிப் பாலால் தெளி.

## தூதுவளை

தூதுபத்திரி ஊன் சுவையாக்கும் படி
தாது வைத்தழைப் பித்திடும் காயமது
வாத பித்த கபத்தையு மாற்றும் வேர்
ஓதும் வல்லி பன்னோயுமொழிக்குமே.

## தேன்

புண்ணும் புரையும் போம் போகா கரப்பானறும்
எண்ணரிய தீபனமா ஏந்திழையே—கண்ணாகளில்
பூச்சி புழுவெட்டு கபம் பொல்லா இருமல் அறும்
பேச்சின் மனைத் தேனுக்குப் பேசு.

## தேற்றான்

கூற்றென்று உரைக்கும் விழி கோமளமே எப்போதும்
ஊற்றாம் பிரமியமும் உட்புண்ணும்—ஆற்றல் இலா
வெட்டை அகக்கடுப்பு வீறி வரித் தேன்றாங்
கொட்டை தனை எடுத்துக்கொள்.

## தேங்காய்

வாதம்மாம் பித்தமு வனகரப்பானும் படரும்
தாது மிக விருத்தியாம் தாழ்குழலே—போத நல்ல
அன்ன மிறங்கு மதியுரிசை உண்டாகும்
தென்னங்காய் பாலால் தெளி.

## தேவதாரம்

தேவதாரக்கு ணந்தானள் சேர்ந்து வளர் பீசைத்தை
காதக்கத்தில் ஓட்டும் சுரப்பலவே—மாவலர்

சொல்லும் புராண சுரமொடு நீரேற்றத்தை
வெல்லும் மனம் தணிக்கு மெய்.

## நல்லெண்ணெய்

புத்தி நயனக் குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புகழும்
சத்துவம் காந்தி தனிஇளமை—மெத்த உண்டாம்
கண்நோய் செவிநோய் கபால அழல் காசநோய்
புண்ணோய் போம் எண்ணெயால் போற்று.

## நன்னாரி

நன்னாரி வேரை நறுக்கி அரைத்து அதன்
வின்னாரி ஊணால் வெதுப்பியே—தின்னவெறி
தோணாது கற்றாழை சோற்றில் கலந்துண்ணக்
காணாது வண்டு கடி.

## நந்தியாவட்டை

காசம் படலம் கரும்பாவை தோடம் எனப்
பேசுவிழி நோய்கள்தமைப் பேர்ப்பதன்றி—ஓசைதரு
தந்தி போலே தெறித்துச்சாறு மண்டைநோய் அகற்றும்
நந்தியா வட்டப்பூ நன்று.

## நண்டு

வயலில் உறு நண்டருந்த வாதக்குடைச்சல்
அயலினும் இருக்காதணங்கே—துயிலவெட்டா
வன் சயித்தியம் கரப்பான் மன்குடல் இரைச்சலும்போம்
முன் பயித்தியம் கதிக்கு முன்.

## நத்தை

நத்தைக்கறி தனக்கு நாடாது மூலமுதல்
ஒத்தமல ரோகம் எல்லாம் ஒடுங்காண்—நித்தநித்தம்

தின்றால் செரியாது தேடரிய தாதுவிருத்தி
நன்றாகு மாதே நவில்.

## நல்வேளை

நல்வேளைப் பூண்டை நாடுங்கால் வாதமும் போம்
சொல்லும் ஐயத்துடனே சோபை அறும்—மெல்லமெல்ல
தக்க அனலும் பித்தும் தான் எழும்பும் சாந்தமின்றி
அக்கர நோய் மிஞ்சு அறி.

## நாய்வேளை

வாதம் உடற்கடுப்பு வன்சூலை காதிரைச்சல்
ஓதமிகு பீனசமும் ஓடுங்காண்—போதெறிந்து
காய்வேளைக் காயும் விழிக் காரிகையே வையமதில்
நாய்வேளை உண்ண நவில்.

## நாரத்தை

நன்றியுற உலகில் நாரத்தங்காய் அருந்த
வென்றி தரும் புளிப்பால் மெய் சுத்தம்—அன்றியுமோ
வாதமொடு குன்மம் அறும் கிருமியுய்வாம் போகும்
காதலறு தீபனமாங் காண்.

## நாயுருவி

மலிகாரம் கைப்புள்ள அபமார்க்கியின் வேரால் வசியமுண்டாம்
இலைமூலை உதிரமந்தம் பேதிகபம் வியர்வு தந்தி இறங்கு மேகம்
மலை ஏறும்படி பிரிய முள்ளரிசி பசி மாற்றும் வன்சமூலம்
பல மாதர்க்குள் அழுக்கை நீக்கும் வங்க செந்தூரம்
பண்ணுமாதோ.

## நாவல்

மாந்தம் விளையும் வலிகரப்பான் உண்டாகும்
சேர்ந்த தொரு நீரிழிவும் சேருமோ—நாந்தலொடு
வாய்வும் சுடுப்பும் வருங்கொதிப்புத் தாகமும் போம்
தூய நாவல் பழத்தால் சொல்.

## நாபி

வாதவலி மந்தம் அறல்மாறா கர்ப்பிணிகள்
ஓது குட்டம் குன்மம் ஓடுங்காண்—காதலர்தம்
புத்தியோடு ஆருயிரும் தான் பூவும் வனை குழலே
சுத்தி செய்த நாபியின் பேர் சொல்.

## (நில)வாகை

வாகை அனல் விரணம் வாத வரட்சியுடன்
தாக சுரமும் தணிக்கும் காண்—ஆகமதில்
அக்கரமெல்லாம் அகற்றிவிடும் பூவனமே
அக்கணத்தில் என்றே அறி.

## நிலக்குமிழ்

பேதியொடு கண சொருகர் பேராத சீதளமும்
வாதவலி கொட்டாவி மாந்தமும் போம்—ஓதச்
சலக் குமிழை ஒத்த தனக் கருங்கண் மாதே.
நிலக் குமிழைக் கையிலெடுதீ.

## நிலப்பனை

மேக அனல் தணியும் வெண்குட்டம் தான்விலகும்
போக மிகவுமுறும் பொற் கொடியே—போகாத
சூலை மேகங்களொடு துன்னு கரும்புள்ளியும் போம்
சால நிலப்பனைக்குத்தான்.

## நிலாவாரை

நிலா வாரையின் குணந்தான் நீகேள் மயிலே
பல மூல வாயுவெப்பு பகவைச்—சிலகிரந்தி
பொல்லாத குன்மம் பொருமு மலக் கட்டு முதல்
எல்லாம் அகற்றுமென எண்,

## நீர்ப்பூலா

மாந்தம் கணம் பொருமல் மாறா சலத்துடனே
சேர்ந்த சொறி சிரங்கும் தீரும் காண்—ஏந்தெழிலைச்
சேர்ப்பாகக் கொண்ட செந்திருவே பூவிலுறை
நீர்ப் பூலகப் பூண்டை நினை.

## நீரடிமுத்து

நீரடி முத்திற்கு நீங்கா கிரந்தி குட்டம்
போரிடு வாதமுமே போகும் காண்—காரடுக்கும்
மென் குழலாய் பித்தம் மிகும் அலை உண்டாகும்
முன் கிளர் நமைச்சல்அறு முன்.

## நுணா

பட்டை கரப்பானொடு பாரஞ் சிலேத்தும சுரம்
ஒட்டி நின்ற புண் கிராந்தி ஓட்டும்காண்—மட்டவரை
ஏந்து நுணாவின் இலை மந்தந்தீர்த்து நல்ல
காந்தி தருமேகம் அடும் காண்.

## நெல்லிமுள்ளி

ஆக வலஞ்சசி அசுர்க்கு என் புருக்கி கண்ணோய்
தாக முதிரப் பித்தந்தாது நட்டம்—மேகனத்தின்
இல்லி முள்ளியா போல் அருக்கல்எண் காமிய வியங்கம்
நெல்லி முள்ளியாற் போ நினை.

## நெய்

தாகம் அழலை கட்கம் சர்த்தி பித்தம் வாயுபிர
மேகர் வயிற்றெரிவு விக்கல் அழல்—மாகாசம்
குன்மம் வறட்சி, குடல் புரட்டல் அத்தி சுட்கம்
சொன் மூலம் போக்குநிரைத் துப்பு.

## நெல்லிக்காய்

நெல்லிக்காய்க்குப் பித்தம் நீங்கும் அதன் புளிப்பால்
செல்லுமே வாதம் அதில்சேர்த்துவரால்—சொல்லும்ஐயம்
ஓடும் இதை சித்தத்தில் உண்ண அனலுடன்
கூடும் பிரமேகமும் போம் கூறும்.

## நெரிஞ்சில்

நல்ல நெரிஞ்சலது நாளும் கிரிச்சரத்தை
வல்ல சுரம் அனலை மாற்றும் காண் —மெல்லியலே
மாநிலத்தில் கல்லடைப்பும் வாங்காத நீர்க்கட்டும்
கூனுறுமெய் வாதமும் போக்கும்.

## நேர்வாளம்

ஓதில் உதரத்துறு மலம் பன்நோய் விலகும்
பேதி மருந்தில் பெரிதாகும்—வாதம் அறும்
கூர்வாளை ஒத்த விழிக் கொம்பனையே பண்டிதர் சொல்
நேர்வாளக் கொட்தனை நீ.

## நொச்சி

நாசம் தருவாதம் நாசிப் பிணியழல் சு
வாசம் தசனவுறு வன்தோடம்—காசம் அறல்
உச்சியடையை உறை நோயும் என்படுமோ
நொச்சி அடையை நுவல்.

## பரங்கிப்பட்டை

தாகம் பல வாதம் தாது நட்டம் புண் பிளவை
மேகம் கடி கிரந்தி விழ் மூலம்—கோமுடம்
குட்டை பகந்தரமேற் கொள் மனம் போம் பரங்கிப்
பட்டையினை உச்சரித்துப் பார்.

## பச்சைக்கற்பூரம்

அட்ட குன்மம் சூலை அணுகாது வாதமொடு
துட்ட மேகப்பிணியும் தோற்றாதே—மட்டலரும்
கூந்தன் முடிமாதே கொடிய கபம் போகும்
சார்ந்த பச்சைக் கற்பூரத்தால்.

## பசுந்தயிர்

பசுவின் தயிரால் பசி மிக உண்டாகும்
இசிவுறும் சீரண நோய் ஏகும்—பசை அகன்ற
தாக இளைப்பிருமல் தாங்கொணாமெய் எரிவும்
ஏகு உலகில் இயல்பு.

## பசுமோர்

வீக்க மகோதரம் வீறு குன்மம் பாண்டு பித்தம்
தாக்கு மருந்திட்ட அதி சாரமொடு—கூக்குரலே
மாறா திரிதோடமந்த மனத்தாகம் போம்
விறாவின் மோருக்கு மெய்.

## பனைவெல்லம்

தெங்கின் வெல்லத்தால் செரியா குணம் சோபை
அங்கமுறு நீரும் அதிகரிக்கும்—தங்குபனை
வெல்லத்தால் வாதபித்தம் வீறு கபம் சந்நிநோய்
வல்லருசி குன்மம் அறுமால்.

## பற்பாடகம்

சிதவாத சுரம்போம் தீராத தாகம்போம்
போதஇரு கண்குளிரும் பொய்யலவே—பூதலத்துள்
வற்பார் பயித்தியமு மாபித்தமும் தொலையும்
பற்பாடகத்தை உன்னிப் பார்.

## பருத்தி இலை

பருத்தி இலை மொட்டி ரண்டைப் பாலில் அரைத்துண்ண
வருத்துகின்ற மேகம் எல்லா மாறும்—பருத்த
இரத்த பித்தமொடு விரணவீக்கம் போம்
அரத்த இதழ்மாதே அறை.

## பசும்பால்

பாலர் கிழவர் பழம் சுரத்தோர் புண்ணாளி
சூலையர் மேகத்தோர் துர் பலத்தோர்—ஏறுமிவர்
எல்லார்க்கும் ஆகும் இளைத்தவர்க்குச் சாதகமாம்
நல்லாய் பசுவின்பால் மாட்டு.

## பாவட்டை இலை

சீதவாதங்கள் அறும் தீபனமோ உண்டாகும்
வாதம் கபம் ஒழியும் வார் குழலே—போதவே
ஆவட்டைத்தாக சுரம் அற்றுவிடும் தோடம் போம்
பாவட்டை பத்திரிக்குப்பார்.

## பாகல் இலை

பிரியா கிருமிஅறும் பேதி உண்டாம் தோடம்
முறியும் இரதம் முறியும்—குறியாத
மா கற்புடைய மடமயிலே எப்போதும்
பாகல் தழைக்குப் பயந்து.

## பிரண்டை

பிரண்டையை நெய்யால் வறுத்தபின் பரைத்து மாதே
சேர்ந்த மூலம் கபம் உட் செம்புனலை போக்கோந்தநடை
எல்லாம் அகலும் எழும்பும் அதிகப்பசி
மல்லார் பிரண்டை உண்டுவா.

## பிரப்பங்கிழங்கு

தந்த ரோகத்தை தணியாத வாதத்தை
உந்து சூலைப்பிடிப்பை ஓட்டுங்காண்—வந்து
கரப்பு திறப்பு எனக்காட்டு நகை மாதே
பிரப்பங் கிழங்கதனைப் பேணு.

## பீர்க்கங்காய்

தின்றவுடன் பீர்க்கங்காய்சீதம் உறும் காண்பித்தம்
ஒன்று மூன்றாக உயருமே—மன்றலணி
காராளகக் கச்சுமுலைக் காரிகையே வாதம் கபம்
நேரளவைத் தாண்டும் நினை.

## பூசணிக்காய்

பெரும் பூசணிக்காய்க்கு பித்தமொடு உட்காய்ச்சல்
அருஞ்சார நீர்கட்டருகல்—மருந்திடுதல்
பித்தசுரம் அத்திசுரம் பேய் வறட்சி மேகமும்போம்
மெத்த அனிலம் உறும்விள,

## பூவரச சமூலம்

நூற்றாண்டு சென்றதொரு நுண்பூவரசம் வேர்
தூறாண்ட குட்டம் தொலைக்கும்காண்—வீறிப்
பழுத்த இலை விதை பூ பட்டை இவை கண்டால்
புழுத்தபுண் விரேசனமும் போம்.

## பெருங்காயம்

தந்த வேதந்த மூலத்தெழும் பிணி
சருவகாளம் விருச்சிக கீடம்மா
மந்தம் வாதம் உதாவர்த்தம் அல்குல் நோய்
மார்பணம் கட்ட குன்மம் மகோதரம்
உந்து கர்ப்பத்தின் வித்திரஞ் சூலைசூர்
உதிரப் பூச்சி சிலேத்துமம் ஊறும் வலி
வந்த மெய் கடுபோடு இவை முற்றுமே
மாயு நாறு நற் காயம் கிடைக்கினே.

## பெருஞ்சீரகம்

யோனிநோய் குன்மம் உருட்சை மந்தம் பொருமல்
பேதனம் உறுகாசம் பீலிகம் இரைப்பினா உரை
சேர்க்கின்ற வாதமும்போம் சீர்பெரிய சிரகத்தால்
மூக்கு நோயில்லை மொழி.

## பெருமருந்து

பெருமருந்தின் வேர் பித்தம் பீறிரைப்பு காசம்
வரு சுரம் உடம்பு வலி வாதம்—உருவுவிடம்
ஒன்றிய மாகடிகள் ஓட்டும் உலகிலிது
அன்றியது கோச் சிகிச்சைக்காம்.

## பொன்னாங்காணி

காசம் புகைச்சல் கருவிழிநோய் வாத அனல்
கூசும் பிலீகம் குதாங்குரநோய்—பேசிவையால்
என்னாங் காணிப் படிவமேமாம் செப்பஎன்னை
பொன்னாங் காணிக் கொடியைப் போற்று.

## பொடுதலை

பொடுதலையின் பேர்உரைத்தால் போராமம் போக்கும்
அடுதலை செய் காசமும் அடங்கும்—கடுகி வரு

பேதியொடு சூலை நோய் பேசரிய வெண் மேகம்
வாதமும்போ மெய்யுரைக்கும் வாழ்த்து.

## பொற்றலைக்கையான்

பொற்றலைக் கையாந் நகரை பொன்னிறமாக்கும் உடலை
சுத்தமுற கட்கு சுகம் கொடுக்கும்—சிற்றிடையாய்
சிந்தூரங்கட்கு ஆகும் சிந்தை தனைத் துலக்கும்
உர்தி வளர் குன்மம் ஒழிக்கும்.

## பொன் முசுட்டை

வாதமொடு பித்தத்தை மாற்றுமே மாநிலத்தில்
சீதம் அகற்றும் தினவடக்கும்—மாதேகேள்
உண்டிக்கும் வாசனையாம் ஓங்கு வளர் அனலை
கணடிக்கும் பொன்முசுட்டை காண்.

## பொரிகாரம்

வெங்காரம் சர்ப்பவிடம் ஐயம் நீரடைப்பு
மங்கா கிராணி ரத்தமாம் மூலம் பங்கம் செய்
வாயுவுடன் கல் அடைப்பு வன் கிருமி அட்டகுன்மம்
ஓயும் படிபுரியும் ஓது.

## மயிலிறகு

அத்திப்பிரமேகம் போம் ஆடை சுட்ட சாம்பலுக்கு
தத்திவரு இரத்தம் தடைபடும்காண்—சத்தியமாய்
கம்பளச் சாம்பல் சந்நி காதும் மஞ்ஞை தோகை பற்பம்
கும்பு விக்கல் வாந்தி கெடுக்கும்.

## மர மஞ்சள்

அழன்ற கணமூலம் அருசியுடனே
உழன்ற கண சுரமும் ஓடும்—சுழன்றுள்ளே

விறு காரமும் தணியும் விசு மர மஞ்சளுக்குத்
தேறு மொழியனமே செப்பு.

## மருக்காரை

மருக்காரையின் வேர் தான் வாந்தி மருந்தால்
திருக்காஞ் சிலேத்தும் அதைத் தீர்க்கும்—முருக்காருஞ்
செய்ய விதழ் மாதே திரிதோடமும் போக்கும்
வெய்ய மருத்தெனவே விள்.

## மணத்தக்காளி

வெவ்வழலும் மாறும் விரிகப் மல் போகும்
ஒவ்வு சிசுவுக்காம் உலவை விடும்—செவ்வி
அருமணி கச்சு முலை ஆயிழையே கேளாய்
கருமணித் தக்காளி தனைக் கண்டு.

## மருதமரம்

ஓதும் என நீரிழிவை ஓட்டும் பிரமேகம்
காதம் என ஓடக்கடத்தும் காண்—போத
மயக்கமொடு தாக மாறா சுரத்தின்
தயக்க மறுக்கும் மருதம் சாற்று.

## மலைவேம்பு

மலட்டுப் புழுவும் வயிற்றின் வலியும்
மலட்டு வாயுவும் மடக்கி—கொலட்டும்
உலைவேம் சின வேற்கண் திமமே கேளாய்
மலை வேம்பின் பேரை வழுத்து.

## மனோசிலை

மடலரிதாரத்தில் வரும் கரடி இரண்டும்
உடல் விடங்களை களையும் உண்மை —கொடிய குட்டம்

காய்ச்சல் நடுக்கல் அசகல்லி இரைப்பு சிலந்தி
பேச்சறு மனோ சிலைக்குப் பேசு.

## மிளகு

சிதசுரம் பாண்டு சிலேத்துமம் கிராணி குன்மம்
வாதம் அருசி பித்தம் மாமூலம்—ஓது சந்நி
யாசம் அபஸ் மாரம் அடன் மேகம் காசம் இவை
நாசம் கறி மிளகினால்.

## மிளகு தக்காளி

மந்தாக்கினி சோபை வாந்தி கழல் வாயு வெப்பம்
இந்து நோய் பாண்டோ எதிர் விக்கல்—முந்த
வளரு முத்தோடம் நோய் மாற்றும் கைப்பான
மிளகு தக்காளி இலை மெய்.

## மாதுளை

சங்கையறச் சொற்றவிர்க்கும் சந்நியாசம் சத்தி
அங்கை அதிதாக மனம் சேருமோ—சங்கை
இருந்தாழ மக்கட் கிரத்தலைச் செய்நோய்போம்
இருந்தாழ மக்கனிகட் எண்.

## மாவிலங்கப்பட்டை

மாவலிங்கப் பட்டையினால் வாதமொடு சந்நிகளும்
பாவுகின்ற கல்லடைப்பும் ஆறுமே—மாவெருக்கம்
பட்டை சந்நி வாதம் பல்விடம் போக்கும் கருவேல்
பட்டை நாநோய் தீர்க்கும் பார்.

## மாமரம்

சிதரத்தப்போக்கை சிக்கெனவே தான் பிடிக்கும்
போத வயிற்றுக் கடுப்பை போக்கும் காண்—ஏதுகின்ற
வாந்தியையும் தீர்க்கும் வெளி மாமரத்தின் வேர்ப்பட்டை
பூந்துகின் மாதே புகல்.

## மாவிலக்கிழங்கு

புளி நரளையின் கிழங்கோ பொன்போலச் செம்பைத்
தெளிவாகச் சுத்தியது செய்யும்—வெளியான
மூலமுளை அறுக்கும் முந்துசுவைக்கு ஏதுவுமாம்
கோல மடமயிலே கூறு.

## மாசிக்காய்

அக்கரங்கள் போக்கிவிடும் ஆறாத வெப்பாற்றும்
மெய்க்குறுதி மாசிக்காய் மேன்மேலும்—தக்கதொரு
பாலர்கண நோய் போக்கும் பன்மேகமும் தொலைக்கும்
வேலனைய கண்ணாய் விளங்கு.

## முசுமுசுக்கை

இருமலுடன் ஈளை இரைப்பு புகைச்சல்
மருவுகின்ற நீர்தோடம் மாறும் திருவுடைய
மானே முசுமுசுக்கை மாமூலி அவ்விலையைத்
தானே அருந்துவர்க்குத் தான்,

## முருங்கை

முருங்கைவேர்ப் பட்டைக்கு மூடுகபம் தோட
எருங்குறாச் சந்நி சுரம் ஓடும்—அருங்கசை
வட்டைப் பொரு முலையாய் வாய்வொடு விடங்களும்மேற்
பட்டைக்குப் போமே பறந்து.

## முந்திரிப்பழம்

வெப்பருசி தாகம் விரணம் சுவாசகாசம்
எய்யப்புடைய பித்தம் இரத்தபித்தம்—செப்பும்
மடிமந்தம் மேகம் பதமூர்ச்சையும் போம்
கொடி முந்திரிக் கனிக்குக் கூறு.

## முட்காவேளை

வாசாதி மந்தம் அதிசாரம் அதிவறட்சி
போகாச் சுரம் தாகம் போக்க மருந் நோகையில்
சிக்காவேளை பதத்தைத்தின்னச் செய்விக்க என்றான்
முக்கா வேளைப் பதத்தை முன்.

## மூக்கரட்டை

சீதம் அகற்றும் தினவடக்கும் காந்தி தரும்
வாத வினையை அடிக்கும்காண்—பேதி
கொடுக்கும் அதை உண்டாக்கால் கோமளமே பித்தம்
அடுக்குமே மூக்கரட்டை யாய்.

## வல்லாரை

அக்கரநோய் மாறும் அகலும் வயிற்றுக்கடுப்பு
தக்க இரத்தக் கடுப்புத்தான் ஏகும்—பக்கத்தில்
எல்லாரையும் அருந்து என்றே உரைத்து நன்மனையுள்
வல்லாரையை வளர்த்து வை.

## வாகை

வாகை அனல் விரணம் வாத வறட்சியுடன்
தாக சுரமும் தணிக்கும் காண்—ஆகமதில்
அக்கரமெல்லாம் அகற்றிவிடும் பூவணமே
அக்கணத்தில் என்றே அறி.

## வாய்விளங்கம்

பாண்டு குட்டம் குன்மம் பருந்தூல நோய் வாதம்
தீண்டு திரிவிடம் சிரம் துண்டம்—பூண்டமடி
நோய் விளங்க காட்டாத நுண்கிருமி ஆசனப்புண்
வாய் விளங்கம் காட்ட விடுமால்.

## விலாமிச்சம்

மேகம் விழிஎரிச்சல் விறி இரத்த பித்தமொடு
தாக மத மூர்ச்சை பித்தங்கள் மயக்கம்—சோகம்
சிரநோய் இவை ஏகும் செய்ய விலாமிச்ச
எரிசுரமும் இல்லை இசை.

## வில்வம்

வில்வத்தின் வேருக்கு விறுகுன்ம வாயுகபம்
சொல்லஒண்ணாப் பித்த தொடர் சோபை—வல்லகப
தாகசுரம் நீரேற்றம் சந்நியொடு மெய்வலியும்
வேகமொடு நீங்குமே.

## விளா

அழன்ற கணை வேக அதிதாகம் தீரும்
சுழன்று வரு பித்தம் தொலையும்—உழன்று
பொரு நிலை மேகத்துடனே புண் சுரமும் போகும்
அரு நில விளாவுக்கு அயர்ந்து.

## விஷ்ணுகிரந்தி

செய்ய மாலின் கிரந்தி தீராத வல்லசுர
ஐய அறுக்கும் அனல் தணிக்கும்—வெய்யகப
காச இருமலையும் கட்டறுக்கும் வாதத்தால்
ஊடாகும் பிணிபோக்கும்.

## வேங்கை

குத்திருமல் வெட்டையொடு கூறு மூள மாந்தம் இலை
எத்திசையும் வாரா இடையும் காண்—சத்தியமாய்
புண்ணிருமல் சீழ் ஒழுகற் போகு மலம் இறங்கும்
கண் ஒளிரும் வேங்கைக்குக் காண.

## வேப்பநெய்

வாதம் போம் பித்தமிகு மாறாக் கிரந்தியொடு
மோது கரப்பான் சிரங்கு மூன் இசிவும்—ஓதுடலில்
நாப்பஹுறு சுரமு நாடு சந்நியும் தொலையும்
வேப்பநெய் என்றொருக்கால் விள்ளு.

## வேப்பம்பிண்ணாக்கு

சந்நியுடன் வாதம் தலை நோய் போம் வாதம் அறும்
முன்னி நின்ற தோடம் முறியும் காண்—பண்ணுதமிழ்
வல்லவரே வேம்பின்வழி வந்த பிண்ணாக்கு என்றெருகால்
சொல்ல ஐயம் போமே தொலைந்து.

## வெந்தயம்

பிள்ளைக் கணக்காய்ச்சல் பேதி சீதக் கழிச்சல்
தொள்ளை செய்யும் மேகம் தொலையும்காண்—உள்ளபடி
வெச் சென்ற மேனி மிகவும் குளிர்ச்சியதாம்
அச்சம் இலை வெந்தயத்திற் காய்.

## வெள்ளறுகு

குன்மமொடு வாயு குடல் வாதம் சூலை இவை
சென்மம் விடுத்தோடிச் சிதையும் காண்—வன்முலைபாய்
உள்ளுருகிக் கிரந்தி சொறி ஒட்டிய சிரங்கும் அறும்
வெள்ளறுகு தன்னை விரும்பு.

## வெங்காயம்

வெப்ப மூலங் கிரந்தி வீறு ரத்த பித்தமுன்
செப்பு நா அக்கரம் தீராத தாகம்—வெப்பு
கடுப்பு அறும் மந்தம் சந்நி காசம் வயிற்றுப்பல்
தடிப்பேறும் வெங்காயத்தால்.

## வெற்றிலை

ஐயம் அறும் காண் அதன்பாரம் கொண்டக்கால்
பைய சயித்தியம்போம் பைந்தொடியே—மெய்யின்
கடியின் குணம் போகும் கார வெற்றிலைக்குப்
படியும் முத்தோடம் இசைப்பார்.

## வெள்ளாட்டுப்பால்

வெள்ளாட்டுப் பாலுக்கு மேவியநல் தீபனம்
தள்ளாடு வாத பித்தம் சாந்தமாம்—உள்ளிரைப்பு
சீதமதிச்சாரம் சிலேத்தும அறும் புண் ஆறும்
வாதக்கிலேசமும் போம் அறி.

## வெண்நொச்சி

நாசம் தருவாதம் நாசிப்பிணி அழல்
சுவாசம் தசன உருவன் தோடம்—காசம் அறல்
உச்சி உடையை உறைதோயும் என்படுமோ
நொச்சி அடைபை நுவல்.

## வெட்டிவேர்

பித்தவிதாகம் சசிகாமிலங் சுறை பித்த அனல்
தத்திடு குட்டம் சிரநோய் களமடி தாதுநட்ட
தத்த புனல் புண் அனல் புண் வன் மூர்ச்சை வரிவிழிநோய்
வித்திர மேகத்தின் கட்டியும்போம் வெட்டி வேரினுக்கே.

## வால்மிளகு

வாத பித்த ஐயம் வயிற்றுவலி தாகம்
சீதம் பலநோய் சிதையும் காண் —போத

அதி தீபனம் அனைங்காசே நாளும்
துதி வால் மிளகு அருந்தச்சொல்.

## வெட்பாலை

வெட்பாலை தன் அரிசி வீறு பித்த வாதமொடு
கொட்பார் கரப்பன் குடல்வாதமொடு
காணாமலே நாளும் கண்டிக்கும் காசினியில்
பூணார் முலையாய் புகல்.

## வெண் காக்கட்டான்வேர்

மாதரால் வந்த வெட்டை வன்மேகம் சென்னிவலி
ஓது சுரம் விழிநோ யோடும்—பேதியொடு
மாக்கட்டாஞ் சீதம் அறும் மாமுலையாம் வெள்ளை
காக்கட்டான் வேரைக் கருது.

## வெதுப்படக்கி

வெள்ளெடுப்பு சீதம் வெதும்பல் சுரத்துடனே
அள்ளெடுக்கு மாந்தம் அதிமாந்தம்—தெள்ளு மொழி
மாதே வெதுப்படக்கி வன் தலைழயும் காய்ச்சலொடு
கோதேறி இரத்தமும் போக்கும்.

## வெள்வேல்

பித்தமயக்கம் அறும் பேருலகின்மானிடர்
குற்ற சுரவாத ஓடும்காண்—குத்துகின்ற
சந்துக் குடைச்சல் விடும் சர்வாங்க வாதம் போகிக்
கொத்துலவும் வெள் வேலுக்கு.

## வெள்ளரி

பிஞ்சு வெள்ளரிக் காய்க்குப் பேசு திரி தோடம் போம்
வஞ்சியரே முற்றிய காய் வாதமுமாம்—நைந்த கனி
உண்டால் சயித்தியமாம் உள்ளிருக்கும் அவ்விதையைக்
கண்டாலும் நீர் இறங்கும் காண.

# நூலில் உள்ள நோய்களின் பட்டியல்

அரையாப்பு
அல்குல்புற்று
அரணைக்கடி
அரிகிரந்தி
அத்திசுரம்
அந்திரவாயு
அண்டவாதம்
அக்னிமாந்தம்
அண்டவாய்
ஆமசுரம்
இமைத்துடிப்பு
இரத்தத்திரட்சி
இசிவு
இடிசூலை
இரத்தபித்தம்
இரைப்பு
இருமல்
இரத்தக்கணை
இரத்தக்கழிச்சல்
இரத்தபீனிசம்
ஈளை
உதிரக்கட்டி
உடல்எரிவு
உட்குத்து
உன்மாதம்
உச்சிபிளவை
உள்வெக்கை
உந்திப்புண்
உஷ்ணம்
ஊதுமாந்தம்
ஊமைபடி
ஊறல்
ஊதுகணம்
எரிகரப்பான்
எழுகுழாயிறு
எரிவு
என்புருக்கி
எரிசுன்மம்
ஒருதலைவலி
ஒருதலைநோய்
ஒடுகரப்பான்
கல்லடைப்பு
கழிச்சல்
கன்னகிரந்தி
கன்னப்புற்று
கர்ப்பகரப்பான்
கணை
கண்பீளை
கண்நோவு
கணம்
கட்டுக்கரப்பான்
கண்புகைச்சல்
கண்டமாலை
கடுப்பு
கண்நோய்
கழல்வாதம்
காதுவலி
காசரோகம்
காசசுவாசம்
காதடைப்பு

காதுஇரைச்சல்
கிரந்திப்புண்
கிராணி
கிறுகிறுப்பு
கிரந்தி
கிரந்திசேட்டை
குடல்வாதம்
குன்மவலி
குன்மம்
குலைநடுக்கம்
குட்டம்
குடல்புரட்டு
குழிகரப்பான்
கைகால் எரிவு
கொள்ளிக்கரப்பான்
சத்தி
சகலகடிகள்
சன்னி
சயம்
சயக்காய்ச்சல்
சர்வசுரம்
சிலந்திகடி
சிலந்திவாழை
சிலந்திப்புற்று
சிரங்கு
சிலந்தி—சீழ்கரப்பான்
சுரோணிதம்—சிழ்பிரமியம்
சூதகவாயு
சூதகப்புற்று
சூலை
சூலைக்கட்டு
சூலைகணம்
சூலைநோவு
சூசிகாவாதம்
செவ்வாப்பு
செவிடு
சொறி
சொறிகிரந்தி
தலைவலி
தடசிலந்தி
தந்தவாதம்
தினவு
துடிசூலை
தொடைவாழை
தொடைபுற்று
நயனதோஷம்
நஞ்சு
நாக்குகரப்பான்
நாசியில் இரத்தம்
நிதத்தில்குத்து
நீர்கரப்பான்
நீராமை
நீரேற்றுதோடம்
நீர்பினிசம்
நீர்மாந்தம்
நெஞ்செரிப்பு
நெஞ்சுவறட்சி
நெஞ்சு உலர்தல்
நேத்திரவாயு
பட்சிதோடம்
பக்கவாதம்
படைகரப்பான்
பயித்திய விகாரம்
பயித்தியவெட்டை
பவுத்திரம்
படுஞாயிறு
பாரிசவாதம்
பித்தம்

பித்தவெட்டை
புறவீச்சு
புறமூலம்
பெருவியாதி
பெருவயிறு
பேர்மாந்தம்
பைத்தியம்
பொரிகரப்பான்
மண்டை இடி
மண்டைகரப்பான்
மண்டை பீனசம்
மண்டை வியாதி
மாந்தம்
மாந்தபேதி
மார்ஆணி
மூலச்சூடு
மூத்திரதோடம்
மூலக்கடுப்பு
மூலம்
மூலவாயு
மூட்டுவாழை
முடுகரப்பான்
மேகவாயு
மேகச்சூடு
மேகம்
மேகபிரமியம்
மேகவெட்டை
மேகப்பிடிப்பு
மேகதடிப்பு
மேகக்குடைச்சல்
மேல்வாதம்
மேகசூலை
வெடிகரப்பான்
வெடிசூலை
பிடரிவாதம்
பிரமியம்
பித்தவாயு
பிடரிகனம்
பீனிசம்
பிலிகை
புழுவெட்டல்
புரைவிழுந்த சிரங்கு
புண்
மேல், கீழ்நாக்குப்புற்று
வலிகுன்மம்
வயிற்றுவலி
வண்டுகடி
வயிற்றுக்கடுப்பு
வயிற்றுஎரிச்சல்
வாங்குகரப்பான்
வாதம்
வாதசன்னி
வாயுக்கட்டி
வாய்ஊறல்
வாந்தி
வாயுபிடிப்பு
வாதகுன்மம்
வாயு
விடம்
விப்புருதி
விடக்கரப்பான்
வீக்கம்
வீங்குகரப்பான்
வெள்ளை
வெதுப்பு
வெண்குட்டம்
வெட்டை

# பொது-II

## பாகம் செய்வான் குணம்

பிணியர்க் குரியர் பிடக் குளத்தை ஒப்ப
பணியிற் சிறந்த நட்பராம் பல் பணியர்குட்
இப்புறையை உண்மை மிகு தூய்மை இவை ஆர்ந்தாரை
ஒப்புரையை ஆடர்க்கு உவந்து.

## பக்குவம்

பக்கு பாகத்தைமறு பஞ்சின் மருந்தும் பிறழ
பக்குவ பாகத்துப் பருமருந்து—மெய்க்குறுங்
ஆலகாலமும் பருணு ஆழி மருந்தும் சேடன்
கக்காலமும் பொருந்தும் காண்.

## நெய் உண்ணக்கூடாதவர்

தருண சுரம் சந்நி தோட தோட
மரண மகோதர மாநாகம்—வருணவதி
சாரங்க என உரைத்தா வரிக்குன் மங்களா
தாரங்க என உரை தள.

## எண்ணெய்க்குளி

1 தலை முழுக்கால் சென்னி முழந்தாள் இவைக்கு நீங்கா
பலமுண்டாம் கேசம் படரும்—தலைநோய் போம்
பஞ்ச நேத்திரியம் பலத்துத் தெளிவையுறும்
எஞ்சாதி தொனி எழும் எண்.

2 தினம் அப்பியங்கனமே செய்யில் சருமம்
மினு மினுக்கும் சோம்பல் விலகும்—தனியான
ஐயமும் தோடம் அருசி தந்த நோயும்ஒழியும்
மெய்யும் மிகப் புஷ்டியிடுமே.

## தைலாதிகள் குணம்

எள்ளி நெய்யும் முக் கூட்டெனு நெய்யும் மா நெய்யும்
வில்லு தைலாதி என வீறு நெய்யும்—உள்ளபடி.
வாரம் தனக்கு இருநாள் வைத்தாடி நோய்கள் ஆதி
காரம் தனக்கிடமிற் காண்.

## தைலம் தேய்க்கும் விதி

எடுத்த நற்றைலம் நாசிக்கு இரண்டு ஆறுகாது கடுத்திட
துளிவிட்டு உச்சிஅங்கம் தாள் அடிகளிற்கு எடுத்திடாத்
தேய்த்து ஊற செய்திப்புறம் சிகைக்காய் வெந்நீர்
விடுத்துடனாடி நீரும் வியர்ப்பு மற்றிடப் புலர்த்தே.

## தூள்

1 பருப்பரைப்புக் கோடிடு நெய் பன்னு எண்ணெய்ஆதி
கரைப்பு சிகைக்காயுமாகும்—தெருப்பன்றி
நெய் ஆதியாய் நெய்க்கு நீள்காரைப்பூண்டாதி
மெய்யாரைப்பாகும் விள்.

2 சீக்கிராந்தூள் விரண, தேகர்க் கரைப்பாகும்
ஆக்கி இலுப்பைக்கட்டி சொறியாளர்க்காம்—
தூக்குமணி
புங்கரைப்பும் சியக்காயும் போக்கடிக்கும் எண்ணெய்
களை
கங்குல் உறை கூந்தன் மின்னே காண்.

## குளிக்கும் காலம்

அயமானி வைக்கைம் பதத்துளியாழ் குளிர் கட்டமத்துள்
வயமா களிக்கும் கோல் தேட்டு நம் நான்குவின்
மானிரண்டே
பயமார் கடமர்ச்சத்திற்கு திரிக்குட் பகர் திங்கள்
நயமாம் தயிலங்கள் ஆடரோகமெய் நண்ணுவாரே.

# நோய் அணுகா நெறி

1 திண்ண இரண்டுவளே சிக்க அடக்காமல்
பெண்ணின் பால்ஒன்றைப் பெருக்காம-உண்ணுங்கால்
நீர் சுருக்கி மோர் பெருக்கி நெய்உருக்கி உண்பவர்தம்
பேரை உரைக்கில் போமே பிணி

2 பாலுண்போம் எண்ணெய்பெறின் வெந்நீரில்
குளிப்போம்
பகலில் புணரோம் பகலில் துயிலோம் பயோதரமும்
மூத்த
வேலஞ்சேர் குழலியரோடு இளவெய்யிலும் விரும்போ
இரண்டு அடக்கோம் ஒன்றைவிடோம் இடதுகையில்படு

மூலஞ்சேர் கறி நுகரோ மூத்த தயிர் உண்போம்
முதல் நாளில் சமைத்த கறியமுது எனினும் அருந்தோம்
ஞாலந்தான் வந்திடினும் பசி ஒழிய உண்ணோம்
நமனார்க்கு இங்கே ஏது இவை நாமிருக்கும் இடத்தே.

3 உண்பது இருபோது ஒழிய மூன்றுபொழுது உண்ணோம்
உறங்குவதி இரா ஒழிய பகல் உறக்கம் செய்யோம்
பெண் கடமை திங்களுக்கோர் காலம் அன்றி மருவோம்
பெருந்தாகம் எடுத்திடினும் பெயர்த்து நீரருந்தோம்

மண்பரவு கிழங்குகளில் கருணை அன்றிப் புசியோம்
வாழை இளம்பிஞ்சு ஒழிய கனி அருந்தல் செய்யோம்
நண்பு பெற உண்டபின் குறுநடையும் கொள்வோம்
நமனார்க்கு இங்கே ஏது இவை நாமிருக்கும் இடத்தே.

4 ஆறு திங்கட் கொருதடவை வமன மருந்தயில்வோம்
மடர் நான்கு மதிக் கொருகால் பேதி உறை நுகர்வோம்
தேறுமதி ஒன்றரைக்கோர் தரம் நசியம் பெறுவோம்
திங்கள் அரைக்கிரண்டுதரம் சவள விருப்புறுவோம்

விறு சதுர் நாட்கொருகா நெய் முழுக்கைத்தவிரோம்
விழிகளுக்கு அஞ்சனம் மூன்றுநாட்களுக்கு ஒரு
காலிடுவோம்
நாறும் கந்தம் புட்பம் இவை நடுநிசியில் முகரோம்
நமனார்க்கு இங்கே ஏது இவை நாமிருக்கும் இடத்தே.

5 பகர்த்தெழும் மாத ரசம் கரம் துடைப்ப மிவைத்து
படநெருங்கோம் தீப மைந்தர் மர நிழலில் வசியோம்
சுகப் புணர்ச்சி அசன சனத்தருணம் செய்யோம்
துஞ்சலுண இருமலஞ் சையோகம் அழக்காடை.

வெகுப்பெடுக்கில் சிந்து கசம் இவை மாலை விடுப்போம்
வற்சல தெய்வம் பிதுர் சற்குருவை விட மாட்டோம்
நகச் சலமு முளைச் சலமும் தெறிக்கும் இடம்
அணுகோம்
நமனார்க்கு இங்கே ஏது இவை நாமிருக்கும் இடத்தே.

## ஆவியாகும் எண்ணெய்கள் தரும் தாவரங்கள்

## (Plants Yielding Essential Oils)

இவைகளை தாவர திசுக்களிலிருந்து இவைகளின் தன்மை கெடாமல் எடுக்கமுடியும். இவைகளின் வேதிக் கூட்டமைப்பு மிகவும் கடினமானது. இந்த எண்ணெய் களை பலவிதங்களில் தாவரத் திசுக்களிலிருந்து எடுக்கி றார்கள்.

**ஆவியின் மூலம் வடிக்கும் திறன் :** (Steam Distillation) எண்ணெய் இருக்கும் பாகத்தைச் செம்பு கலத்திலிட்டுப் புகை வரும் வரை காய்ச்சுகின்றார்கள். எண் ணெய் ஆவியாகிப் புகையுடன் கலந்து, ஆவியை நீர்மயமாக மாற்றுவதற்காக இருக்கும் அமைப்பில் சேருகிறது. இது குளிர்ந்து, நீர்ப்பரப்பில் படரும். இதை வடிகட்டி எண்ணெ யைப் பெறுகின்றார்கள்.

**பிழிந்தெடுக்கும் முறை :** (Extraction Process) அதிக அளவு பாகங்களை அழுத்தத்திலிட்டு எண்ணெயைப் பிழிந்து எடுக்கிறார்கள்.

**கரைப்பான் முறை** (By Solvent) கரைப்பான்களைக் கொண்டு இந்த எண்ணெய்களைக் கரைத்தெடுக்கும் முறையையும் உபயோகிக்கின்றார்கள். ரோஜா முதலிய பூக்களை வெப்பமுள்ள கொழுப்போடு சேர்த்தும், மிகவும் நுட்பமான மணமிருக்கின்ற தாவரபாகங்களைக் குளுமையான கொழுப்பிலிட்டும், எண்ணெய் எடுக்கின்றார்கள். இம்முறையில் பூக்களைப் பல நாட்களுக்கு ஊற விடுகின்றார்கள். முடிவில் கொழுப்பானது எண்ணெய்ப் பொருளை ஈர்த்துக்கொள்ளுகின்றது. இதைப்பிறகு ஆல்ககாலில் கரைத்து எண்ணெயைப் பெறுகின்றார்கள்.

வாசனைத் திரவியங்கள் செய்யவும், சோப்பு மற்றும் பல அலங்காரப்பொருள்கள் செய்வதற்கும் உபயோகிக்கின்றார்கள். இவைகளை ஐஸ்கிரீம்கள், பானங்கள், மிட்டாய்கள் முதலியவைகளை மணமூட்டுவதற்கும் உபயோகிக்கின்றார்கள். ஆன்டிசெப்டிக்காகவும், பாக்டீரியாக்களை அழிக்கும் தன்மையைப்பெற்றிருப்பதால், மருந்துகளிலும் உபயோகமாகின்றது.

## நறுமணத் தைலங்கள்

**வசம்பு:** பொடிசெய்து, எண்ணெயில் வடித்திறக்கி வாசனைத் தைலங்களில் பயன்படுத்துகின்றாகள். இது பெரும்பாலும் மருந்து வகைகளில் மணம் அளிக்கப் பயன்படுகிறது.

## புல் வகை நறுமணத் தைலங்கள்

**நீரடிமுத்து:** வெளுத்த மஞ்சள் நிறமுடையது. இதைச் சோப்பு, வாசனைத் திரவியங்களிலும் உபயோகிக்கிறார்கள். இதை அத்தருக்குப் பதிலாக உபயோகிக்கின்றார்கள்.

**லெமன் கிராஸ்:** இலைகள் மூலம் தைலம் எடுக்கப் படுகின்றது. சிவந்த மஞ்சள் நிறமுடையது. எலுமிச்சை யணம் கொண்டது. இதிலிருந்து (INNONE) அயனோன் என்ற நறுமணப்பொருள் எடுக்கப்பட்டு, செயற்கை வயலட் நறுமணத் தைலம் செய்யப் பயன்படுகிறது.

**ஜிஞ்சர் கிராஸ் தைலம்:** இலைகள் மூலம் எடுக்கின் றார்கள்.

**வெட்டி வேர்த்தைலம்:** வாசனைத் திரவியம், மருந்து கள் என்பனவற்றில் சேருகிறது.

**மல்லி:** மொட்டுகள் மலர்ந்தவுடன் தைலம் எடுக்கப் பயன்படுத்துகின்றார்கள்.

**சந்தனத்தைலம்:** மரக்கட்டை மூலம் பெறுகின்றார் கள். மணத்தைலமாகவும், மருந்தாகவும் பயன்படுகிறது.

**கதிர்ப்பச்சைத் தைலம்:** மணமூட்டும் தைலங்கள் சோப்புகள் செய்யவும், புகையிலைக்கு மணமூட்டவும் பயன் படுகிறது.

**சண்பகத்தைலம்:** பூக்களிலிருந்து எடுக்கின்றார்கள். பிசின்கள், சாம்பிராணி வகைகள் செய்யப் பயன்படுகிறது.

**கற்பூரத் தைலம்:** இது மரத்திலிருந்து எடுக்கப்படும் பொருள். வடித்து எடுக்கின்றார்கள். செல்லுலாய்டுகள் செய்யவும், நைட்ரோ செல்லுலோஸ் கலவைகள் செய்யவும் பயன்படுகிறது. டர்பண்டைன் தைலத்திலிருந்து செயற்கை முறைக் கற்பூரம் செய்கின்றார்கள்,

## கொழுப்புள்ள எண்ணெய்கள், மெழுகுகள் அளிக்கும் தாவரங்கள்

கொழுப்புள்ள எண்ணெய், தாவர பாகங்களிலிருந்து எடுக்கப்படுகின்றது. இது காற்றில் ஆவியாகாது. இது

விலங்கின, கொழுப்பையே, வேதியியலில் ஒத்துள்ளது, கட்டியான, நீர்மையான, இரு வகையான கொழுப்புக்களும் உள்ளன. இவை 4 வகைப்படும்.

உலர்த்தும் எண்ணெய்கள் (DRY OILS)

அரைபாகம் உலர்த்தும் எண்ணெய்கள் (SEMI-DRYING OILS)

உலராத எண்ணெய்கள் (NON DRYING OILS)

கொழுப்புகள்

**உலர்த்தும் எண்ணெய்:** இது பிராண வாயுவை ஈர்த்துக்கொள்ளுவதால் இழுப்புத் தன்மையுடைய பிலிம்கள் போன்று படருகிறது. வர்ணம், வார்னிஷ் போன்ற பூச்சுக்கள் செய்யப் பயன்படும். (அக்ருட் எண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், பாப்பி எண்ணெய், சோயா பீன்ஸ் எண்ணெய் என்பன)

**அரை பாகம் உலர்த்தும் எண்ணெய்கள்:** இவைகள் பிராணவாயுவை மெதுவாக ஈர்க்கின்றன, வெகுநேரம் சென்ற பின்பு உலருகின்றது. இவைகள் உணவு எண்ணெய்களிலும், மெழுகு, சோப் செய்யவும் பயன்படுகின்றன. சான்று, காட்டன் சீட் எண்ணெய், கார்ன் ஆயில், நல்லெண்ணெய், கடுகு எண்ணெய் என்பன.

## உலராத எண்ணெய்

இந்த எண்ணெய்கள் சாதாரண வெப்பதட்ப நிலையிலும் நீர்மமாகவே இருக்கும். இவைகளை உண்ணலாம். சோப் செய்வதற்கும், உராய்வு தடுக்கும் எண்ணெயாகவும் பயன்படுகிறது. சான்று: ஆலிவ் எண்ணெய், கடலை எண்ணெய், விளக்கெண்ணெய்.

## வேறு எண்ணெய்கள்

குரோடன் எண்ணெய் மருந்தாகப் பயன்படுகிறது. மொரிங்கா ஒலிஃபெரா, நெல் என்பனவற்றிலிருந்தும் பாதாம் கொட்டை, தக்காளி, திராட்சை விதைகள் இவற்றிலிருந்தும் எண்ணெய் எடுக்கின்றனர்.

## காய்கறிக் கொழுப்பு

தேங்காய் எண்ணெய், பாம் ஆயில், கோக்கோ எண்ணெய் சாதிக்காய் எண்ணெய்.

## மெழுகுகள்

இவைகள் சாதாரணமாக இலைகள், கனிகள் முதலியவைகளின் புறத்தோலில் இருக்கின்றன. மெழுகுகள் கொழுப்பைவிடக் கெட்டியானவை. இவை உருக, அதிக வெப்பநிலை தேவை. இவை எளிதில் கெடாதவை.

## சோப்பு பதிற்பொருட்கள்

சேராங்கொட்டை, சோப்புக்குப் பதிலாகவும், அணிகளைத் தூய்மைப்படுத்தவும், கூந்தல் வளர்ச்சி டானிக்காகவும் பயன்படுகிறது.

## ஆவியாகும் எண்ணெய்கள்

(மொத்த அளவு இந்தியாவில்)

| | |
|---|---|
| சின்னாமன் இலை எண்ணெய் | 33 டன்கள் |
| சந்தன மர எண்ணெய் | 150 ,, |
| லெமன் கிராஸ் எண்ணெய் | 500 ,, |
| பால்மரோசா எண்ணெய் | 50 ,, |
| யூக்கலிப்டஸ் எண்ணெய் | 50 ,, |
| வெட்டிவேர் எண்ணெய் | 5 ,, |

| | |
|---|---|
| லினோலா எண்ணெய் | 3 டன்கள் |
| டர்பன்டைன் எண்ணெய் | 2000 ,, |

(தாவரங்களின் பொருளாதாரச் சிறப்புகள் M. L. லீலா, எம். ஏ., தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்)

## சித்த மருத்துவத்தில் உள்ள எண்ணெய்கள்

**உயிர்வகுப்பு:**

| | |
|---|---|
| அம்பர் | எண்ணெய் |
| ஆமை | ,, |
| விச்சுளி | ,, |
| காட்டுப்பாம்பு | ,, |
| மான் | ,, |
| மயில் | ,, |
| பசுமாட்டு | ,, |
| சுறா | ,, |
| ஆட்டுக்கொழுப்பு | , |
| மான் | ,, |
| புலிக்கொழுப்பு | ,, |
| தவளை | ,, |
| கரடி | ,, |
| மெழுகு | ,, |
| பன்றி | ,, |
| ஓணான் | ,, |
| உடும்பு | ,, |
| காக்கை | ,, |

சாம்பசிவம்பிள்ளை மருத்துவ அகராதி—பக். 762

| | |
|---|---|
| நீரடிமுத்து | எண்ணெய் |
| பின்னைக்கொட்டை | ,, |
| புரவு | ,, |
| காட்டாமணக்கு | ,, |

| | |
|---|---|
| ஓம | எண்ணெய் |
| பூ | ,, |
| பாகல்விதை | ,, |
| பூவந்தி | ,, |
| காட்டுசீரகம் | ,, |
| பூசணி | ,, |
| நாய்வேளை | ,, |
| ஏலம் | ,, |
| இலவங்கம் | ,, |
| கொத்தமல்லி | ,, |
| பிரமதண்டு | ,, |
| குருக்கத்தி | ,, |

மூலிகை வகுப்பு:

| | |
|---|---|
| ஆமணக்கு | எண்ணெய் |
| எள் | ,, |
| கடலை | ,, |
| பருத்தி | ,, |
| இலுப்பை | ,, |
| புங்க | ,, |
| கடுகு | ,, |
| வால்மிளகு | ,, |
| வேப்ப | ,, |
| சோம்பு | ,, |
| சாதிக்காய் | ,, |
| கசகசா | ,, |
| நேர்வாள | ,, |
| ஆழிவிதை | ,, |
| கிராம்பு | ,, |
| சாதிப்பத்திரி | ,, |
| செந்துருக்கம் | ,, |
| முந்திரி | ,, |
| பேய்குமட்டி | ,, |

சேங்கொட்டை ,,
வெள்ளரிவிதை ,,
கஞ்சாவிதை ,,
எட்டி ,,

## சித்த மருந்தகங்களில் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள்

**பூடித்தைலம்:**

அரக்குத்தைலம்
சுக்குத்தைலம்
சி. நி. தைலம்
மிளகாய்த்தைலம்
சீரகத்தைலம்
நா. நா. தைலம்
நொச்சித்தைலம்
பிருங்கமலாத்தைலம்
கையான்தைலம்
சித்திரமூலத்தைலம்

**குடித்தைலம்:**

கந்தகசுடர்தைலம்
கரப்பான்தைலம்
மலைவேம்பாதித்தைலம்
மாந்தஎண்ணெய்
மெருதள்ளித்தைலம்
மேனித்தைலம்
மேகநாதத்தைலம்
சித்தாதிஎண்ணெய்
வெள்ளைஎண்ணெய்
அண்டத்தைலம்
சிற்றாமுட்டித்தைலம் (க்ஷீரபலா)
மூலகுடாரத்தைலம்
சிவனார்வேம்புக்குழித்தைலம்

**பிடித்தைலம்:**

வாதகேசரித்தைலம்
உளுந்துத்தைலம்
மயனத்தைலம்
நொச்சித்தைலம்
கழற்சித்தைலம்
குந்திரிகத்தைலம்
விடமுட்டித்தைலம்
கற்பூரத்தைலம்

**துளைத்தைலம்:**

பீனசத்தைலம்
மத்தன்தைலம்
சுக்குத்தைலம்
நாசிரோகநாசத்தைலம்

**சிலைத்தைலம்:**

மத்தன்தைலம்
விரணசஞ்சீவித்தைலம்
சிரட்டைத்தைலம்
குந்திரிகத்தைலம்
கழற்சித்தைலம்
புங்கத்தைலம்
சிவனார்வேம்புத்தைலம்
கருடன்கிழங்குத்தைலம்

## யாகோப்பு வைத்திய சிந்தாமணி 700ல் எண்ணெய் வகைகள்

| | |
|---|---|
| ஆறாத புண்ணுக்கு | எண்ணெய் |
| சூலை 18க்கு | ,, |
| கர்ப்ப சூலைக்கு | ,, |
| கிலுகிலுப்பை | ,, |

| | |
|---|---|
| எலிகடிக்கு | எண்ணெய் |
| வாதசூலைக்கு | ,, |
| கிரிச்சனத்திற்கு | ,, |
| மலசலகட்டுக்கு | ,, |
| வாயுவுக்கு | ,, |
| குடல்வாதத்துக்கு | ,, |
| சூதகவாயுவுக்கு | ,, |
| இரணங்களுக்கு | ,, |
| குமரி எண்ணெய் | ,, |
| கர்ப்பம் உண்டாக்க | ,, |
| வலியுக்கு | ,, |
| அண்டவாயுவுக்கு | ,, |
| இளம்பிள்ளைவாத | ,, |
| சுகபேதிக்கு | ,, |
| வெட்டைக்கு | ,, |
| பித்தகாமாலைக்கு | ,, |
| சூலைவாயுவுக்கு | ,, |
| குளிர்ச்சிக்கு | ,, |
| பச்சைவாதத்தெண்ணெய் | |
| கோழி | ,, |
| கர்பபசூலைக்கு | ,, |
| சிரவியாதிக்கு | ,, |
| இரத்தகாசத்திற்கு | ,, |
| குட்டத்திற்கு | ,, |
| ஈளைகாசத்திற்கு | ,, |
| சில்விடத்திற்கு | ,, |

## தேரையர் தைலவர்க்கத்தில் உள்ள தைலங்கள்

சுக்குத்தைலம்

இஞ்சித்தைலம்

மிளகுத்தைலம்

மிளகுத்தைலம் (வேறு)
சீரகத்தைலம்
உரோக சஞ்சீவித்தைலம்
தசமூலத்தைலம்
சரணாதித்தைலம்
நிர்குண்டித்தைலம்
இரதயோகநிர்குண்டித்தைலம்
சர்வதித்த நிர்குண்டித்தைலம்
சிறிய நிர்குண்டித்தைலம்
ஆரநாளத்தைலம்
சுத்தியாரநாளத்தைலம்
அசுவகந்தி பலா லாக்ஷாத்தைலம்
சிறிய கந்தி பலா லாக்ஷாத்தைலம்
பலா மடக்குத்தைலம்
சிற்றாமுட்டித்தைலம் (வேறு)
பிருங்காமலத்தைலம்
சிறிய ,,
சிறிய பிருங்காமலத்தைலம் (வேறு)
பிருங்க ராசத்தைலம்
மெருகு சமூலத்தைலம்
கதகாதித்தைலம்
சிறு குமரித்தைலம்
பெருங்குமரித்தைலம்
அமிர்த குமரித்தைலம்
கஜகர்ணித்தைலம்
கஜ கர்ணி பராகத்தைலம்
சிறிய கஜ கர்ணிகாத்தைலம்
பூதிகாத்தைலம்
சிறு பூதிகாத்தைலம்
அசனாமிர்த தைலம்
கதிராதித்தைலம்
மோதகவல்லித்தைலம்
மெருகுள்ளித்தைலம்
சட்டுவாங்கத்தைலம்

தித்த கோசாதகித்தைலம்
நாசிரோகநாசத்தைலம்
வச்சிர பீஜத்தைலம்
அமிர் தாமலகத்தைலம்
கீழ்வாய்நெல்லித்தைலம்
அரக்குத்தைலம்
அர்க்கக்ஷீராதிதைலம்
க்ஷீரதுருமாதித்தைலம்
சகதேவித்தைலம்
காகமாசித்தைலம்
பத்தூரத்தைலம்
மாஷத்தைலம்
கரப்பான்தைலம்
இரசத்தைலம்
பெரியவிஷ முஷ்டித்தைலம்
சிறிய ,, ,,
எளிய ,, ,,
விரணசஞ்சீவித்தைலம்
அஜபஞ்சகத்தைலம்
மெருகு பச்சைத்தைலம்
பீனசத்தைலம்
ஆதொண்டைத்தைலம்
சம்பீரத்தைலம்
சிறியசம்பத்தைலம்
சம்பீரசமாதித்தைலம்
கருஞ்செம்பத்தைலம்
சிலைத்தைலம்
கண்தைலம்
சிறுமாந்தத்தைலம்
வாதநாசத்தைலம்
சிறுசந்தனாதித்தைலம்
லகுசந்தனாதித்தைலம்
ஆலகாலவிஷத்தைலம்
சிற்சுடர்தைலம்

பீனசத்தைலம்
பத்திரசாரவிரணபூச்சுத்தைலம்
வலம்புரிக்காய்த்தைலம்
கிரகணிபூப்புடத்தைலம்
இலவங்காதித்தைலம்
கலிங்கத்தைலம்
கணத்தைலம்
மாந்தத்தைலம்
மாந்தத்தைலம் (வேறு)
குழந்தைமாந்த எண்ணெய் (வேறு)
குளிர்ச்சித்தைலம்
நலநாதரித்தத்தைலம்
கஸ்தூரித்தைலம்
ஊண்பூச்சுத்தைலம்
அஜசிருங்கித்தைலம்
கீடாரித்தைலம்
பாவனபஞ்சாங்குலத்தைலம்
ஊழலாற்றித்தைலம்
மேகாரித்தைலம்
மேகத்தெண்ணெய்
மயனத்தைலம்
சாரணைகள்ளித்தைலம்
சூலைகுடாரத்தைலம்
தூர்வைத்தைலம்
சவரித்தைலம்
கேசரஞ்சகத்தைலம்
மகாமேகராஜாங்கத்தைலம்

## பயன்கள்

| | |
|---|---|
| அண்டத்தைலம்: | முகவாதம் தீர்க்கும் |
| அரக்குத்தைலம்: | பீனசம், ஒருபக்கத் தலைவலி தீர்க்க |
| சித்திரமூலத்தைலம் | குளிர்ச்சி உண்டாக்க |

| | |
|---|---|
| சிரட்டைத்தைலம் | புண், புரை கால் ஆணி போக |
| சிரோப நிவாரணத்தைலம் | தலைவலி, பீனசம் ஒரு பக்கத் தலைவலி போக்க |
| சுக்குத் தைலம்: | ,, ,, |
| கந்தகச் சுடர்த் தைலம்: | சரும நோய்கள், பரங்கிப்புண் கிரந்தி, கழலைகள் தீர |
| கருடன் கிழங்குத் தைலம்: | காளாஞ்சிப்படை, சரும நோய்களைப் போக்க |
| கரப்பான் தைலம் | மண்டைக்கரப்பான், கரப்பான் தீர |
| கழற்சித்தைலம்: | வீக்கம், அண்டவாதம் தீர |
| கையான் தைலம் | குளிர்ச்சி உண்டாக்கி மயிர் வளர |
| குந்திரித்தைலம் | வாத நோய்கள் தீர்க்க |
| விடமுட்டித்தைலம் | ,, ,, |
| மத்தன் தைலம் | சரும நோய்கள், புண்கள் தீர |
| மலைவேம்புத்தைலம் | கருப்பை, கருப்பைதொடர்பான பிணிகள், சூதக நோய்கள் தீர |
| மாந்த எண்ணெய் | கணை, மாந்தம், வயிற்றுக் கோளாறுகள் தீர |
| மெருகுள்ளித்தைலம் | மலக்கட்டு அகல |
| மேனித்தைலம்: | நாக்குப்பூச்சி போன்றவை அகல |
| மேகநாதத்தைலம் | சருமப் பிணிகள் தீர |
| மூலகுடாரத்தைலம் | மூலரோகம் தீர |
| மிளகாய்த்தைலம் | ஒருபக்கத் தலைநோய் தீர |
| மயானத்தைலம்: | தசைபிடிப்பு, சுளுக்குதீர |
| நாசிரோகநாசத்தைலம்: | நாசிதொடர்பான நோய்கள் தீர |

| | |
|---|---|
| நொச்சித்தைலம்: | குளிர்ச்சி உண்டாக்க |
| பீனசத்தைலம் | பீனசம் தீர |
| சிவனார்வேம்புத்தைலம்: | சரும நோய்கள் |
| புங்கத்தைலம் | ,, |
| சீரகத்தைலம்: | குளிர்ச்சி உண்டாக |
| உளுந்துத்தைலம்: | வாதபிணிகள் தீர |
| வாதகேசரித்தைலம்: | ,, |
| வெள்ளை எண்ணெய் | பேதி ஏற்பட |
| விரண சஞ்சீவித்தைலம்: | சருமநோய்கள் தீர |
| கந்தகத்தைலம்: | சருமநோய்கள் தீர |
| பூநாகத்தைலம்: | மூளைக் கோளாறுகள் தீர |
| பிண்டத்தைலம் | வாதரோகங்கள் தீர |
| வாதநாராயணத்தைலம்: | ,, |
| திரிபலாத் தைலம்: | ,, |
| அறுகன் தைலம்: | சரும நோய்கள், விடப்புண் தீப்புண்கள் தீர |
| கிராம்புத்தைலம்: | பல் நோய்கள் தீர |

## தைலாதிகளின் குணம்

எள்ளின் நெய்யு மூக் கூட்டெனு நெய்யு ஆநெய்யும்
விள்ளு தைலாதி என வீறு நெய்யு உள்ளபடி
வாரந் தனக்கு இருநாள் வைத்தாடி நோய்கள் அதி
காரந் தனக்கிடமில் காண்.

**உரை:**

தூய எள்ளின் தைலம், முக்கூட்டு எண்ணெய், பசுவின் நெய், மருத்துவ முறைகளில் கூறப்பட்டுள்ள நல்ல தைலங்கள் ஆகிய இவைகளில் ஏதாவது ஒன்றை நான்கு நாட்களுக்கு ஒரு முறை குளித்துவர, நோய்களின் அதிகாரம் செல்லாது.

## அடுப்பின் பக்கத்தில் இருக்கவேண்டிய கருவிகள்

கொதியடக்க விசிறி நெய்த்தீயணைந்தலுக் கவ்வாய்
சட்டி கோரகை குட்பதி சுடு கற்பகம் வழித்தற் கிருவாய்க்கை
சுரிகை சுடர் பாதத்துட்டியதி கரித்த குந்தளை முழிக்கடத்
தேட்டினைப் பாண்டமமைத்த வன்றி.
பதி கினுக்கியாதி துணை கருவிகளு மனம் மணப்பாங்கிற்
றானே.

## கருவிகள்

கொதியை அடக்க விசிறி
தைலம் தீப்பிடித்தால் அணைக்கச் சட்டி
கற்கம் வழிக்கும் கூர்மையான இருபுறக்கத்தி
பதி விளக்கு
குந்தணை
அகப்பை
சட்டி
பாண்டம்
விளக்குமாறு

## தைலங்கள் வைக்கும் பாத்திரங்கள்

குடிநீர், தைலம், நெய் என்பன காய்ச்ச நவலோக பாத்திரங்கள் ஏற்றவை அல்ல. இரும்புப் பாத்திரத்தில் துருவின்றி கற்கம் சேர்ந்த தைலங்களைக் காய்ச்சினால் சோபை பிணிக்கு ஆகும். வாதம், பித்தம், ஐயம் இவைகளுக்கு முறையே வெண்கலம், தங்கம், செம்பு என்னுமிவைகளில் காய்ச்சலாம் என்று கூறுவார்கள். அவை மருந்து வைக்கும் கலங்கள் என்பது அன்றி. காய்ச்ச ஆகாது. எனவே மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்களே ஆகும்.

கருங்கல், இரும்பு, வெண்கலம் எனும் தனித்தனியே உரல்களும், ஒருபுறம் பலா முட்களைப்போல உள்ளதாகவும் ஒரு புறம் சமமாகவும் உள்ள இரும்பு உலக்கையும், இடித்த

சரக்குகளைக் கிளறி, எடுக்க ஒரு முனை கொழுவைப் போலவும், ஒருமுனை அகப்பையைப் போலவும் உள்ள கடப்பாறை சிறிய அளவில் செய்யவேண்டும். மர வயிரத்தினாலும் செய்யலாம். சரக்குகளையும், கல்வம் என்ற குழியம்மியில் திரவப் பொருட்களைக் கற்கமாக்கவும் திடசரக்குகளைப் பொடிசெய்யவும், அரைக்கவும் பயன்படும் ஆட்டு அம்மியானது பிசின் போன்ற சரக்குகளை மசியச் செய்யும். ஒரு பக்க குழவியம்மி உயர்ந்த மருந்து வகைகளை இழைப்பதற்குப் பயன்படும். இரு தலையுள்ள குழவியம்மி எல்லா மருந்துகளையும் கற்கமாக்க உதவும்.

## விறகு

உயர்ந்த தைலங்களுக்கு—ஆவாரை, சிற்றாமுட்டி
நெய்கள், தைலங்கள்—உசிலை, இலுப்பை
தடவிப் பூசும் தைலங்கள்—இலுப்பை, புளி

## தீ

அரணி, சிக்கி முக்கிக்கல், சூரியன், கற்பூரம், நித்தியாக்கினி என்ற ஐவகைகளில் ஏதேனும் ஒன்றிலிருந்து எடுக்கும் தீயாகும்.

## புரியணை

ஆண் தருப்பை, பச்சைக்கொடி, தேங்காய் நார், வாழை நார், பிரப்பங்கோரை, தாழை விழுது, ஆலம் விழுது வைக்கோல் மூங்கில், பிரம்பு, பூங்கொத்து என்பனவற்றால் செய்யலாம்.

## பாகம்

| | | |
|---|---|---|
| மிருது பாகம் | — | மெழுகு போலிருத்தல் |
| சிக்கு பாகம் | — | கையில் பிடித்தல் |
| கரகரப்புபாகம் | — | மணல் போல் உள்ளது |

## பங்கு

| | | |
|---|---|---|
| அறம் செய்தல் | — | 1 பங்கு |
| மருத்துவனுக்கு | — | ,, |
| நோயாளிக்கு | — | 2 பங்கு |

## அரைப்பு

உயர்ந்த தைலங்கள்—சிகைக்காய், ஈங்கைபட்டை-
விரண, வறட்சி—உசிலந்தூள், இலுப்பைப்புண்ணாக்கு
பசுவின்நெய்—பச்சைப்பயிறு
நல்லெண்ணெய்—மணிப்புங்கங்காய்

## நீராடும்விதி

விடியற்காலம்— ஆறு, பொய்கை
நாள்தோறும்
பாதங்களில் தைலம் தேய்க்க—கண்நோய் போகும்
உச்சிக்குத்தேய்க்க—அனைத்து பிணிகளும் போகும்

| | | | |
|---|---|---|---|
| சித்திரை வைகாசி | — | 5 | நாழிகை |
| ஆனி, ஆடி | — | 8 | ,, |
| ஆவணி, புரட்டாசி | — | 4 | ,, |
| ஐப்பசி. கார்த்திகை | | | |
| தை | — | 2 | ,, |
| மாசி, பங்குனி | — | 3 | ,, |

## பத்தியம்

அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, தூதுவளங்காய் மணத்தக்காளி வற்றல், சுண்டவற்றல், பொன்னாங்காணி சிறுகீரை, கருவேப்பிலை, துவரை, பயிறு, சிறுபயிறு மிளகு, சீரகம், வெந்தயம், கிராம்பு, லவங்கப்பட்டை, ஏலம் சாதிக்காய், சர்க்கரை, பசுநெய், கவுதாரி, காடை, உடும்பு என்பன. உண்ணத்தக்கது பிர்க்கு, புடல்.

வெப்பதேகிகளைத் தினவுக்கு ஆளாக்கும் கத்தரி மாவடு, நெல்லிக்காய், முயல், ஏரிமீன், அயிரை. தேளி வெப்பமுள்ள சுறா, வாலி. காட்டு எலி, வெள்ளாடு, முளைக் கீரை, பெருங்காயம், உப்பு வறுத்து கொட்டிவிட்டு, அச் சட்டியில் முறித்தமோர், உதிர முரணாகிய சிறுபுளி தாம் பூலம் என்னும் இவைகளையும் உண்ணலாம் என்று சிலர் கூறுவார்கள்.

நண்டு, மீன், கோழி, ஆடு, பன்றி, கடமான், வெள்ளைப்பூசணி, பறங்கி, மா, தெங்கு இவற்றின் காய்கள் கீரைத்தண்டு, சேம்பு, அரைக்கீரை, அகத்தி, பாகல், கத்தரி கொத்தவரை, கனிவகை, மாப்பண்டம், மொச்சை, எள் கொள், கடலை, உளுந்து, வெங்காயம், கடுகு, புளி, தயிர் பால், கசப்புத்திரவியம், புகையிலை, வெல்லம், குளிர்ந்தநீர் பகல் உறக்கம், வெய்யில், புணர்ச்சிமிகு காற்று என்பன கூடாது.

## இச்சாபத்தியம்

முள் பாகல், கத்திரி, கொத்தவரை, வெண்பூசணி அகத்தி, மந்தவகை உணவுகள், கடுகு, எள் என்பன விலக்க வேண்டும்.

## உப்புநீக்கம்

ரச தொடர்பான தைலங்களுக்கு உப்பு நீக்கவும் பத்தியம் முறிக்க உப்பு வறுத்துக்கூட்டி, பின் நாட்களில் ஓமப்பாலில் சுட்டு மூழ்கி, புளி சேர்த்து, பசு நெய் தேய்த்துக் குளிக்கவும்.

## ஆமணக்குஎண்ணெய்

ஆமணக்கு நெய்யால் நலமுண்டாம் யாவர்க்கும்
பூமணக்கு மேனி புரிகுழலே—வாய்மணக்கக்
கொள்ளில் வயிறுவிடும் கோரமுள்ள வாயு அறும்
உள்ளில் வரும் குன்மம் போம் ஓது.

வாயு, அக்னி மாந்தம், வயிற்றுவலி என்பணவற்றால் துன்பம் அடைவோர் ஆமணக்கு நெய்யைக் குடிக்க. பேதியாகி நலம் பெறுவார்கள்.

**இலுப்பை:**

“ கரப்பான் அடரும் கடி சிரங்குபுண்ணும்
உர இடுப்பு வலிஓடும்—கரப்பான்

பாகு மொழி மாதே—பலமுண்டாம் துர்ப்பலம்
ஏகு இலுப்பை நெய்க்கே"

உரை:

கரப்பான், சிரங்கு, புண், இடுப்புவலி போகும். பலம் உண்டாகும்.

**எள்:**

எள்மருந்தைக்கெடுக்கும்ஏறனலாம் திண்மை தரும்
உள்ளில் ஐயைச்சேர்க்கும் உதிரத்தைத் தள்ளும் இரு
கண்ணுக்கு ஒளி கொடுக்கும் காசமுண்டாம் பித்த
பணைணுக்கு இடர் புரியும் பார். [மூமாம்

உரை;

மருந்தை முறிக்கும், வெம்மை, காசம், கமம், கபம் பித்தத்தை அதிகரிக்கும். கண்ணுக்கு ஒளியையும், வலுவையும் தரும். குரல் ஒலிக்குத் துன்பம் தரும்.

" புத்தி நயனக் குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகங்
சத்துவங்காந்தி தனி இளமை—மெத்த உண்டாம்
கண்ணோய் செவி நோய் கபால அழல் காச நோய்
புண்ணாய்நோ போம் எண்ணெயால் போற்று.

## தேங்காய் எண்ணெய்

" தேங்காய் நெய்யதனால் தீயால் வருபுண்போம்
பாங்காகக் கூந்தல் படர்ந்தேறு—நீங்காத
பல்லடியின் நோயும் படர்தாமரை சிரங்கும்
அல்லலறப்போம் என்றறி"

உரை:

தீப்புண், பல்நோய், படர்தாமரை, சிரங்கு நீங்கும். தலைமயிர் நன்கு வளரும்.

## தைலமுழுக்கு

எள்ளினெய்யும் முக்கூட்டுடனு நெய்யும் ஆனெய்யும்
விள்ளு வதலாதி என விறுநெய்யும்—உள்ளபடி
வாரம் தனக்கிருநாள் வைத்தாடி நோய்கள் அதி
காரம் தனக்கிடமில் காண.

உரை: எண்ணெய், முக்கூட்டுநெய், பசுநெய் வாரம் இருநாள் அளிக்க நோய்கள் வாராது.

## பஞ்சகற்பம்

கஸ்தூரிமஞ்சள், மிளகு, வேம்பின் வித்து
கடுக்காய்த்தோல், நெல்லிப்பருப்பு என்னும் இவை
கூட்டி, காராம் பசுவின் பால் விட்டரைத்து [களைக்
கொதிக்கவிட்டு வைத்த கூட்டு பஞ்ச கற்பம்
எனப்படும்

தேய்க்கத்தலையில் சிரவாயும் பீனசம் போம்
வாய்க்குள் இடபல்வீறும் வச்சிரமாம்—சாய்க்கண்
குருடு பில்லம் காசம்போம் குஞ்சி நரைப்பித்தக்
கிறுகிறுப்பு கிட்டாது கேள்...

உரை: தலையில் உள்ளவாயு, பீனசம் போகும். பல் லீறு உறுதியாகும். சாய்கண் குருடு, பில்லம், காசம் போகும். நரை, கிறுகிறுப்பு வராது.

## எண்ணெய் நீராடததகாதவர்கள்

ஐயநோயாளிகள், அசீரணமுடையவர்கள், தோடம் போக்குவதற்காக வாந்தி, பேதி, மூத்திரப்பை தூய்மையடைய பீச்சுக்கொண்டவர்களுக்குக் கூடாது.

# சொல்லடைவு

## செய்முறை

### அ

அதிமதுரம்: 2, 10, 11, 12, 19, 22, 39, 48, 49, 50, 53, 54, 55, 56, 57, 58, 60, 62, 66, 68, 70, 73, 74, 76, 100.

அவுரி: 65, 90, 94, 99,

அரக்கு: 81,

அவரை: 10

அரிசித் திப்பிலி: 12, 93

அரத்தை: 15, 19, 44, 47, 48, 57

அத்தி: 22, 77, 88

அவுரி: 1, 23, 26, 38, 58, 59, 65, 90

அழிஞ்சில்: 14, 35, 59, 92

அக்ரகாரம்: 89

அசுவகந்தி: 88

அபின்: 16, 32, 87

அதிவிடையம்: 1, 12, 22, 45, 78

அமுரிவேர்: 1

அமிர்தவல்லி: 73

அல்லி: 69

அகில்: 47, 48, 50, 56, 60, 62, 66

அரளி: 16, 58

அசோகப்பூ: 50

அரிதாரம்: 75, 1

அகத்தி: 7, 11, 19, 27, 34

அரசு: 14

## ஆ

ஆடுதின்னாப்பாளை: 14, 20, 26, 92, 97, 102, 103
ஆயில்பட்டை: 12
ஆமணக்கு: 9, 15, 20, 46, 63, 76, 93, 94
ஆவாரை: 14, 29, 68
ஆளிசம் விதை: 29
ஆலம்பட்டை: 14
ஆகாசகருடன்: 14, 71
ஆல்: 55, 69
ஆதண்டை: 44, 53, 59, 65
ஆனை என்பு: 34
ஆடாதோடை: 20, 22, 65, 66

## இ

இஞ்சி: 33, 96
இந்துப்பு: 9, 23, 47, 48, 73, 86, 93, 94, 101, 102, 103
இளநீர்: 1, 12, 13, 21, 22, 23, 49, 56, 60, 62, 68, 69, 91
இலவங்கம்: 7, 56, 68, 70. 73, 74, 80
இண்டு: 23, 37 79. 94
இலவங்கப்பத்திரி: 11, 74, 80
இலந்தை: 72, 80
இலுப்பை: 40, 70, 74, 77
இருவேலி: 45, 52, 56, 60, 69
இரசம்: 36, 46. 67
இராமபாணம்: 23
இரஸ்தாளிப்பழம்: 13

**உ**

உத்தாமணி: 148
உள்ளி: 9
உள்ளி: 9
உசிலை: 80
உளுந்து: 59

**ஊ**

ஊத்தெண்ணெய்: 24, 25, 26, 91
ஊசிகாந்தம்: 28
ஊழலாற்றி: 23

**எ**

எருக்கு; 2, 28. 43, 59, 65 , 83, 84, 98
எலுமிச்சை: 17, 18. 19, 20. 24, 31, 33, 43, 46, 51, 53, 56, 62, 67, 68, 101
எண்ணெய்: 2, 17, 21, 24, 30, 31, 38, 45, 47, 55, 56, 58, 66, 72, 74, 77, 80, 82, 86, 87, 91, 92, 93, 94, 101, 105
எட்டி: 14, 34, 58

**ஏ**

ஏலம்: 1, 6, 11, 12, 22, 23, 31, 37, 38, 39, 50, 53, 56, 60, 61, 62, 66, 68, 70, 73, 75, 76, 78, 80, 84, 101
ஏரண்டம்: 98

**ஒ**

ஒரிதழ் தாமரை: 49

**ஓ**

ஓமம்: 12, 14, 25, 35, 47, 48, 61, 76, 89, 93

க

கடுக்காய்: 2, 3, 6, 12, 18, 20, 21, 25, 26, 29, 34, 37, 41, 48, 49, 56, 57, 62, 66, 69, 72, 73, 76, 77, 78, 80, 86, 90, 96

கற்றாழை: 35, 85, 102

கற்பூரம்: 11, 55, 58, 60, 62

கள்ளி: 39, 43, 44, 103, 105

கருஞ்சீரகம்: 6, 7, 8, 16, 18, 19, 28, 41, 42, 73, 74, 75, 78, 80, 88, 96, 100, 104

கடுகுரோகணி: 2, 3, 16, 18, 19, 20, 21, 28, 37, 40, 56, 60, 66, 68, 70, 71, 80, 88, 90, 96

கந்தகம்: 36, 45, 52, 88, 90

கழற்சி: 19, 21, 71, 79, 88

கண்டங்கத்திரி: 43, 97

கருநொச்சி: 6, 8, 14, 17

கடுகு: 5, 8, 9, 34, 83, 93, 105

கா

கார்போக அரிசி: 34, 36, 53, 73, 78

காட்டு சீரகம்: 88

காக்கரட்டான்: 151

காந்தம்: 88

காசுகட்டி: 16, 78

காஞ்சோரை: 79

கி

கிராம்பு: 8, 11, 33, 37, 50, 51, 53, 57, 60, 62, 66, 68, 78, 80, 81, 84, 100, 101

கிளுவை: 40

கீ

கீழாநெல்லி: 26, 72, 80

## கு

குங்குமப்பூ: 11, 55, 56, 69, 101
குன்றி: 49, 50, 58, 74, 83
குளிர்ச்சி எண்ணெய்: 31
குப்பைமேனி: 26, 81, 92
கும்மட்டி: 28, 39, 50, 101
குங்கிலியம்: 2, 17, 44, 45, 47, 48
குறுந்தொட்டி: 2, 56, 57, 69
குமரி: 62
குங்குமம்: 60

## கொ

கொத்தமல்லி: 10, 20, 22, 66, 78, 102
கொடுவேலி: 12, 16, 26, 39, 71, 93
கொல்லங்கோவை; 16, 27
கொன்றை: 77

## கோ

கோட்டம், 2, 3, 11, 12, 19, 26, 30, 37, 45, 48, 53, 55, 56, 58, 60, 62, 68, 70, 73, 78
கோவை: 31, 63
கோரோசனை: 11, 24, 58, 82

## கை

கையான்: 21, 33, 53, 55, 62, 92, 103

## ச

சடாமாஞ்சில்: 45, 47, 55, 56, 57, 73, 89
சங்கங்குப்பி: 14, 74, 88

சந்தனம்: 30, 33, 45, 47, 50, 52, 55, 56, 69, 73, 74, 78 80, 81, 100

சர்க்கரை: 84, 85, 91

சதாவரி: 50

சங்கம்வேர்; 2, 55, 75

சதகுப்பை: 19, 44, 46, 47, 54, 65. 66, 68, 70, 73, 80

சதுரக்கள்ளி: 30, 159

சா

சாதிக்காய்: 1, 6, 8, 11, 25, 33, 41, 45, 52, 56, 68, 73, 74, 75, 76, 78, 80, 84, 90, 96, 101

சாதிப்பத்திரி: 8, 11, 25, 78, 96

சாரணை: 18, 26, 39, 43, 44, 46, 75, 76, 81

சாத்திரபேதி: 50, 66, 68, 78

சி

சிறுநாகப்பூ: 2, 11, 45, 50. 56, 57, 62, 66, 68, 70, 100

சிற்றரத்தை: 37, 45, 89, 98

ரிறுகீரை: 15, 49, 53, 66, 69, 80

சிறுமூலம்: 13, 45. 47, 93

சிற்றாமுட்டி: 44. 66, 68, 80, 81. 93

சித்திரமூலம்: 52, 65, 87, 94, 93

சிற்றாமணக்கு: 2, 8. 13, 20, 40, 41, 71, 85, 86, 88 102

சிறுசெருப்படி: 14, 72, 86

சிறுதேக்கு: 12, 45, 50, 62, 70

சிறுகுஞ்சா: 27, 47

சீ

சீரகம்: 8, 11, 13, 14, 16, 18, 23, 25, 31, 34, 39, 41, 42, 47, 50, 54, 61, 66, 74, 77, 84, 86, 93, 94, 96

சினி; 50
சீதேவி: 50, 69, 80

சு

சுக்கு: 3, 6, 12, 14, 15, 22, 34, 35, 37, 44,51, 57, 61, 70, 84, 89, 98, 101, 102

சூ

சூரியபுடம்: 21, 41, 44, 75, 77: 79, 85, 91, 99

செ

செவ்வியம்: 13, 31, 47, 50, 66, 93, 98
செங்கதாரி: 6, 18, 88, 99
செவ்வல்லி: 23, 50, 68, 78, 82, 90
செண்பகம்: 6, 12, 23, 39, 50, 52, 53, 55, 60, 66, 68, 70, 75, 76, 78, 80, 82
செங்கழுநீர்: 2, 3, 11, 12, 49, 51, 54, 56, 58, 60, 66,74, 82

சே

சேராங்கொட்டை: 2, 14, 26, 35, 36, 90

த

தழுதாழை: 98
தண்ணீர்விட்டான்: 39, 55, 56, 60, 66, 70
தகரை: 13, 19, 21, 52, 53, 60, 68, 100, 101
தக்கோலம்: 60, 68

தா

தராய்: 20
தான்றிக்காய்: 2, 49, 57
தாளிசபத்திரி: 11, 41, 102
தாளகம்: 36

தா

தாமரை: 55, 62
தாமரைவளையும்: 49, 54, 56, 60, 62, 66, 69, 70
தானியபுடம்: 90

தி

திரிகடுகு: 45, 61, 64, 93, 97, 104
திரிபலை: 45
திப்பிலி: 3, 8, 12, 16, 37, 62, 64, 70, 74, 75, 84, 89, 98 101
திப்பிலிமூலம்: 8, 45, 70, 82, 98

து

துத்தம்: 1, 16, 36, 46
துருசு: 36, 78
தும்பை: 6

தூ

தூதுவளை: 26, 43, 72, 74, 104

தே

தேன்: 57, 96
தேங்காய்: 20, 45, 67, 71, 91, 94, 101
தேவதாரம்: 12, 33, 45, 47, 55, 57, 60, 65, 66, 68,73,82,
தேத்தான்: 6, 26, 74, 75

தை

தைவேளை: 9, 10, 15, 16, 48, 62, 78, 81, 82, 86, 87, 97, 103, 22

## ந

நல்லெண்ணெய்: 2, 4, 10, 28, 30, 31, 32, 33, 36, 38, 44, 46, 49, 52, 53, 55, 57, 58, 66, 67, 71, 96, 98, 99, 100, 102, 104

நன்னாரி: 13, 52, 56, 60, 67, 69, 70, 80

நத்தைசூரி: 26, 65

## நா

நாக்குப்பூச்சி: 119, 163

நாய்வேளை: 26, 43, 84

நாபி: 36, 58

நாயுருவி: 70, 71, 97

நாகப்பூ: 100, 192

## நி

நிலவாரை: 9, 20, 25, 36,

நிலப்பனை: 7, 14, 69, 96

## நீ

நீர்ப்பூலா: 50, 69, 79

## நு

நுணா: 43, 75, 76

## நெ

நெல்லி: 1, 10, 41, 43, 50, 55, 62, 67, 68, 84, 92, 97

நெருஞ்சில்: 20

நெய்: 11, 13, 25, 49, 50, 54, 71, 74, 85, 100

## நே

நேர்வாளம்: 36, 71

நொ

நொச்சி: 22, 43, 47, 48, 64, 72, 87, 97

ப

பசுநெய்: 7, 22, 23, 37, 39, 41, 60, 65, 70, 73, 74, 97, 100, 104, 105, 143, 34

பசும்பால்: 17, 18, 33, 41, 44, 45, 49, 50, 51, 52, 53, 54, 55, 58, 67, 69, 73, 84, 89

பரங்கிப்பட்டை: 7, 14, 25, 30, 34, 35

பச்சைக்கற்பூரம்: 1, 11, 50, 56, 69

பச்சிலை: 33, 49, 57, 70

பற்பாடகம்: 11, 78

பழம்பாசி: 13

பா

பாகல்: 47, 76

பால்: 34

பி

பிரமி: 20, 21, 35, 72

பீ

பீர்க்கு: 119

பு

புளியாரை: 90, 102

புங்கு: 2, 14, 29

புனுகு: 11, 33, 56, 69

## பூ

பூண்டு: 6, 14, 19, 24, 35, 40, 41, 44, 54, 57, 65, 71, 76, 79, 80, 81, 90, 92, 93, 94, 97, 98, 105
பூவரசு: 20, 32, 88, 105
பூத்கரப்பான்பட்டை: 18, 40, 99
பூலா: 33, 68
பூநாகம்: 78, 105
பூசணி: 49, 50

## பெ

பெருங்காயம்: 3, 12, 26, 47, 58, 59, 61, 65, 73, 93
பெருமரம்: 71, 88
பெருங்குரும்பை: 62

## பே

பேய்ப்பீர்க்கன்: 61, 75, 99, 104
பேராமுட்டி: 19, 21, 66, 68, 72, 80, 93
பேரீச்சம்பழம்: 33, 54, 78
பேயன்: 41, 49, 50

## பொ

பொன்னாங்காணி: 12, 42, 49, 50, 53, 66, 80
பொடுதலை: 42, 72, 76, 79
பொன்முசுட்டை: 16, 68

## ம

மஞ்சள்: 6, 12, 47, 51, 52, 57, 62, 66, 75, 92, 102
மணத்தக்காளி: 3, 8, 9, 19, 23, 30

மா

மாவிலிங்கம்: 2, 31, 65, 87, 88, 93

மி

மிளகு: 2, 6, 10, 16, 17, 20, 22, 23, 28, 30, 31, 32, 35, 38, 41, 42, 52, 55, 57, 58, 65, 86, 94, 103, 105

மு

முடக்கொத்தன்: 6, 21, 59, 63, 73, 79, 80, 95

முருங்கை: 40, 43, 72, 85, 89, 93, 104

முத்தக்காசு: 6, 13, 22, 56, 60, 69, 70, 74, 82

முசுமுசுக்கை: 33, 49, 50, 51, 53, 75

மூ

மூக்கரட்டை; 43, 95

வ

வசம்பு: 2, 6, 14, 18, 24, 28, 38, 40, 43, 44, 55, 57, 65, 66, 72, 74, 75, 76, 79, 81, 87, 92, 93, 97, 98, 103, 105

வா

வாய்விளங்கம்: 70, 78

வாழை: 41, 55

வி

விலாமிச்சை: 2, 11, 29, 31, 33, 45, 54, 55, 66, 69, 82

விளக்கெண்ணெய்: 3, 4, 5, 6, 18, 21, 24, 26, 28, 37, 39, 42, 50, 63, 66, 72, 76, 77, 79, 84, 85, 89, 91, 94, 97, 99, 101

விழுது: 35

### வெ

வெட்டிவேர்: 2, 11, 33, 55, 66, 69

வெந்தயம்: 18, 72

வெண்நொச்சி: 14, 65

வெங்காயம்: 2, 3, 5, 7, 8, 14, 18, 20, 21, 24, 25, 26, 38, 40, 52, 63, 77, 79, 84, 85, 92, 95, 96, 101

### வே

வேம்பாடம்பட்டை: 78, 99

வேப்பெண்ணெய்: 4, 26, 34, 46, 59, 65, 66, 92, 100

வேலிப்பருத்தி: 42, 49, 61, 75, 76, 83, 84

வேளைவேர்: 69, 105

## பிணிகள்

### அ

அக்கினி மந்தம்: 101

அந்தரவாயு: 94

அழிகிரந்தி: 87

அரையாப்பு: 10, 87

அரணைக்கடி: 29

அரிப்பு: 97

அண்டவாதம்: 28, 89, 94

அரிகிரந்தி: 89

அண்டவாயு: 125

அல்குல்புற்று: 29

அத்திசுரம்: 19

### ஆ

ஆமையடி: 29

ஆமசுரம்: 20

### இ

இரைப்பு: 104

இளைப்பு: 11, 62

இலிங்கப்புற்று: 89

இருமல்: 58, 64, 69, 85

இமைத்துடிப்பு: 2
இலைமேல்புண்: 50
இரத்தபீனிசம்: 95
இசிவு: 28
இளைப்பு: 58, 85
இடிசூலை: 50
இரத்தரோகம்: 54
இரத்தக்கழிச்சல்: 91
இரத்ததிரட்சி: 27, 28
இரத்தபித்தம்: 43, 50

ஈ

ஈளை: 58, 64, 69, 83

உ

உதிரக்கட்டி: 101
உள்வெக்கை: 110
உன்மாதம்: 100
உட்குத்து: 99
உடல்வெளுப்பு: 89
உச்சிப்பிளவை: 29
உச்சந்தலை: 173
உஷ்ணம்: 52, 107
உளைப்பு: 100
உடம்பெரிச்சல்: 13, 58
உந்திப்புண்: 50

ஊ

ஊதுமாந்தம்: 38

எ

எழுமாந்தம்: 77
என்புசுரம்: 83
எரிவு: 4
எரிகரப்பான்: 3

ஒ

ஒருதலைவலி: 58, 37

ஓ

ஓடுகரப்பான்: 44

க

கணை: 6, 7, 13, 15, 37, 63, 79, 86

கருங்கிரந்தி: 89
கண்டமாலை: 16, 29, 57
கரப்பான்: 8, 10, 17, 29, 39, 77, 86, 89, 103
கடிகள்: 36
கன்னக்கிரந்தி: 24
கண்: 58, 89, 97
கர்ப்பம்: 10 22
கழல்வாதம்: 3
கணம்: 22, 74
கன்னப்புற்று: 16
கல்லடைப்பு: 63
கருங்கரப்பான்: 87
கருப்பு: 59, 5
கபாலகரப்பான்: 121
கபால வியாதி: 64
கடிவிஷம்: 56, 100
கண்நோவு: 2
கழிச்சல்: 12, 13
கண் புகைச்சல்: 21
கன்ன விப்புருதி: 25
கருப்பை: 28

கா

காது இரைச்சல்: 33, 93
காசம்: 33, 62, 64
காதடைப்பு: 58
காதுவலி: 102

கி

கிறுகிறுப்பு: 50
கிராணி: 12, 13, 64
கிரந்தி: 5, 7, 10, 36, 39, 40 74, 77, 86, 89
கிரிகை: 53

கீ

கீழ்நாக்குப்புற்று: 50

கு

குடல் புரட்டல்: 71, 72
குடல்வாதம்: 71, 94
குன்மம்: 64, 101

கை

கைகால் முடக்கம்: 100

கோ

கோழை கரப்பான்: 3

ச

சளிக்கணம்: 16
சன்னி: 43, 46, 59, 65, 83, 84, 100
சயம்: 58, 62
சலவெட்டை: 125
சத்தி: 128
சகல குட்டம்: 100

சி

சிலந்தி: 103
சிலந்திவாழை: 29
சிலந்திக்கடி: 29
சிரங்கு: 29

சீ

சீழ்கரப்பான்: 3

சு

சுரோணித வாதம்: 48
சுரம்: 100

சூ

சூசிகா வாதம்: 54
சூலை: 5, 29, 34, 89, 94
சூதகவாயு: 4
சூல்: 105
சூதகப்புற்று: 41

செ

செவ்வாப்பு: 87, 103
செங்கரப்பான்: 87
செவிநோய்: 144
செவிடு: 103

சொ

சொரி: 29, 104

தா

த்டசிலந்தி: 50
தலைநோவு: 87
தலைவலி: 32, 57, 67

சோ

சோபை: 168
சோகை: 58, 164
சோமரோகம்: 89

தி

தினவு: 54, 89

தீ

தீப்புண்: 85

து

துடிசூலை: 50

தொ

தொடைவாழை: 87
தொடைப்புற்று: 50

தோ

தோடம்: 86, 105

ந

நரைமயிர்: 30

நா

நாசியில் இரத்தம்: 45
நாக்குக் கரப்பான்: 3

நி

நிதத்தில் குத்து: 4

நீ

நீரடைப்பு: 69
நீராமை: 94
நீர்க்கரப்பான்: 3

நெ

நெஞ்சு நோவு: 76, 77
நெஞ்சு உலர்தல்: 94
நெஞ்சுவலி: 47
நெஞ்சு வரட்சி: 100

ப

பவுத்திரம்: 29, 87, 89, 94
பக்கவாதம்: 48
படைகரப்பான்: 3
பழையசிலந்தி: 50
படுசிரங்கு: 50
பட்சிதோடம்: 65

பா

பாரிசவாதம்: 46

பி

பிரமியம்: 12, 69
பிரமூலம்: 169
பித்தவாயு: 102
பிலிகம்: 94
பிடரிவாதம்: 54
பித்தகணை: 112

பித்தலிகாரம்: 51
பித்தம்: 30, 33, 50
பித்தவெட்டை: 13

பீ

பீனிசம்: 16, 32, 45, 66, 67, 83, 86, 91, 92, 99

பு

புரை: 16, 79
புண்: 9, 16, 27, 79
புண்கிரந்தி: 89

பெ

பெருவயிறு: 94, 103, 104

பை

பைத்தியம்: 33, 48, 54, 56, 67

பொ

பொருமல்: 38

ம

மண்டைகரப்பான்: 3, 9, 20, 43, 44
மலட்டுப்புழு: 23
மஞ்சள் புழு: 58
மண்டைப்பிணி: 65
மகப்பேறு: 38
மண்டைவியாதி: 44
மண்டையிடி: 54

மா

மாந்தம்: 19, 22, 37, 75, 77, 79, 81, 86

## மு

முலைக்குத்து: 87
முழங்கால் கரப்பான்: 3
முதுகுவாழை: 29
முகவெளுப்பு: 85

## மூ

மூலச்சூடு: 18
மூட்டுவாழை: 29
மூலக்கடுப்பு: 102
மூத்திரதோடம்: 94
மூடுகரப்பான்: 3
மூலம்: 33, 71

## மே

மேகப்பிடிப்பு: 90
மேகக்கடுப்பு: 152
மேல்மூச்சு: 100
மேகம்: 10, 14. 17, 25, 29, 30, 32, 36, 83, 85, 86, 89. 94, 96
மேல்வாதம்: 158
மேகவெட்டை: 34, 67, 96
மேகச்சூடு: 18, 25

## வ

வண்டுகடி: 99
வயிறு பொருமல்: 80
வரகணம்: 22

## வெ

வெண்குட்டம்; 91
வெடிசூலை: 29, 89
வெட்டை: 84

## கோவில் விளக்குகள்

நெய், தாரை, நூல்திரி மிகவும் நல்லது. எள், இலுப்பை தேங்காய் எண்ணெய் நூல் திரி நல்லது. வேம்பு எண்ணெய் தீது.

திருப்புவனி, எண்ணாயிரம், திருமுக்கூடல் என்னும் இடங்களில் கோயில்கள் பல்கலைக்கழகங்களாகத் திகழ்ந்தன ஆடை, எண்ணெய் முதலியன கொடுக்கப்பட்டது. (பக்.140 பக். 193—ஆலயங்களும் நஜன்—பிரதீபா பிரசுரம் 1973)

## சங்க இலக்கியத்தில் எண்ணெய்கள்

"சாந்து உளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி
அமரா முகத்தள் ஆகி" —கபிலர்

உரை: மணமுள்ள எண்ணெய்தடவி, கள ஒழுக்கத்தைக் கைகொள்ளாதவளாகிய தலைவி.

"கணங்குழை மகளிர்
கையுறையாக நெய் பெய்து மாட்டிய"
—பாலை பாடிய பெருங்கடுங்கோ

உரை: குழைகளை உடைய பெண்கள் நெய் விட்டேற்றிய விளக்குகளை கையில் வைத்து.

"சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துரும்புறு பசுங்காய் போழொடு கறிகலந்து"
—பெரும்பாணாற்றுப்படை

உரை: கொம்மட்டி மாதுளையின் பசியகாய் மிளகுப் பொடி கலக்கப்பட்டு கருவேப்பிலையின் இலை, பசுவெண்ணெய் சேர்த்து மாங்காயைப் போட்ட உணவு.

நெய் பட க்கரிந்த திண் போர்க்கதவின்
—மதுரைக்காஞ்சி

உரை: எண்ணெய் பலதடவை இடுதலாம் கருமையான வைரம் உள்ள கதவுகளைக்கொண்ட அரண்மனை.

"ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை"
"யவனர் இயற்றிய வினை மாண் பாவை
கையேற்றைகல் நிறைய நெய் சொரிந்து"
—நெடுநல்வாடை

உரை: கடுகுடன் சேர்ந்துள்ள எண்ணெயைக் கலந்து பூசி, யவன நாட்டு விளக்குகளில் நிறைய நெய்விட்டு விளக்கேற்றி,

## தன்வந்திரி தைலம் 500 பட்டியலில் உள்ள தைலங்கள்

| | |
|---|---|
| மகாசந்தனாதித்தைலம் | சன்னிக்கு மேல்பூச்சுத் தைலம் |
| சிறு ,, | வாதுமைக்காட்டித்தைம் |
| வெட்டிவேர்த் ,, | சிற்றாமுட்டித் ,, |
| கருமுள்ளித் ,, | இலவங்கப்பட்டைத்தைலம் |
| கடுக்காய்த் ,, | நன்னாரித் ,, |
| மகாசாட்டரணைத்தைலம் | மாம்பட்டைத் ,, |
| சுக்குத் ,, | கையாந்தகரைத் ,, |
| நெல்லிக்காய்த் ,, | மருதம்பட்டைத் ,, |
| அறுகன் ,, | கொழிஞ்சிப்பட்டைத்தைலம் |
| மிளகுத் ,, | அழிஞ்சில் ,, |
| கருஞ்சீரகத் ,, | பஞ்சமூலி ,, |
| கார்போக அரிசித் தைலம் | பஞ்சபூசணத் ,, |
| விஷமுட்டித் ,, | பித்தம்தீர ,, |
| கீழாநெல்லித் ,, | சிலேத்துமம்96க்கும்தைலம் |
| ஏலக்காய்த் ,, | சோகை காமாலைக்கு ,, |
| ஆவாரைப்பஞ்சாங்கதைலம் | கண்நோய்க்கு ,, |
| துவரங்குறிச்சித் ,, | சொரிசிறங்குக்கு ,, |
| வேலம்பட்டைத் ,, | மேகம் தீர ,, |
| நொச்சித் ,, | சகலவாயுவுக்கு ,, |
| மலைவேம்புத் ,, | பரிமளகந்தித் ,, |
| சூரிவித்துத்தைலம் | சுகந்தவாரித் ,, |
| வாதரோகத் ,, | மன்மதலீலைத் ,, |
| கிராணிக்குத் ,, | |

| | |
|---|---|
| திமிர்படைக்குத் ,, | சீதாதேவித்தைலம் |
| சூசிகாவாயுவுக்குத்தைலம் | கோரைக்கிழங்குத்தைலம் |
| சீரகத் ,, | மகாகீழாநெல்லித் ,, |
| கிச்சிலித் ,, | மகாதேவரஞ்சித் ,, |
| எலும்பிச்சம்பழத் ,, | வாலுவைத் ,, |
| கீழ்க்காய் நெல்லித்தைலம் | செந்நாவல்பட்டைத்தைலம் |
| கோரோசனைத் ,, | சர்வாங்கராஜயோக ,, |
| கஸ்தூரித் ,, | மகாபூர்வஞானத்தைலம் |
| குங்குமப்பூத் ,, | பஞ்சமூலித் ,, |
| கற்பூரத் ,, | மகாநந்தித் ,, |
| அண்டவாதத் ,, | சந்நி 13க்கும் ,, |
| காமாலைத் ,, | நேத்திரவாயு, மண்டை இடிக்குத்தைலம் |
| ஏகமூலித் ,, | நேத்திராஞ்சனத் ,, |
| புஷ்பாணத் ,, | சகலபிணிதீரத் ,, |
| அகில்கட்டைத் ,, | மகிழம்பட்டைத் ,, |
| காஞ்சருசத் ,, | மகாவில்வாதித் ,, |
| நிலக்கடம்புத் ,, | பொன்னாங்காணித்தைலம் |
| நுணாப்பட்டைத்தைலம் | ஓமத்தைலம் |
| மனோரஞ்சிதத் ,, | |

## மீன் எண்ணெய்

இது சிலவகையான மீன்களிலிருந்து பெறப்படும் எண்ணெயாகும். காட், ஆலிபட் என்ற வகையான மீன் வகைகளிலிருந்து மேனாடுகளிலும், இந்தியக் கடல்களிலிருந்து சுறா வகை மீன் மூலமும் அடைய முடியும். கொழுப்புச் சத்துக்கள், வைட்டமின்கள் என்பன உள்ளன. குறிப்பாக ஏ. டி. வைட்டமின்கள் உள்ளன, ஊட்டக்குறைவு நோய்கள் வராமல் தடுக்கின்றன. காட்மீன் எண்ணெய் இளமஞ்சள் நிறமாகவும், நீர்த்ததாகவும் இருக்கும். மீன்நெய் வெண்ணெய்க்கு அடுத்தபடியாக எளிதில் சீரணமாகும். ஆலிபட் மீன் எண்ணெயில், காட்மீனைவிட வைட்டமின் சத்துகள் அதிகம் உள்ளன. இந்தியாவில் சென்ற முப்பது ஆண்டுகளாக மீன் எண்ணெய் பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

—கலைக்களஞ்சியம்—பக். 374